# ஞானச்சுடர்



ஆடி

2012



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



# குறள்வழி

கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

**பொருள் :** நன்மை செய்த ஒருவர் கொலைபோன்ற கொடுமைகளைச் செய்தாராயினும், அவர் செய்த ஒரு உபகாரத்தை நினைத்துத் தீமைகளை மறக்க வேண்டும் (109)

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் -உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

**பொருள் :** எவ்வகை நன்மைகளை அழித்தவர்க்கும் பாவத்தினின்றும் நீங்கும் வழி உண்டு. ஒருவன் செய்த உபகாரத்தை மறந்தவர்களுக்கு உய்யும் வழி இல்லை. (110)

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

### தியானமாலை
### கலிவிருத்தம்


நேச யோகத்தர் நெறியில் லாதவர்
பாச மியல்பாய்ப் பற்றாத பான்மையர்
பேச வொண்ணாப் பெருமையர் பேரிலர்
தாசன் யோகன் தலைவன் இவரே 22

நையும் மனிதர்தம் நானெனு மகந்தையைக்
கொய்யுஞ் சூலப் படையை யுடைய
கையு முடையவன் காலற்குக் காலன்
தெய்வ மிவனென்று சேர்குது மிவன்பதம் 23

நொந்தவர் தம்மை நொடியினிற் காக்கும்
பைந்தொடி உமையாள் பங்கன் துங்கன்
கந்துக மதகரிப் போர்வையன் கறைசேர்
கண்டனண் டத்தவர் காணாக் கடவுளே 24

அந்தியுஞ் சந்தியும் அன்பினி லவனைச்
சிந்தையி னினையச் சிறப்புடை யவராய்ப்
பந்தம் யாவும் பற்றாது ஒழித்து
நந்தா வின்ப நாடடை வாரே 25

# ஞானச்சுடர்



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

## வெளியீடு- 2 சுடர்- 175

## பொருளடக்கம்

**2012** **ஆடி**


| | | |
|---|---|---|
| முருகா... முருகா... | கு. சோமசுந்தரம் | 01 - 02 |
| மெய்ஞானத்தை... | பு. கதிரித்தம்பி | 03- 04 |
| திருவண்டப்பகுதி | சு. அருளம்பலவனார் | 05 -06 |
| முதல் வணக்கம் | காரை எம்.பி. அருளானந்தம் | 07- 08 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 09- 10 |
| பெரியவர் வினாவும்... | சிவ. சண்முகவடிவேல் | 11- 12 |
| இந்து சமய.... | கு. கோபிராஜ் | 13- 14 |
| தேவாரம் வேதசாரம் | இ. ஸ்ரீதரன் | 15- 16 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | - | 17- 18 |
| சிறுவர் கதைகள் | - | 19 -20 |
| சமயமும் மனித.... | திருமதி ப. நடராஜா | 21 -23 |
| பெரியபுராணத்தில்.... | செல்வி S. ஜடா | 24 -25 |
| படங்கள் தரும் பதிவுகள் | - | 26 -27 |
| மரணம்- அப்புறம் | ஜக்கி வாசுதேவ் | 28 -29 |
| கோமாதா | க. சிவசங்கரநாதன் | -30 |
| சுவாமி விவேகானந்தரது.... | ஆ. மகேசு | 31 -33 |
| புத்துயிர்ப்பு ஊட்டப்பட்ட... | எஸ்.ரி. குமரன் | 34 -36 |
| சைவத் திருக்கோவிற்..... | கா.கைலாசநாதக்குருக்கள் | 37 -38 |
| ஆலய உற்சவ... | - | 39 -40 |
| சைவ சமய வினா விடை | ஆறுமுகநாவலர் | 41 -42 |
| நித்திய அன்னப்பணி | - | 43 -44 |
| மீண்டுமொரு... | க. அன்னைதாசன் | 45 -46 |
| தனிப்பெருந் தமிழ்த்.... | க. நாகேஸ்வரன் | 47 -49 |
| பெண் எனும் மகா... | மூ. சிவலிங்கம் | 50 -52 |
| தமிழகத் திருக்கோயில்..... | வல்வையூர் அப்பாண்ணா | 53 -56 |


அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா


**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



# ஞானச்சுடர் ஆனிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஆனிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது வெளியீட்டு உரையில், ஆச்சிரமமானது பல்வேறு இடர்பாடுகளின் மத்தியிலும் தனது பணிகளை செவ்வனவே செய்து வருகின்றது என்று சபையோருக்குக் கூறினார். “பசித்தோர் முகம் பார்” என்ற வாக்கிற்கிணங்க ஆச்சிரமமானது பசித்து வரும் அடியார்களுக்கு இல்லையென்று சொல்லாது அன்னத்தை வாரி வாரி வழங்கி வருகின்றது.

மேலும் தனது உரையில், ஆச்சிரமமானது ஞானச்சுடர் எனும் சுடரை வெளியிட்டு, அனைத்து சைவமக்களினதும் அறிவுப்பசியைப் போக்கி வருகின்றது. மருத்துவசேவை மூலம் மக்களின் நோய்ப் பிணியை நீக்கி சுகவாழ்வைக் கொடுக்கின்றது.

ஆச்சிரமத்தின்மூலம் மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் பெற்றுக்கொள்ளலாம் என்று கூறியதோடு, மேலும் இப்பணி வளர்ச்சிபெற எல்லாம் வல்ல சந்நிதி வேலனின் அருட்கடாட்சம் கிட்ட வேண்டும் என்று கூறி தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

174 ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு க. நவரத்தினம் (இளை. ஆசிரியர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் ஞானச்சுடர் எனும் நூலை ஆச்சிரமமானது ஒவ்வொரு மாத இறுதி வெள்ளிக்கிழமைகளிலும் வெளியிட்டு வருகின்றது. அந்நூல் சைவ மக்களின் அறிவுப் பெட்டகமாகத் திகழ்கின்றது என்று சபையோருக்குக் கூறினார்.

தொடர்ந்து கூறுகையில் ஞானச்சுடர் எனும் மலர் அழகான அட்டைப்படத்துடன், உள்ளே கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள், படங்கள், பொன்மொழிகள் என்று குறிப்பிட முடியாத அளவு அம்சங்களை தன்னிடத்தே கொண்டுள்ளதோடு நிறைந்த பக்கங்களையும் கொண்டு வெளிவருகின்றது என்று கூறினார்.

மேலும் இந்நூலை சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் படித்து இன்புறும் வகையில் அமைந்துள்ளது. மேலும் இச்சுடருக்கு கைவரிசை படைத்த எழுத்தாளர்கள் ஆக்கங்களை வழங்கி தமது ஆற்றலை வெளிப்படுத்தி வருகின்றனர். அதன் மூலம் பல்வேறு மக்கள் பயன்பெற்று வருகின்றனர் என்று கூறினார். இந்நூல் அகில உலகம் முழுவதும் சென்று மக்களுக்கு ஆன்மீகத்தைப் போதிக்கின்றது என்று எடுத்துரைத்தார்.

இனிவரும் காலங்களிலும் ஞானச்சுடர் எல்லோரது வாழ்க்கைக்கும் வழிகாட்டியாக திகழவேண்டும் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

எல்லா மனிதர்களிடமும் மனிதாபிமானம் என்பது இருக்கின்றது. இந்த மனிதாபிமானத்தின் அடிப்படையிலேதான் ஒரு மனிதன் சக மனிதனுக்கு விசுவாசமாக உதவுவதற்கு முன்வருகின்றான்.

இவ்வாறு உதவுவது என்பது பொருளாதார ரீதியாக உத்வுவது என்ற கருத்தில் மட்டும் கூறப்படவில்லை. பணமோ, பொருளோ கொடுத்து உதவுவதும் அதற்குள் உள்ளடக்கப்படலாம். அதேபோல வீதியில் கண்தெரியாது கஷ்டப்படுபவனுக்கு வழிகாட்டி உதவுவது, வாழ்க்கையில் கஷ்டப்பட்டவனுக்கு அல்லது துன்பப்பட்டவனுக்கு ஆறுதல் வார்த்தை கூறுவது, ஏழைகளுக்கு உதவுவது, இடம்பெயர்ந்து கஷ்டப்படுபவனுக்கு இருப்பதற்கு வீடு தேடிக்கொடுப்பதில் உதவுவது, தன்னுடன் கடமை புரிபவன் அல்லது தனக்குக்கீழ் கடமை புரிபவனது உயர்வுக்கு வழிகாட்டி உதவுவது இவை எல்லாமே உதவிகள்தான்.

இவ்வாறு மனிதனுக்கு மனிதன் உதவும் உதவிகள் எதுவாக இருந்தாலும் அவற்றை செய்பவர்களுடைய நோக்கம் ஒன்றாகத்தான் இருக்கமுடியும். அதுதான் தர்மம் தேடுவது. ஆம்! இந்தத் தர்மம் ஒன்றுதான் எப்பொழுதும் எங்கேயும் மனிதனுக்கு உதவக்கூடியது என்பதை அவர்கள் நன்கு தெரிந்துவைத்திருப்பதனால்த்தான் இவ்வாறான தர்மத்தை அவர்கள் உண்மையாகவும், தூய்மையானதாகவும் செய்யமுற்படுகின்றனர்.

இவ்வாறு மனிதன் தர்மம் செய்வதில் நாட்டமுள்ளவனாகக் காணப்படுகின்ற பொழுதிலும் நடைமுறையில் அதனை மேற்கொள்வதில் சில தடைகள் உள்ளதுபோலத் தோன்றுகிறது.

காரணம் உதவிகள் செய்வதனால் சில சிரமங்களையோ அல்லது தேவையில்லாத பிரச்சனைகளையோ தாம் எதிர்நோக்கவேண்டி வரலாம் என்பது ஒரு வகையான காரணங்களாகும். அதே நேரம் தர்மமான காரியங்களை நிறுவன ரீதியாகச் செயற்படுத்துகின்ற சமய நிறுவனங்கள் எம்மத்தியில் இல்லாதிருப்பதும் இன்னொரு வகையான காரணமென்றும் கருதவேண்டியுள்ளது.

தூய்மையான தொண்டுள்ளம் கொண்ட சமய அமைப்புக்கள் அரிதாகக் காணப்படுவதையே நாம் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். மாறாக தன்னலமற்ற மக்கள் தொண்டை சமய நிறுவனங்கள் மேற்கொள்ள முற்படும்பொழுது அவற்றிற்கு சமுதாயத்திலிருந்து நல்ல உள்ளம் படைத்தவர்களது பங்கும் பணியும் தாராளமாகக் கிடைக்குமென்பதையே எமது அனுபவம் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

# திருவீதி வலம் வருகின்றான், வரவேற்போம்

திருவீதி வலம் வருகின்றான் - சந்நிதி
சிங்கார வேலவன் திருக்கோயில் சுற்றியே (திரு)

அடியார் புடைசூழவும்- அன்பாய்
அவர் பாடும் பண் கேட்டுமே
கொடியோடு குடை நிழல்
கோலா காலமாக (திரு)

மயில்வாகனம் ஏறியே- மருங்கே
மணவாட்டி குஞ்சரி வள்ளி சகிதமாய்
அயிலேந்தி விளையாடியே- மங்கல
மணியோடு மேளங்கள் தாளங்கள் ஒலித்திட (திரு)

வாசலில் கதலியோடு- நல்ல
மகர தோரணங்கள்- தூக்கியே
தேசின் பொற் கும்பம் வைத்து- சிறந்த
தீபங்கள் காட்டியே வாரமாய் வரவேற்போம் (திரு)

மாந்தரின் துயரோடவும், அவர்கள்
மதிப் போடு உயிர் வாழவும்
வேந்தனாய் வேல் பிடித்தான்- அவன்
வெற்றியைக் கொண்டாடி பத்தியாய் வரவேற்போம். (திரு)

-முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம்-

# ஆடிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு ந. ஜவகர்லால்நேரு**
(லண்டன்)

**மாதர்க்கரசி பொன்னுத்துரை**
(கொழும்பு)

**T.கனகசபேசன்**
(கனடா)

**செல்வி தம்பு சரோஜா**
**(சங்கீத முதன்மை இளை. ஆசிரியர், நெல்லியடி)**

**திரு இ. பேரின்பநாயகன்**
**(நாவலர் பாலர் பாடசாலை ஸ்தாபகர், சுதுமலை)**

**திரு Dr. V. ஸ்ரீஸ்காந்தன்**
**(ரஞ்சிதா மெடிக்கல் கிளினிக், சுதுமலை)**

**திரு Dr பொன். சின்னத்தம்பி**
(திருவேரகம், பொலிகண்டி)

**திரு சி. பஞ்சலிங்கம்**
(லிகிதர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)

**திரு வே. பாராளன்**
(தொழில் நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)

**திரு S. தர்மரெத்தினம்**
(அதிபர், சிறுப்பிட்டி)

**திரு நா. தங்கராசா**
(இளை. அதிபர், ஈவினை)

**திரு ச. நவரத்தினராசவேல்**
(அதிபர், வேல்பதி, புத்தூர்)

**திரு பொன்னையா சிவக்கொழுந்து**
(அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி)

**திரு நா. இராசலிங்கம்**
(அத்தியட்சகர், அரச முதியோர் இல்லம், கைதடி)

**உரிமையாளர்**
(தனு வீடியோ, உரும்பராய்)

**திரு வ.சி. குணசீலன்**
(தாவரவியல் ஆசிரியர், கரவெட்டி)

**திரு செ. சுந்தரலிங்கம் J.P**
(நிர்வாகி சதா பொன்ஸ் கல்வி நிலையம், மாலி சந்தி)
**திரு ந. சேகர்**
(கிராம சேவையாளர், வீரபத்திரர்கோயிலடி, உடுப்பிட்டி)
**திரு கு. ஸ்ரீமுருகமூர்த்தி**
(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)
**திரு சு.பொ. நடராசா**
(அண்ணா தொழிலகம், இணுவில்)
**உரிமையாளர்**
(நாதன் அன் பிறதேர்ஸ், இணுவில்)
**திரு சி. கருணா**
(கல்வியங்காடு, யாழ்ப்பாணம்)
**திரு மூ. பஞ்சலிங்கம்**
(நியூ கிளினிக், இணுவில்)
**செல்வன் சி. கௌதமன் C/O சி. சிவபாலன்**
(யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(ரேவதி நகைமாடம், யாழ்ப்பாணம்)
**திரு வ. வாமதேவன்**
(இணுவில் மேற்கு, இணுவில்)
**திரு V. சேனாதிராசா**
(கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)
**பிறேமதாஸ் சசிகலா**
(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)
**திரு ம. இரத்தினமூர்த்தி**
(ஜெயகனன் பல்பொருள் வாணிபம், சுண்ணாகம்)
**திரு ந. இராசரத்தினம் J.P**
(நாகம்ஸ் நிறுவனம், சுண்ணாகம்)
**செல்வி தர்மினி ரவிச்சந்திரன்**
(கட்டுடை, மானிப்பாய்)
**திரு க. சிவஞானசுந்தரம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திருமதி பொ. இரத்தினசோதி**
(கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை)
**திரு ச. கிருஷ்ணமூர்த்தி**
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)
**திரு செ. அட்செயலிங்கம்**
(ஆசிரியர், அல்வாய்)

செயலாளர்
(கருணையம்பதி சனசமூக நிலையம், கரணவாய்)
**திரு மூ.சிவலிங்கம்**
(காரைக்கால் வீதி, இணுவில்)
**திரு க. விகர்ணன்**
(குமரகோட்டம், கோண்டாவில்)
**திரு க. சிவகடாட்சம்**
(தாவடி, கொக்குவில்)
செயலாளர்
(கணபதி படிப்பகம், நெடியகாடு)
**திரு மு. விசயரத்தினம்**
(காட்டுப்புலம், தொண்டைமனாறு)
**திரு R. பொன்னுராசா**
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)
**திரு S. தர்மலிங்கம்**
(கமலபதி மாதர்சங்க வீதி, சித்தங்கேணி)
**திரு சி. குகநாதன்**
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)
**திரு வி. சிவபாலசிங்கம்**
(கரன் பான்சி, சுன்னாகம்)
**திரு க. ஸ்ரீஸ்கந்தராசா**
(கிராமசேவகர், சிறுப்பிட்டி கிழக்கு)
**திரு M. பாலசுப்பிரமணியம்**
(ஸ்ரீ முருகன் கபே, ஈவினை)
**திரு க. கிருபானந்தம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திரு மு. இராஜேந்திரம்**
(முருகையா கோவிலடி, புலோலி)
**திரு பொன். சற்குணநாதன்**
(வேம்பன் வீதி, உரும்பராய்)
**திரு சொ. செல்லத்துரை**
(பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை)
**திரு நா. தெய்வேந்திரம்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
**திரு வி. தவத்துரைராசா**
(மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்)
**சு. அனுஷியாதேவி**
(முருகவாசா, சித்தங்கேணி)

**திரு சி. கணேசமூர்த்தி**
(அல்வாய்)
**திரு அ. அருள்நாதன்**
(துவாரகா, இணுவில்)
**திரு தயானந்தன் சுஜந்தன்**
(அச்சக வீதி, கொக்குவில்)
**திரு த. கமலேஸ்வரன்**
(ஈஸ்வரி வாசம், இணுவில்)
**திரு செல்லப்பா சோமசுந்தரம்**
(முன்னால் வங்கி முகாமையாளர் பகவதி கோயிலடி, உடுப்பிட்டி)
**திரு செ. அருளானந்தம்**
(கிராமசேவகர், பருத்தித்துறை)
**உரிமையாளர்**
(சுந்தர்சன்ஸ், மானிப்பாய்)
**திரு ச. சூரியப்பெருமாள்**
(ராகுலசூரியன், பருத்தித்துறை)
**திரு உ.ம. சிதம்பரநாதன்**
(வட்டுவத்தை, அல்வாய்)
**திரு க. ஆனந்தராசா**
(லிங்கவாசா, நெல்லியடி)
**திரு க. தங்கராசா**
(அல்வாய் மேற்கு)
**திரு மா. அருட்செல்வம்**
(எழுதுவினைஞர், புலோலி வடமேற்கு)
**திரு ச. தவகோபால்**
(ஹரிராம், பலாவி வீதி, உரும்பராய்)
**திரு ச. சிவரூபன்**
(சிறுப்பிட்டி)
**திரு செல்லையா சர்வேஸ்வரன்**
(செல்வறங்கம், இணுவில்)
**திரு ஆ. மகேந்திரலிங்கம்**
(வேம்போலை, இணுவில்)
**திரு த. கந்தசாமி**
(இருபாலை வீதி, கோண்டாவில்)
**திரு இ. பரமசாமி**
(கொல்லோலை, உடுப்பிட்டி)
**சு. சர்வேஸ்வரன்**
(காளி கோவிலடி, மல்லாகம்)

# முருகா..... முருகா..... முருகா.....



திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

இன்று மனிதர்கள் அமைதியின்றி வாழ்வதற்கு பொதுவாக அவர்களிடம் காணப்படுகின்ற பயம், அச்சம், பீதி என்பனவே காரணமாக உள்ளன. அடுத்த கணம் என்ன நேருமோ, என்று அஞ்சுகிறார்கள். நல்லன நேர்ந்து விட்டால் சிறிது நேரம் மகிழ்ச்சியுறுகிறார்கள், பின்னர் அடுத்த கணம் என்ன நேருமோ என்று அஞ்சத் தொடங்கி விடுவார்கள். இந்த அச்சத்தினால் ஏற்படும் மன அங்கலாய்ப்பு, வாழ்க்கையில் நிம்மதியைக் குலைத்து விடுகின்றது. எனவே எதிர்காலம் எப்படியமையும் என்ற வினாவிற்கு விடைகாணச் சோதிடத்தை நாடுகின்றார்கள். நாளும், கோளும் நல்லனவாய் அமையுமா அல்லது தீங்கினை ஏற்படுத்துமா என்று ஆராய்கின்றார்கள். இந்த அலைச்சல்களுக்கும், அச்சங்களுக்கும் காரணம் அவற்றைப் போக்கிக் கொள்வதற்குத் தகுந்த வழியினை அறிந்து கொள்ளாதிருத்தலே ஆகும்.

“நாளென் செயும் வினைதானென்செயும் எனை நாடிவந்த
கோளென் செயும் கொடுங்கூற்று என் செயும் குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்னே வந்து தோன்றிடினே”

என்கிறது இப்பாடல். நாளும், கோளும் நலிந்தோர்க்குத்தான் என்பார்கள். “முருகன், குமரன், குகன் ” என்று மொழிந்து உருகும் அடியார்களுக்கு நாளும் கோளும் நலன்களைத் தருமே தவிர, தீங்குகளைத் தரமாட்டா.

“அஞ்சு முகந்தோன்றில் ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்”

என்கிறார் நக்கீரர். முருகா, முருகா, முருகா என்று ஓதுகின்ற முருக மந்திரத்திற்கு எல்லாவித அச்சங்களையும், பயங்களையும், அவலங்களையும் தடுத்து நிறுத்திப்போக்கும் சக்தி உண்டு. எல்லாப் பிணிகளையும் நீக்கவல்ல அருமருந்து, “முருகா” எனும் மந்திரம். இம் மந்திரத்தை நாவில் செபித்துக் கொண்டிருப்போர் எதற்குமே அஞ்சத்தேவையில்லை.

..................மாமயிலோன்

வேல்பட்டழிந்தது வேலையும்

சூரனும் வெற்பும் அவன்

கால்பட்டழிந்தது இங்கு என்

தலைமேல் அயன் கையெழுத்தே."

என்கிறார், அருணகிரிநாதர்.எல்லாமே தலைவிதிப்படி நடக்கும். தலையில் எழுதப்பட்ட எழுத்துக்களை எம்மால் வாசித்து விளங்கிக் கொள்ள முடியாது. அவை பிரமனுக்குத்தான் வெளிச்சம். நாம் முற்பிறப்பில் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப தலைவிதி அமை கின்றது. தலைவிதியை நினைத்து ஏங்குவதைத் தவிர வேறொன்றும் அறியாத நிலையில் உள்ளோம். தலை எழுத்தை மாற்றுவதற்கல்ல, முற்றாக அழிப்பதற்கே அருணகிரிநாதர் வழி சொல்லியுள்ளார். எமது தலைமீது முருகப் பெருமானின் திருவடிகள் படும் மாத்திரத்தே, பிரமன் எழுதிய தலையெழுத்துக்கள் அழிக்கப்பெற்றுவிடுகின்றன. பிரமனின் எழுத்துக்கள் அழிக்கமுடியாதன என்கின்றனர். ஆனால் முருகனின் திருப்பாதங்கள் பட்டமாத்திரத்தே தலை எழுத்து அழிந்து விடுகிறது. அருணகிரிநாதரும் தமது அனுபவத்தை முருகன் "கால்பட்டழிந்தது இங்கு என்தலைமேல் அயன் கையெழுத்தே" என்று அதிகாரபூர்வமாகக் கூறுகின்றார். முருகனின் பெருமையை கந்தனின் கருணையை இதற்குமேல் எவ்வாறுரைப்பது!

எம்முடைய சிந்தையெலாம், வாயெலாம், உடல் எல்லாம் முருகன் ஆகிவிட்டால், அழகு பொலியும், அன்பு பெருகும், அறிவுவிளக்கம் பெறும். அப்போது உலகம் ஒழுங்காகி விடும், சேவை மேலோங்கும்; சுயநலமும், அகந்தை, மமதைகளும் செயலற்றுவிடும். மக்களிடையே இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்னும் விழுமிய பெருவாழ்வு கிட்டும்.

"உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்

பின்னை யொருவரையான் பின் செல்லேன்- பன்னிருகைக்

கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்

வேலப்பா செந்திவாழ்வே"

"முருகா, உன்னைத்தவிர வேறெவரையும் நான் நம்பி வாழவில்லை. வேறெவருக்கும் பின்னால் செல்லுகின்ற பழக்கத்தையும் நான் அறியேன். என்னை முற்று முழுதாக உன்னிடமே ஒப்படைத்துவிட்டேன்", என்று முருகப் பெருமானிடம் பூரண சரணாகதி அடைந்து விட்டால், எந்தவிதமான துன்பங்களுக்கோ, இடர்களுக்கோ நாம் அஞ்சவேண்டியதில்லை.

ஆறுபடை வீடுகளில் விரும்பி உறைகின்ற முருகன், உலகின் குன்றுகள் தோறும், சோலைகள் தோறும், குளங்கள் தோறும், ஆறுகள் தோறும், மன்றுகள் தோறும், மலர்ப்பொய்கைகள் தோறும் உலாவி வருவதை நக்கீரர் திருமுருகாற்றுப்படை நூலில் குறிப்பிட்டுள்ளார்.

நம் உள்ளத்தை முருகன் உறையும் கோயில் ஆகவும், உலாவும் மலர்ச் சோலையாகவும் ஆக்குவதற்கு முயற்சிப்போமாக.

# மெய்ஞானத்தை விஞ்சியதோ விஞ்ஞானம்

திரு பு. கதிரித்தம்பி அவர்கள்

அண்டமெல்லாம் காத்தருளும் கருணைக் கடலாகிய சிவபெருமான் உலகங்களையும் உயிரினங்களையும் பஞ்ச கிருத்திய நடனம்மூலம் ஆட்சி செய்கின்றாரென சைவ சித்தாந்தம் கூறுகின்றது. ஒவ்வொரு ஆன்மாவும் செய்த வினைப்பயனை பூமியில் அனுபவித்துவிட்டு திரும்பவும் தனது திருவடியில் சேரும்படி இறைவன் அனுப்பி வைக்கின்றார். பூமியில் அவதரித்த உயிரினங்களில் மானுடப்பிறவி அரிதற்கரிய பிறவியாகும். அரிய பிறவி எடுத்த மனிதன் நவீன உலகின் விஞ்ஞானத்தில் மயங்கி மெய்ப்பொருளாகிய கடவுளை மறந்து விடுகின்றான். எம்பெருமான் மனிதனுக்கு நோயைக் கொடுத்து தன்னடி ஈர்க்கின்றார். ஈர்க்கப்பட்ட மனிதன் மெய்ஞானம் உதிக்கப்பெற்று, மனச்சாட்சியின்படி நடக்கத் தலைப்படுவான். மெய்ஞான முதிர்வால் மனிதன் போலியான விஞ்ஞான வாழ்வைத் துறந்து மெய்ஞானப் பரம்பொருளை அடைவானென்பது திண்ணம்.

உலகில் எங்கும் எவையிலும் விஞ்ஞானம் படர்ந்து செறிந்திருப்பதை மனிதர்கள் காண்கின்றனர். விஞ்ஞானி சந்திரனில் காலடி வைத்துவிட்டான், செவ்வாய் கோளையும், ஏனைய கோள்களையும், கணனியையும், மின்அஞ்சலையும் கண்டுபிடித்துள்ளான். வெகு தொலைவிலுள்ளதையும் நொடிப்பொழுதில் காலடியில் அறிய வைக்கின்றான். எனவே விஞ்ஞானத்தின் பெருமையைப் பேசவும் முடியுமோ என மக்கள் எண்ணுகின்றனர். மெய்ஞான நெறியில் நின்று ஒழுகிய நாயன்மார்கள், சித்தர்கள், சந்தான குரவர்கள், அடியார்கள் செய்த அற்புதங்களை ஒருகால் எண்ணிப் பார்ப்பார்களானால் உண்மை நிலை தானாகத் தோன்றும். முதலில் நாயன்மார்கள் செய்த அற்புதங்களை நோக்குவோம். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் சமணருடன் அனல் வாதத்தில் நெருப்பில் ஏட்டைப் போட்டு எரியாது பச்சென்றிருக்கக் காட்டினார். புனல் வாதத்தில் ஏட்டைத் தண்ணீரில் எதிர் ஏறிச் செல்லக் காட்டினார். அவர் பாம்பினால் கடியுண்டு இறந்த வணிகனை உயிர்பெறச் செய்து காட்டினார். சமணர்கள் சம்பந்தர் இருந்த மடத்துக்கு மூட்டிய தீயை, மடம் எரியாது பாண்டியனுக்கு வெப்புநோயாக மாறும்படி செய்தார். பின் அந்நோயை மங்கையர்க்கரசியார் வேண்டுதலின்படி "மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு" என்னும் முதலையுடைய திருநீற்றுப் பதிகங்களைப் பாடி வெப்புநோயை மாற்றினார் என்பது வரலாறு கூறும் தத்துவ உண்மையாகும். நாவுக்கரசர் சமணர்களால் துன்புறுத்தப்பட்டு, மெய்ப்பொருளின் உண்மைத் தன்மையை உலகிற்கு அறியவைத்த உத்தமர். சுண்ணாம்பறையில் ஏழுநாள் ஊனின்றி அடைக்கப்பட்டு சமணர் திறந்து பார்த்த பொழுது முந்தியிருந்ததிலும் பூரிப்புடையவராகக் காணப்பட்டார். சமணர் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டு இறவாதிருந்தார். அதுமட்டுமன்றி அப்பூதியடிகளின்

மூத்தமகன் பாம்பினால் கடியுண்டு இறந்ததை அறிந்து "ஒன்று கொலா அவர் சிந்தை" என்னும் பதிகம்மூலம் உயிர்பெறச் செய்தார். சுந்தரமூர்த்தி நாயனார் முதலை உண்ட பாலகனை மீட்டுக் கொடுத்தார். அரிமர்த்தன பாண்டியன் மாணிக்கவாசகருக்குச் செய்த தண்டனையால் கங்கை பெருக்கெடுத்தது. இதை உணர்ந்த அரசன் மாணிக்கவாசகரைக் கங்கைக் கரைக்கு அழைத்துத் தான் செய்த பிழையைப் பொறுக்குமாறு வேண்ட பெருகிய கங்கை அவ்விடத்தில் நின்றது என்பதை திருவாதவூர் புராணம் கூறுகின்றது. எனவே நாயன்மார் செய்த அற்புதங்களைப் போன்று இன்றைய விஞ்ஞானிகளால் முடியுமா? ஆகையால் விஞ்ஞானத்திலும் மெய்ஞ்ஞானம் விஞ்சியது என்று கூறுதல் மிகையாகாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சித்தர்களாகிய யோக சுவாமியார், கடையிற் சுவாமிகள் செய்த மெய்ஞ்ஞான அற்புதங்களை நோக்குவோம். யோக சுவாமி அவர்கள் "யாம் ஒன்றும் அறியோம். பொல்லாங்கு ஒன்றும் இல்லை" என்று அடிக்கடி கூறுவார். அவர் ஒருநாள் வீதியோரத்தில் பெற்றோல் இன்றியும், இயந்திரக் கோளாறினாலும் தரித்து நின்ற வாகனத்தை யாழ் நகரத்தைச் சுற்றி ஓடச் செய்து திரும்பவும் நின்ற இடத்தில் விட்டுச் சென்றதை அன்றுள்ள நகர மக்கள் மறந்திலர். கடையிற் சுவாமிகளை நகர்காவலர் மனநோயாளியென எண்ணிச் சிறைக் கூடத்தில் அடைத்து வைத்தனர். காலையில் நகர் காவலர் கூடத்தைத் திறந்து பார்த்தபொழுது சுவாமிகள் அங்கு இல்லாதிருப்பதைக் கண்டு ஏங்கினர். கடைத் தெருவில் சுவாமிகள் திரிவதாக நகர் காவலர் அறிந்தனர். உடனே நகர் காவலர் தமது அறியாமையை எண்ணி வருந்தி மன்னிப்புக் கேட்டனர் என்பதை சித்தர் வரலாறு கூறுகின்றது. இனி அருணகிரிநாதர் முருகனால் ஆட்கொள்ளப்பட்டதையும், கண்பார்வையிழந்த மன்னன் பிரபுடதேவன் பார்வையை மீண்டும் பெற வேண்டி பாரிஜாத மலர் எடுத்துவர எண்ணி பச்சைக்கிளி வடிவெடுத்து, தனது உடலைத் திருவண்ணாமலையில் வைத்துவிட்டு தேவலோகம் பறந்து சென்று பூ பறித்து வந்ததையும், அவர் உடல் தகனம் செய்யப்பட்டதால் கிளி உருவில் இருந்தே கந்தரலங்காரம், கந்தரனுபூதி பாடினார் என்பதுவும் அருணகிரிநாதர் வரலாறு கூறும் உண்மைச் செய்தியாகும். மெய்நெறினின்று ஒழுகிய யோக சுவாமி, கடையிற்சுவாமி, அருணகிரிநாதர் செய்த அரிய அற்புதங்களை விஞ்ஞானிகளால் செய்ய முடியுமா? எனவே மெய்ஞ்ஞானம் ஒப்பற்ற உயர்ந்த பொருளென்று கூறவும் வேண்டுமோ?

விஞ்ஞான நெறியினின்று சத்திர சிகிச்சை செய்கின்ற வைத்தியர்களும் தங்கள் சிகிச்சை பலனளிக்காதபோது இறைவனை வேண்டும்படி கேட்பதுண்டு. விஞ்ஞானிகள் ஏவுகணைகளை பரீட்சிக்கும்போது வெற்றி அளிக்க இறைவனை வேண்டும்படி கூறுவார்கள். அதுமட்டுமா? சிலவேளைகளில் விண்கற்கள் பூமியைநோக்கி வரும்போது இடர் ஏற்படாதிருக்க இறைவனை வேண்டும்படி மக்களிடம் கூறியதை நாம் எல்லோரும் அறிவோம். மேற்போந்த காரணங்களால் "மெய்ஞ்ஞானத்தை விஞ்சியதோ விஞ்ஞானம்" என்ற கேள்விக்கு நீங்களே விடைகண்டு தெளிவடையுங்கள்.



# திருவண்டப் பகுதி

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## இணைக்குறளாசிரியப்பா



மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

திருச்சிற்றம்பலம்

அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் றுன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன்.....

**பதவுரை:-**

அண்ட பகுதியின் உண்டை பிறக்கம்- அண்டமாகிய பகுதிகளின் உண்டையாகிய வடிவமும் விளக்கமும், அளப்பு அரும் தன்மை- அளத்தற்கு அரிய தன்மையும், வளம் பெரும் காட்சி- வளப்பாடுடைய பெரிய தோற்றமும், ஒன்றனுக்கு ஒன்று நின்ற எழில் பகரின்- ஒன்றற்கொன்று மேம்பட்டு நின்ற எழுச்சியினைச் சொல்லுமிடத்து, நூற்று ஒரு கோடியின் மேற்பட விரிந்தன- நூற்று ஒரு கோடியினும் மேற்பட விரிந்தனவாகிய அவ்வண்டங்களெல்லாம், இல் நுழைகதிரின் துன் அணுபுரைய- வீட்டினுள்ளே சிறு வழியினால் நுழைகின்ற ஞாயிற்றின் கதிரிடத்து நெருக்கமாகக் காணப்படும் அணுக்களை ஒப்ப, சிறிய ஆக பெரியோன்- சிறியனவாகத் தோன்றும்படி தான் அவற்றினும் பெரியோனாக இருப்பவன்.

அண்டப் பகுதியென்றது அண்டங்களின் மூலப் பகுதிகளான மண், நீர், தீ, வளி, வான் என்னும் ஐம்பூதங்களினின்றும் தோற்றி வானவெளியிற் காணப்படும் உலகங்களை உணர்த்தியதாகும். ஐம்பூதங்களின் அண்டங்களேயன்றி அவற்றின் மேலே மனம் முதலிய நான்கு தத்துவங்களின் அண்டங்களும், அவற்றின் மேலே வித்தியா தத்துவங்கள் ஏழின் அண்டங்களும், அவற்றின் மேலே சிவ தத்துவம் ஐந்தின் அண்டங்களும் உண்டு என்பதை,

"சிறிதவன் தன்னருள் புரிவோர்
பூதமைந்தினும் ஏனைய திறத்தினும் புறத்து
மீது மாமண்ட மெவற்றிற்கும் வேத்தியல் புரிவார்"

(அவைபுகு 131)

எனக் கந்தபுராணத்து வருதலானும் உணர்க. பகுதி- பகுப்பு. "தகுதியெனவொன்று நன்றே பகுயாற், பாற்பட் டொழுகப் பெறின்" (குறள் 111) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அண்டப் பகுதிகளெல்லாம் உருண்டை வடிவினவாய் விளங்குதல் பற்றி "உண்டைப் பிறக்கம்" என்றார். உண்டை- உருண்டை "உண்டையுண்டதனைத் தன்னுள்ளத்துள்ளுவாள்" கம்ப மந்தரை 41. பிறக்கம்- விளக்கம். "மாமணிப் பிறக்கம்" (திருவாசகம் திருவண்ட 124) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

அண்டப் பகுதிகள் ஒவ்வொன்றன் அளவும் அவற்றின் இடைவெளித் தூரமும் அளந்தறிய முடியாமை பற்றி "அளப்பருந் தன்மை" என்றார். "அளவி லண்டமும்" என ஞானாமிர்தத்து (கடவுள் வாழ்த்து 4) வருதலுங் காண்க. ஒவ்வொரு அண்டங்களின் தோற்றங்களை ஆராயுந்தோறும் குறையாத வளப்பாடுடையனவாய் விரிதலின் "வளப்பெருங் காட்சி" என்றார்.

நின்ற எழில்- நின்றெழில் எனப் பெயரெச்சத்து அகரம் கெட்டது. "புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை" (குறள் 59) என்புழிப்போல. எழில்- எழுச்சி. (குறள் 407) பரிமேல் பகருதல்- சொல்லுதல். "பெருந் துயரினோடு மொரு வீடுபெற லில்லா, திருந்தனளெனப் பகரின்" (கம்ப. சூளாமணி 6) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

மண் முதலிய மூலப்பொருள்களின் அண்டங்கள், ஓரினத்திலும் மற்றைய இனம் கீழுள்ளதை நோக்க மேலுள்ளது பருமனாலும் தொகையினாலும் இத்துணைய என்று கணக்கிடுதலாகாமையின் அவை தம்மை "நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" என்றார். நூற்றொரு கோடி என்பது ஈண்டு தொகை குறியாது அளவின்மை குறித்து நின்றது. "கூர்கனக ராசியொடு கோடிமணி யாலுந், தூர்ம்பி னெடு வீதியினை" (கம்ப- கைகேசி 96) என்புழிப் போல

அவ்வண்டங்களெல்லாம், வீட்டினுள்ளே சிறு புழையின் வழியே நுழைகின்ற ஞாயிற்றின் கதிரிடத்து நெருக்கமாகக் காணப்படும் அணுக்களையொப்பச் சிறியவாக இறைவன் மிகப்பெரியோனாதலின் "இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச், சிறியவாகப் பெரியோன்" என்றார். ஞாயிற்றின் கதிரிற்றோன்றும் நுண் துகளைச் சிறுமைக்கு உவமை கூறுதலை "வாய்ப்பறி யலனே வெயிற்றுக ளனைத்தும் மாற்றோர் தேஎத்து மாறிய வினையே" (பதிற். 20:6-7) என்பதிலும் காண்க. இல்- வீடு. துன்னுதல்- நெருங்குதல். அணு- நுண்துகள். புரைய என்னும் உவமச் சொல் மெய்யுவமத்தின்கண் வந்தது. "வேய்புரை மென்றோள்" (கலி 39:48) என்புழிப்போல. இப்பகுதியால் இறைவனது வியாபகப் பெருமை மனத்துக்கும் சொல்லுக்கும் எட்டா இயல்பிற்று என்பது உயர்த்தியருளினார்.

(தொடரும்...

## கார்த்திகை மற்றும் மார்கழிமாத குருபூஜை தினங்கள்

| | |
|---|---|
| **13.11.2012 ஐப்பசி 28 செவ்வாய்** | **மெய்கண்டதேவர் குருபூஜை** |
| **05.12.2012 கார்த்திகை புதன்** | **ஆறுமுகநாவலர் குருபூஜை** |
| **07.12.2012 கார்த்திகை 22 வெள்ளி** | **மெய்ப்பொருள் நாயனார் குருபூஜை** |




# முதல் வணக்கம்...!

திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள்

கம்பர் தாம் எழுதிய ராமாயணத்தில் குறிப்பிட்டிருக்கும் ஒரு செய்தியை வைத்துக் கொண்டு அங்கே என்ன நடந்திருக்கும் என்று பெரியவர்கள் ஊகித்து சொல்லியிருக்கிறார்கள். அதை இப்போது பார்ப்போம்.

சீதா கல்யாணம் முடிந்தது. திருமண மண்டபத்தில் ஏகப்பட்ட கூட்டம் கல்யாணம் முடிந்தவுடனே மண மேடையிலிருந்து ராமர் எழுந்து வருகிறார். அவரைத் தொடர்ந்து சீதா பிராட்டியும் வந்து கொண்டிருக்கிறாள்.

கூட்டத்தில் இருந்தவர்களுக்கெல்லாம் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில் மிகவும் ஆர்வம். அதாவது சீதையை திருமணம் செய்து கொண்ட ராமர் யாரை முதலில் வணங்கப்போகிறார்? என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அங்கிருந்த அத்தனை பேருமே ஆவலோடு காத்துக் கொண்டிருந்தார்கள்.

சீதை பின் தொடர, ராமர் திருமண மண்டபத்தைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார். தூரத்தில் தசரதர் உட்கார்ந்திருந்தார். அந்தப் பக்கமாக ராமரும் சீதையும் சென்றார்கள். அதைப் பார்த்ததும் சரி... தசரதருக்குத்தான் முதல் நமஸ்காரம் என்றெல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை.

ராமரும் சீதையும் நேராக தசரதரைத் தாண்டி அப்பால் சென்றார்கள். அடுத்ததாக கௌசல்யை அமர்ந்திருந்தாள். அந்தப் பக்கமாக இவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். ஏனென்றால் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் இதில் அன்னை தானே முதலில் வருகிறது! ஆதலால் தாயாரைத்தான் முதலில் வணங்கவேண்டுமென்று ராமர் நினைக்கிறார் போல இருக்கிறது" என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் ராமர் தாயையும் தாண்டி அப்பால் போகிறார். குலகுரு வசிஷ்டர் அடுத்தாற்போல உட்கார்ந்திருக்கிறார். குரு வணக்கம் முதலில் என்று ராமர் நினைக்கிறார் போல் இருக்கிறது என்று எல்லோரும் நினைத்தார்கள்.

அதுவும் தவறாகவும் போயிற்று, ராமர் வசிஷ்டரையும் வணங்காமல் மேற்கொண்டு போகிறார்.

இதைப் பார்த்த விசுவாமித்திரர் கொஞ்சம் நிமிர்ந்து உட்காருகிறார். அவர் முகத்தில் பெருமிதம். "அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்ததே நாம் தானே! ஆகவே நம்மிடம்

முதலில் ஆசீர்வாதம் வாங்க வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே வருகிறார்கள் போலிருக்கிறது'' என்று விசுவாமித்திரர் நினைத்தார்.

ஆனால் அவரும் ஏமாந்துவிட்டார். விசுவாமித்திரரையும் தாண்டி அப்பால் போய்க் கொண்டிருந்தார்கள் ராமரும் சீதையும். சரி... அப்படியானால் யாரைத்தான் அவர்கள் முதலில் வணங்கப்போகிறார்கள்? தூரத்தில் ஒரு அம்மா நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் காலில் ராமரும் சீதையும் விழுந்து வணங்கினார்கள்.

யார் அந்த அம்மா?

அவர்தான் ராமர் மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்த கைகேயி!

கம்பர் தம்முடைய ராமாயணத்தில் ராமன் கைகேயியை வணங்கியதை மட்டும் தான் குறிப்பிட்டிருக்கின்றார். அதை மட்டும் வைத்துக் கொண்டு அங்கே என்ன நடந்திருக்கும் என்பதை இப்படி அழகாக படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். இதற்கு ஓர் அர்த்தமும் சொல்லியிருக்கிறார்கள்.

அதாவது ராமரின் செய்கை ராமன் கைகேயியைப் பார்த்து இப்படிச் சொன்னது போல் இருந்ததாம்! எப்படி? "என் அவதாரத்தின் ரகசியம் உனக்குத் தெரியும்" சீதையை ராவணன் தூக்கிக் கொண்டு போக வேண்டும். அதைக் காரணமாக வைத்து ராவணவதம் நடைபெறவேண்டும். அதனால் என் பங்கை நான் செய்து முடித்துவிட்டேன். சீதையை திருமணம் செய்து கொண்டேன். இனிமேல் உன் பங்கை நீ செய்ய வேண்டும். எங்களைக் காட்டுக்கு அனுப்பி வைக்கவேண்டும். அதற்காகத்தான் உனக்கு முதல் வணக்கம்! என்று சொல்வது போல் இருந்ததாம்.

கம்பர் எழுதிய ஒரு விஷயத்தைப் பெரியவர்கள் எடுத்துச் சொல்கிற விதமும் எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா?

---

## சிலைகளும் கடவுளும்

**சிலைகளே கடவுள் அல்ல: மூர்த்தி வேறு: மூர்த்திமான் வேறு: மூர்த்தி என்பது சிலை. மூர்த்திமான் அந்தச் சிலையில் நாம் ஆவாஹனம் செய்கின்ற தெய்வம். மின்சாரம் வேறு. மின்சார பல்புகள் வேறு. பல்பு ஷாக் அடிக்காது. பல்புகளைத் திருடுகிறபோது ஏன் ஷாக் அடிப்பதில்லை என்று கேட்கக் கூடாது. சிலைகளைத் திருடுகிறபோது ஆண்டவன் ஏன் அவனுக்குத் தண்டனை கொடுக்கவில்லை என்று கேட்கலாம். கடவுள் கருணைக் கடல். தாய், திருடுகிற மகனுக்கும் உதவி செய்வதுபோல, கடவுள் கள்ளனுக்கும் கருணை காட்டுவார். "நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவில் நின்ற நடு" என்கிறார் இராமலிங்கர். கடவுளுக்கு விருப்பு வெறுப்பு கிடையாது. அவர் யாரையும் தண்டிப்பதில்லை. தீமை செய்தவர்களைக் கூற்றுவன் தண்டிக்கின்றான். திருடுகின்றவனைக் காவல்துறையினர் தண்டிக்கின்றனர். ஜனாதிபதி தண்டிப்பதில்லை.**

-அறநெறிச்சிந்தனை-

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

– வாரியார் சுவாமிகள் உரையுடன் –

17. யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனால்
பூ மேல்மயல் போயற மெய்ப்புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே.

## பதவுரை

யாம் ஓதிய- நாம் நல்லாசிரியர் பால் ஓதியுணர்ந்த, கல்வியும்- கல்வியறிவையும், எம் அறிவும்- நமது இயற்கை அறிவையும், பெற- நாம் பெற்றுக்கொள்ளுதல், வேலவர் தாமே தந்ததனால்- மெய்யாக வேலை ஏந்திய முருகவேள் அவராகவே நமக்கு வழங்கிய காரணத்தால், பூ மேல்- பூமியில் உள்ளவரை, மயல்போய்- நீங்கள் மயக்கங்களை நீக்கி, அறமெய் புணர்வீர்- அறத்தொடும் உண்மையொடும் சேருங்கள். இனி நாமேல் நடவீர் நடவீர்- இனிமேல் நாவில் நடவுங்கள், நடவுங்கள், அப் பெருமானைப் பாடுங்கள் பாடுங்கள்.

## பொழிப்புரை

நாம் ஆசானிடம் ஓதியுணர்ந்த கல்வியறிவையும் இயற்கையறிவையும் நாம் பெறும் பொருட்டு, ஞான வேலராகிய முருகப்பெருமான் அவராகவே நமக்குத் தந்தருளிய காரணத்தால், உலகத்தவரே! பூதலத்தில் வாழ்கின்றவரை மயக்கத்தை நீக்கி, அறநெறியுடனும் உண்மை நெறியுடனும் சேருங்கள். இனிமேல் நாவினால் அப்பெருமானைப் பாடுங்கள், பாடுங்கள்.

## விரிவுரை

**யாமோதிய கல்வியும் எம்மறிவும்:-**

அறிவு இருவகைப்படும். ஒன்று கல்வியறிவு. மற்றொன்று இயற்கையறிவு. அன்றி, அருள் நூல்களை ஓதியதால் உண்டாகிய கல்வியறிவாகிய கருவியறிவையும் அருளாசிரியரால் உணர்த்தப்பட்டு, உபதேச மொழியைக் கேட்டுச் சிந்தித்து, தெரிந்து நிட்டை கூடியதனால், முருகனுடன் அத்துவிதமாகக் கலந்து உணர்ந்த மெய்யறிவையும் என்றும் பொருள் கொள்ளலாம்.

**தாமே பெற வேலவர் தந்ததனால்:-**

மேலே கூறிய இருவகை அறிவுகளையும் நாம் பெறுமாறு வேலவர் தாமே தந்ததனால் என்று பொருள் செய்யப்பெற்றது.

இவ்வாறன்றி,

தாமே, பெற- முருகன் இந்த அறிவுகளைத் தாமே பெற்றுக்கொள்ளுமாறு தந்தான் என்றும் பொருள்படும்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே.

-திருமந்திரம் (81)

தாம்பூலத்தை மடித்துத் தன் குழந்தைகள் கையில் கொடுத்து அக்குழந்தைகள் கையால் வாயில் இட; பிதா அதனை அமுதமாக உண்டு மகிழ்வதுபோல், இறைவன் தமிழையும் தமிழறிவையும் அடியாரிடம் தந்து, அடியார்கள் தமிழ்பாடத் தம் செவியால் உண்டு களி கூர்கின்றான்.

**பூமேல் மயல் போயற மெய்ப்புணர்வீர்:-**

பூ மேல்- பூதலத்தில் நீங்கள் வாழ்கின்ற வரை.
மயல்போய்- மயக்கம் நீங்கப்பெற்று.
அற- அறத்துடனும், மெய்- உண்மையுடனும், புணர்வீர்- சேருங்கள்.
மயல்போய் அற- மயக்கம் போய் அற்றுப்போக என்றும் பொருள்படும்.
மெய் புணர்வீர்- உண்மையோடு கலந்தவர்களே! என்றும் பொருள்படும்.
மெய்ப்பு உணர்வீர்- உண்மையை உணர்ந்தவர்களே! என்றும் பொருள்படும்.
அற- நன்றாக உண்மை நெறியில் சேர்ந்து நிற்பீர் எனவும் பொருள்படும்.
தருமத்தையும் சத்தியத்தையும் புணர்ந்தவர்களே என்றும் பொருள்படும்.

**நாமேல் நடவீர் நடவீர் இனியே:-**

மனிதனுக்குக் கால்நடை, நாநடை, மனநடை என மூன்று நடைகள் உண்டு.

விலங்குகட்டு மனநடையும் நாநடையும் இல்லாமையால் அவைகள் கால்நடைப் பிராணிகள் ஆயின.

நன்றாகப் பேசுபவர்களைப் பார்த்து, பேச்சுநடை நன்றாகவுள்ளது என்கின்றோம். மனதில் ஒழுக்கமில்லாதவர்களை அவர் நடைதவறியவர், நடை பிசகியவர், நல்ல நடையில்லாதவர் என்கிறோம்.

காலால் நடக்கின்ற உலகினரே! இனி நாவினால் முருகனைப் பாடி நடவுங்கள் என்று அருணகிரியார் இப்பாடலில் உலகினரைப் பார்த்து உபதேசிக்கின்றார்.

நாவே நடவீர் என்பதற்கு, நாம்- அச்சம் எனப் பொருள் கொண்டு அச்சம் ஏன்? அப்பெருமானை நோக்கி நடவுங்கள் என்று உபதேசிப்பதாகவும் கொள்ளலாம்.

நாமேல் நடவீர்- நாவினால் நடவுங்கள். நாவைக் கொண்டு நடவுங்கள். உருபு மயக்கம்.

இப் பாடல் உலக மக்களுக்கு அடிகளார் உபதேசித்தது.

## கருத்துரை

முருகப்பெருமான் நமக்குக் கலையறிவையும் மெய்யுணர்வையும் தந்தருளியதனால் அப்பரமனையே பாருங்கள்.

(தொடரும்...

# பெரியவர் வினாவும் ஞானியின் விடையும்

திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

முன்னைய நாள் ஒன்றில் பெரியவர் ஒருவர் நல்ல விதிவசத்தால் ஒரு ஞானியை எதிர் காணும் பூர்வ புண்ணியம் கை கூட்டி வைத்தது.

பெரியவருக்கு ஞானியாருடைய நடை உடை பாவனை உணவு உறக்கம் உறவாடும் முறைமை யாவும் வியப்பை விளைத்தது. பெரியவர் ஞானியாரிடத்தில் சில சந்தேகங்களைத் தெளிவாக்கிக் கொள்ள விருப்புக் கொண்டார்.

பெரியவர் ஞானியாருக்கு மதிப்பான வணக்கம் செலுத்தினார். பின்னர் இவ்வாறு ஒரு வினாவை விடுத்தார்.

" நல்லாரைக் காண்பதுவும் நன்று" என்று ஔவையார் எடுத்து மொழிந்தார். நல்லவராகிய உங்கள் வருகையால் நன்மை சிறக்கட்டும்.

எங்கே இருந்து நீங்கள் வந்தீர்கள்? என்று வினாவினார் பெரியார்.

சற்று நேரம் சிரிப்பில் ஆழ்ந்தார் ஞானியர். பின்பு பதில் அளித்தார்.

"யாதும் ஊரே.." என்றார் (எல்லா ஊர்களும் எமக்கு ஊராகும்)

பதிலைக் கேட்டுத் திணறிப் போனார் பெரியவர். ஞானியார் ஒரு பரதேசியராக இருக்கலாம் என்று மனதில் அவரை மதிப்பீடு செய்து கொண்டு பின்னர் வினவினார்.

"உங்கள் உறவினர் யாரோ?"

ஞானியார் முன்னைய நீங்கா முறுவலோடு மொழிவார்;

"யாவரும் கேளிர்" (எல்லோரும் உறவினராவார்)

பெரியவர் ஞானியாருடைய அறிவு ஆற்றலை வியந்தார். மேலும் அவர் அறிவைக் குடைய வேண்டும் என்று ஆவல் கொண்டார்.

ஊரவரெல்லாம் உறவினர் என்றால் தீமை புரிவதற்கு ஏன் முனைகின்றார்கள்?

"தீதும் நன்றும் பிறர் தரவாரா"

அதன் வழிச்சாரும். அவை யாவும் அவரவர் தேடிக் கொண்டது. இது நிச்சயம். அது இரண்டாம் ஆளினால் ஆகாது!

"துன்பம் சூழும் போது துயரமும் இன்பம் நாடும் போது மகிழ்வையும் உணருகிறோமே?"

அது எல்லாம் மாயையின் மயக்கச்சத்தி. மாயையை வெல்லுதல் வேண்டும். வென்று விட்டால் உண்மை வெட்ட வெளிச்சமாகும். இதை சிந்தியுங்கள்.

"முருகப் பெருமான் கிரவுஞ்ச கிரியை ஞானசத்தி வேலால் பிளந்தார் என்றால் ஞான அறிவால் மாயையை உடைத்தார் என்று தானே பொருள்.

பெரியவர், உணர்வற்று இருந்து கேட்டார்:

"வாழ்தல்........? "

"இனிதென மகிழ்ந்தன்று மிலமே

கொழும்பு தமிழ்ச் சங்கம்



நூலகம்

"முனிவு

"இன்னா தென்றலு மிலமே....

"அதனைத் தான் ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்" என்பார்கள் போலும் என்றார் பெரியவர்.

சைவ சித்தாந்தக் குறியீடு:-

"இருவினை ஒப்பு - இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

"உடற்பசிக்கு உணவு யாசிக்கத்தானே வேண்டும்" என்றார் பெரியவர்.

" ஊர்கள் தோறும் அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கார் ஐயம்"

"இளைப்பாற்றலுக்கு ஓலைக் குடிலாவது ஒடுங்க வேண்டுமே...!

சற்று நேரம் சான்றோர் சிரித்தார். அவர் வாய் முணு முணுத்தது:

"புகலிடமாம் அம்பலங்கள் பூமி தேவியுடன் கிடந்தாள் புரட்டாள் பொய்யன்று மெய்யே. அதுகேட்ட பெரியவர் அமைதி அடைந்தார். கோடானு கோடியாகப் பொன்னைத் தேடியும் தேடமுடியாத தத்துவ தார்பரியத்தை ஞானினார் நன்றே தந்தார்.

சான்றோருக்கு ஏதாவது கொடுக்கலாம் என்று கையை நீட்டினார் பெரியவர்.

ஞானியாரிடத்திலிருந்து வந்த வாய் மொழி நீட்டிய கரத்தை மடக்கிவிட்டது.

"கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"

எடுத்தாண்ட நூல்கள்:- புறநானூறு, கந்த புராணம், திருமுறை 6,12.

---

## மனசே...மனசே.... குழப்பம் என்ன....?



வயோதிக விவசாயி, தன் பேரனுடன் குளிர்நகரம் ஒன்றில் இருந்த பண்ணையில் வசித்தார். தினமும் அதிகாலையில் கதகதப்புக்காக அடுப்பின் அருகே அமர்வார். அப்போது பகவத்கீதை படிப்பார். இவர் என்ன செய்கிறாரோ, அதை அவரது பேரனும் அப்படியே செய்வான். ஒருமுறை தாத்தாவிடம், உங்களைப்போல் நானும் கீதை படிக்கிறேன். ஆனால் அர்த்தம் புரியவில்லை. இதை இப்படி கஷ்டப்பட்டு படிக்க என்னதேவை இருக்கிறது? என்றான்.

குளிருக்காக அடுப்பில் கரி போட்டுக்கொண்டிருந்த தாத்தா, கரி இருந்த கூடையைச் சிறுவனிடம் தந்து, இதை ஆற்றுக்குக் கொண்டுபோய் நிறையத் தண்ணீர் பிடித்து வா, என்றார். பேரனும் தண்ணீர் எடுத்தான். வீடு திரும்புவதற்குள் தண்ணீர் ஒழுகி விட்டது. தாத்தா அமைதியாக, நீ இன்னும் வேகமாக வா, எனக்கூறி மறுபடியும் அனுப்பி வைத்தார்.

இம்முறை சிறுவன் ஓடி வந்தான். ஆனாலும் கூடை காலியாகி இருந்தது. இது இயலாத காரியம் என்று புரிந்துகொண்டவன், போங்க தாத்தா! இது தேவையில்லாத வேலை என்றான். அதற்கு முதியவர், எது தேவையில்லாதது? முதலில், நான் கூடையைக் கொடுத்தபோது கரி ஒட்டிக்கொண்டு மிகவும் கறுப்பாக இருந்தது. ஆனால் அடிக்கடி தண்ணீரில் அமிழ்த்தி எடுத்ததால், அது இப்போது சுத்தமாகிவிட்டது.

இதேநிலை தான் நமக்கும். கீதையைப் படிக்கும்போது, அதன் அர்த்தம் உனக்கு புரியாமலோ, நினைவில் நிற்காமலோ போகலாம். ஆனால், இளமை முதலே தொடர்ந்து படித்தால், மனதில் குழப்பத்திற்கே இடங்கொடுக்க மாட்டாய். நல்லெண்ணங்களை நிறைத்து சுத்தமாக வைத்திருப்பாய். அதுதான் கீதையின் மகிமை, என்றார்.

# இந்து சமய பண்பாட்டு மரபில் மடங்கள் பற்றிய ஆய்வு

[சிறப்பாக யாழ்ப்பாணம்]

திரு கு. கோபிராஜ் அவர்கள்

திருக்கேதீஸ்வரத்தை எடுத்து நோக்கும் போது இங்கு பல மடங்கள் காணப்பட்டன. ஈழத்து சிவனடியார் திருக்கூட்டத்தினரால் 1952 "திருவாசகமடம்" நிறுவப்பட்டது. இங்கு சிவனடியார்கள் தங்கிச் செல்வதையும் மகேஸ்வரபூசை நடைபெறுவதையும் காணக் கூடியதாக இருந்தது.

சண்டிலிப்பாயில் கதிரவேலு சிறாப்பர் கீரிமலை நகுலேஸ்வரத்தில் "சிறாப்பர் மடம்" என்ற பெயரில் ஒரு மடத்தை நிறுவி னார். கீரிமலை சிவன் ஆலயத்தில் இருந்து நேரே சென்று கிரியைகள் செய்ய இம்மடம் உதவியது. ஆடி அமாவாசை தீர்த்தமாட வருபவர்களுக்கு புகலிடம் கொடுத்து தங்க வைக்க உதவியது. இங்கு விநாயகர் ஆலயமும் உண்டு. அன்று கீரிமலை சிறாப் பர் ஆலயத்தில் நாவலர்- ஏனைய சமய பெரியோர்களது பிரசங்கம் நிகழ்த்தப் பட்டுள்ளது. சிறாப்பர் மட வாயில் விதிமுறை ஒன்று பொறிக்கப்பட்டு உள்ளது.

"..... இப்பந்தல் சைவசமயிகளல்லாத பிற சமயத்தவர்களுக்கு தாகசாந்தி செய்து கொள்வதற்கல்லாது வசிப்பதற்கு இடம் கொடுக்காது. இவ்வாறு கட்டிடத்திற்கு உள்ளாக மாமிசம் புசித்தல், ஆசௌசப் படுத்தல், சுருட்டு புகைத்தல் ஆகாது. போசனம் செய்பவர்கள் எச்சி மாற்றிப்போக வேண்டியது, வசிப்பவர்கள் சமாதானமாக இருந்து போகவேண்டியது" இவ்வாறு யார் யார் உட்சென்று தங்கமுடியும் எனக் கூறப் பட்டு உள்ளது. இன்று இம்மடம் சிதை வடைந்திருந்தாலும் இவ்வாசகங்கள் காணப் படுகின்றன.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ் தானத்தில் செவ்வாய், வெள்ளி நாட்களிலும், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் வெள்ளிதோறும் அன்னதானப் பணி இடம் பெறுகிறது. அன்னை தங்கம்மா அப்பாக் குட்டி இறக்கும்வரை அன்ன சத்திர மண்ட பத்தில் அன்னதான பணி செய்ததுடன் 101 அடி நீளமான அன்னசத்திரம் அமைத்தார். இதைவிட துர்க்கை அம்மன் ஆலயத்தில் மகளிர் இல்லம், வைத்தியசாலைக்கு உதவு தல், நோயாளிக்கு உதவுதல், நூல் வெளி யீடு, மாநாடு நடத்துதல், அறநெறிப் பாட சாலை; அகதிகளுக்கு உதவுதல் போன்ற பல சேவைகள் இன்று மேற்கொள்ளப் படுகின்றன. 1961 திருப்பணியில் இணைந்த அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் பணி இன்றும் தொடர்கின்றன. அன்றைய மடங் களே இன்று பல பெயர்களால் ஆச்சிரமம், ஆதீனம், தேவஸ்தானம் என பெயர் பெற்று பணியாற்றுகின்றன.

நயினை நாகபூஷணி ஆலயத்தில் நித் திய அன்னதானப்பணி ஆபுத்திரனும், மணி மேகலையும் ஈடுபட்ட வரலாறு கொண்டது. அடியாருக்கு 1960க்கு முன்பு ஆலய வீதி களில் இருந்த நாட்டுகோட்டை நகரத்தார் மடத்திலும், ரகுநாத முதலியார் மடத்திலும், வேலணை மணியகாரன் முதலியார் மடத் திலும் கொட்டடி தருமலிங்கம் மடத்திலும் இயன்றளவு அன்னதானப் பணியை செய்து

வந்தார்கள். நயினை சுவாமியாரும் தம் அடியார்மூலம் அன்னதானம் செய்து வந்தார். காலப்போக்கில் அம்பாளின் அருட்பிரகாசம் நாடெங்கும் பரவ மடசேவை அதிகரிக்க அவ்வூர் பெருமக்கள் 1960இல் இருந்து அமுதசுரபி அன்னதான சபை அமைத்து பணிசெய்து வருகின்றனர்.

அன்னதானக் கந்தன் என வர்ணிக் கப்படும் சந்நிதி முருகனின் திருத்தலத்தில் சந்நிதியான் ஆச்சிரமமும் நித்திய அன்ன தானப் பணியுடன் பன்முகப் பணிகளாக ஒரு மடத்தின் அனைத்துப் பணிகளையும் செய்து வருகிறது. மறைந்த மயில்வாகனம் சுவாமிகளின் சீடரான மோகனதாஸ் அவர் கள். 1988 பங்குனி உத்தரத்தில் சந்நிதியான் ஆச்சிரமம் தோற்றம் பெற்றது. பின் படிப் படியாக முன்னேற்றங் கண்டு அன்னதானப் பணியை சுவாசமாகக் கொண்டு முதி யோருக்கு நிரந்தரமாக நித்திய அன்னதானப் பணி செய்து வருவதுடன் முருகனைத் தரிசிக்க வரும் 50 பேரானாலும் 500 பேரானாலும் அன்னமளிப்பதுடன் 63 நாயன் மார் குருபூசையுடன் மகேஸ்வரபூசையும் நடைபெற்று வருவதைக் காணலாம்.

இதைவிட இலவச வைத்திய சேவை, ஞானச்சுடர் வெளியீடு, விருது வழங்கல், சமூகசேவை, ஆண்டுமுடிவில் வாசகர் போட்டியும் பரிசில் வழங்குதலும் போன்ற பல பணிகளைச் செய்து ஆல மரமாக விளங்குகிறது. யாழ்ப்பாணத்தில் ஆலயத்தை அண்டிய பகுதியில் காணப் படும் மடங்கள் திருவிழாக் காலங்களில் மட்டும் அன்னதானப் பணியைச் செய் கின்றன. சில ஆலயங்களில் கிழமையில் ஒருநாள் அல்லது இருநாள் மட்டுமே அன்னதானப் பணியைச் செய்கின்றன. எவ்வகையிலும் மடங்களில் நடைபெறும் அன்னப் பணியானது எமது மதத்தினைப் பெருமைப்படுத்துவதாகும்.

(தொடரும்...

## சந்நிதிக் கந்தன் கூற்றோர் கவிமாலை- 33

-இராசையா குகதாசன்-

**பல்லவி**

**தாட்துணைக் கமலவீடு தாராயோ? - முருகா!**
**பாட்டுரைத் துனக்களித்த பாவியேன் நானுமுய்ய**

**அநுபல்லவி**

**வீட்டுறு வாழ்வருள வியன்செல்வச் சந்நிதியின்**
**மாட்டிருந் தனைத்துயிர்க்கும் மகிழ்வினைத் தருமுருகா!**

**சரணம்**

**ஆட்டுரு ஏறிச்சூரன் அகந்தையை அழித்திடவே**
**தோட்டிரு முண்டமெலாம் சிதறிடச் செய்தவனே!**
**ஈட்டிரு வினையேக இணையடியே பணிந்தேன்**
**மூட்டிடு வினைதீர்த்து முத்தியை நல்கியுந்தன்**
**வாட்பெரும் கண்மாதர் வலமிட மாய்வந்தே**
**கேட்டிடு வரம்நல்கி கிளையோடு வாழவைப்போய்!**
**ஆட்கொண்டு அருளாயோ? ஐயனே! குமரேசா!**
**மீட்டொரு பிறவிவாரா மேனிலைதந் துனது (தாட்துணை)**

# தேவாரம் வேதசாரம்

திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளும் முழுமுதற் கடவுளுமான சிவபெருமானைக் குறித்துப் பாடல் பெற்ற தேவாரத் திருப்பதிகங்கள் ஒவ்வொன்றும் தித்திக்கும் தீந்தமிழ்ப் பனுவல்களாகும். சைவ சமயிகளின் அரும் பெரும் பொக்கிஷமான இந்தத் தேவாரத் திருப்பதிகங்களைத் திருவாய் மலர்ந்து அருளிச் செய்தவர்கள் சைவ நாயன்மார்களாவர்.

சிவபெருமானுடைய அருட்பெருங் கருணையை விரித்துரைக்கும் தேவாரம் வேதசாரமாகும். திருமறைகளான இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகியவற்றின் பொருள் பொதிந்த சாரமே தேவாரமாகும். இந்த இனிய தேவாரங்கள் பல அற்புதங்களை விளைவித்ததுமல்லாமல் உயிருள்ளவையாகவும் விளங்குகின்றன. ஆகவே அற்புதங்கள் செய்த அதியற்புத தேவாரங்கள் எமது வாழ்விலும் அற்புதங்களை ஏற்படுத்தும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாகிய சிவபிரான் தன்னுடைய அன்புக்குரிய நாயன்மார் மூலமாகப் பெறற்கரிய தேவாரத் திருப்பதிகங்களை அருளிச் செய்ய வைத்ததன் காரணம் என்னவெனில் சைவமக்கள் அனைவரும் அவற்றை முறையாகப் பாட வேண்டும் என்பதேயாகும். அதனால்த்தான் அதற்குத் திருமுறையென்று பெயரிடப்பட்டுள்ளது.

"திருமுறைச் செல்வம்" என்று போற்றப்படுகின்ற அரிய பெரிய தேவாரத் திருப்பதிகங்கள் ஓதப்படும்போது பண்முறை பிறழாது முறையாகப் பிழையின்றி ஓதப்பட வேண்டும். இது கட்டாயமாகக் கவனிக்கப்படவேண்டும். பிழையாகப் பாடுவது குற்றமாகும். எமது சைவாலயங்களிலே இந்தத் தேவாரம் படும்பாடு மிகவும் வேதனைக்குரியது.

வேதங்களின் சாராம்சமாகத் திகழ்கின்ற தேவாரத் திருப்பதிகங்கள் நாயன்மார்கள் மூலமாக வெளிப்பட்டு அற்புதங்களை நிகழ்த்தி சிவபெருமானுடைய அருட் கருணைத்திறனைப் புகழ்ந்து பறைசாற்றி நிற்கின்றன. முதல் மூன்று திருமுறைகளும் திருஞானசம்பந்தருடைய பதிகங்களாகும். இவையனைத்தும் ஆழ்ந்த கருத்துக்களும் இயற்கை அழகு வர்ணங்களும் அற்புத சக்திகளும் நிறைந்த சிறப்பான பதிகங்களாகும்.

திருஞானசம்பந்தர் பொற்றாளம் பெற்றமை, முத்துச் சிவிகையும் முத்துக் குடையும் பெற்றமை, பொற்கிழி பெற்றமை, பூம்பாவைக்கு உயிர் கொடுத்தமை, சிவலிங்கம் சாட்சி சொன்னமை, பாண்டியன் வெப்பு நோய் நீக்கியமை, அனல்வாதம் - புனல்வாதம் செய்தமை, ஆண் பனைகளைப் பெண் பனைகளாக மாற்றியமை, அடியார்களுடன் சோதியிற் கலந்தமை முதலியன நடைபெற்றபோது பாடப் பெற்றவை; மேலும் படிக்குந்தோறும் இன்பம் அளிப்பவை மிகச் சிறந்த கருத்தாழமும் மிக்கவை.

ஆலயங்களிலே தேவாரம் ஓதச் சொன்னால் முழுவிருப்பத்தோடு முன் வருபவர் குறைவு ஏனோதானோ என்று பாடி விட்டுப் போய் விடுகின்றார்கள். இந்த நிலை

மாற வேண்டும். தேவாரம் பாடுவதற்கு நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு முன்வர வேண்டும். அப்போதுதான் சைவசமயம் வளர்ச்சியுறும்.

திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் ஒவ்வொன்றும் அநுபவ முதிர்ச்சியையும் யாக்கை நிலையாமையையும் திருத்தொண்டின் அருமை பெருமையையும் எடுத்தியம்பி நிற்கின்றன. நாம் அவற்றை ஓதும்போது மனித வாழ்க்கையின் தத்துவார்த்தம் வெளிப்படுகின்றது. இவை நாலாம் ஐந்தாம் ஆறாம் திருமுறைகளாகும்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்து அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் தோழமை உணர்வையும் உறுதியான செய்கையையும் வெளிப்படுத்துகின்றன. மேலும் அவற்றை நாம் ஓதும்போது சிவபெருமான் தமது அடியார்களுக்காக எதையும் செய்யவல்லவா் என்பது தெளிவாகப் புலப்படுகின்றது. இவை ஏழாம் திருமுறையாகும்.

ஆகவே நாயன்மார்களின் உணர்வுகளையும் சிவபொருமானின் அருட்பெருங் கருணைத் திறத்தையும் மிக அழகாகக் கூறிநிற்கும் தேவாரத் திருப்பதிகங்கள் அருமையும் பெருமையும் மிக்கவை. சிவபெருமானுடைய திவ்விய கடாட்சம் கிடைத்து விட்டால் அதைவிடப் பேறு வேறில்லை. ஆதலால் வேதசாரமாக விளங்குகின்ற சைவ மக்களின் அரிய பொக்கிஷமான தேவாரத் திருமுறைகளை முறையாக ஓதி ஆண்டவனுடைய அருட் பெருங்கருணைக்குப் பாத்திரமாக உய்தி பெறுவோமாக.




(தொடர்ச்சி...

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

**5. நிரந்தர ரமணன்**

என்றும்போல் ஒருநாள் பகவானைத் தொடர்ந்து மலைமேல் போய்க் கொண்டிருந்த குஞ்சு ஸ்வாமி பகவானின் தொடையின்மேல் பாகத்திலிருந்து சீழ்போல் ஏதோ ஒரு திரவம் வடிவதைக் கண்டார். பகவான் அதை ஒரு சிறு துண்டினால் துடைத்துக் கொண்டார். திகைத்து நின்ற குஞ்சு ஸ்வாமியிடம், பகவான், "இது சுவாமிக்குக் கறையான் தந்த பிரசாதம்" என்று குறுநகை புரிந்தார்.



பாதாள லிங்கத்தில் புற உணர்வற்று, சச்சிதானந்த பிரமத்தில் லயித்து இருந்த காலத்தில் தேள், கறையான் முதலியன ரமணரின் துடைகளைத் துளைத்து அச்சமின்றிக் குடியேறின. அவை கடித்த உணர்வோ, சீழ் பிடித்ததையோ ஒன்றும் அவர் அறிய வில்லை. மற்ற ரணங்கள் ஆறியபின்னும் கறையானின் விஷம் மாத்திரம் பகவானின் உடலில் நிரந்தரமாகத் தங்கிவிட்டது. "இந்தமாதிரி ஒழுகுவது வருடம் இரண்டொரு முறை நடப்பதுண்டு. ஆனால் மற்றவர் எவரும் இதுவரை இதைக் கவனித்ததில்லை" என்று பகவான் குஞ்சு ஸ்வாமியிடம் தெரிவித்தார். "1940களில்தான் இது நின்றது" என்றார் குஞ்சு ஸ்வாமி.

பகவானின் பள்ளித்தோழன் வேளச்சேரி ரங்கநாதய்யரின் மகள் அழகம்மாவுக்குத் தன் தாயார் செல்லம்மா விஷயமாகப் பேசுவதில் மிகுந்த ஆர்வம். அவற்றுள் ஒன்று.

"ஒருநாள் அம்மா ஆச்ரமத்துக்குப் போனபோது பகவானிடம், தன் இரண்டு கல்யாண வயதடைந்த பெண்கள், பர்வதத்திற்கும், மீனாட்சிக்கும் தகுந்த வரன் கிடைப்பதில் இருந்த கஸ்டத்தைத் தெரிவித்துக்கொண்டாள். பகவான் மனம் கனிந்து, இரண்டு தமிழ்ப் பாடல்களை எழுதிக் கொடுத்தார். ஒன்று கணபதி பேரிலும், மற்றொன்று சுப்ரமணியன் பேரிலும் இருந்தது. அவற்றை பாராயணம் செய்த என் தமக்கைகள் இருவருக்கும் நல்ல இடங்களில் திருமணமாயிற்று. இதில் குறிப்பிடத்தக்க விஷயம் யாதெனில், அவர்களுடைய கணவன்மார்களின் பெயர்கள் முறையே கணபதி அய்யர் மற்றும் சுப்பிரமணிய அய்யர் ஆகும்!"

"மற்றொரு நாள், அம்மா செல்லம்மாவும், மற்றொரு பெண்ணும் பகவான் முன்னால் அமர்ந்திருந்தனர். மழை பெய்யும் அறிகுறிகள் இருந்ததால், ஊருக்குள்ளிருந்த வீட்டுக்கு நனையாமல் போய்ச்சேரவேண்டுமே என்று அம்மா நினைத்துக் கொண்டாள். ஆனால் பகவான் அனுமதி கொடாமல் எப்படிப்போவது? என்றுமில்லாமல் அன்று பார்த்து பகவான் அபூர்வமாக அம்மாவைப் பாடச் சொன்னார். அந்தப் பாட்டைப் பாடிமுடித்ததும் இன்னொன்றைப் பாடச்

சொன்னார். பாட்டுக்கள் தொடர்ந்தன. மழை பலமாகப் பிடித்துக்கொண்டது. முடிவில் பகவான் அவளைப் போக அனுமதித்தபோது மழையும் நின்றிருந்தது. அவர்கள் வீடு போய்ச்சேரும்வரை நின்றிருந்த மழை, அவர்கள் வீடு போய்ச் சேர்ந்தவுடனேயே பலமாகக் கொட்ட ஆரம்பித்தது. இரவு முழுவதும் ஓயவில்லை. மறுநாள் பகவான், ''செல்லம்மா! நீ நனையவில்லையே? மழையில் சிக்கிக் கொள்ளாமலிருக்க வேண்டும் என்று நினைத்தாயல்லவா''? என்று கேட்டார். அம்மாவுக்கு ஒரே அதிசயம். தன் மனதில் மழையில் அகப்பட்டுக்கொள்ளலாகாதே, என்று நாம் சற்றுக் கவலைப்பட்டது எப்படி இந்த பகவானுக்குத் தெரிந்தது? மழையில் நனைதல் போன்ற மிகச் சிறிய விஷயங்களில்கூட பகவான் எத்தனை இயற்கையாக, பரிவாகத் தன் அடியார்களைக் காப்பாற்றுகிறார்.

வட நாட்டிலிருந்து வந்திருந்த ஒரு அன்பர் நிறைய கற்கண்டை பகவானுக்குச் சமர்ப்பித்தார். அவர் மனதில், தன் குடும்பத்துக்கும் கொஞ்சம் பிரசாதம் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. பாவம்! பகவானுக்கு முன் வைத்த பொருள் எல்லாமே உடனுக்குடனே ஹாலிலேயே விநியோகமாகிவிடும் என்பது அவருக்குத் தெரியாது. பணியாள் கற்கண்டுத் தட்டைப் பகவானிடம் கொண்டு போனார். பகவான் சிறிய துண்டுகள் எடுத்துக்கொள்ளும் பாவனையில் தட்டிலிருந்த துண்டுகள் அனைத்திலும் கர ஸ்பரிசம் படும்படி செய்து விட்டார்! தான் ஒரு சிறுதுண்டை எடுத்துக் கொண்டு என்றுமில்லாத வழக்கமாகப் பணியாளிடம் எல்லாவற்றையும் விநியோகித்து விட வேண்டாமென்றும், சிறிது தட்டிலேயே மீதம் வைத்துவிட்டால், அந்த அன்பர் தன் குடும்பத்தாருக்குப் பிரசாதமாகத் தர வீட்டுக்குக் கொண்டு போவாரென்றும் பகவான் சொன்னார். அதற்காகத்தான் எல்லாத் துண்டுகளிலும் தன் கை படும்படி செய்து, அன்பர் உள்ளூர ஆசைப்பட்டபடி குடும்பத்துக்கும் பிரசாதம் கிடைக்கச் செய்ய ஒரு வழி காண்பித்தார். பகவானது கரம் பட்டதெல்லாம் பிரசாதமல்லவா?

''பிரசாதம்'' என்றதும், ஒரு அன்பர் எப்படி பகவானின் சமநிலையைச் சோதித்துப் பார்க்க எண்ணி சுத்தமாக ஏமாந்து மகிழ்ந்த சம்பவம் ஞாபகம் வருகிறது.

அன்று மிகப் பிரபலமாயிருந்த ஆயிரம் முகம் ராம்குமார் தன் முகதசை நார்களின் அசைவாலேயே, சர்ச்சிலோ, காந்தியோ, ஐன்ஸ்டீனோ- யாருடைய முகத்தை வேண்டுமானாலும், நினைத்த கணத்திலேயே நம் கண்முன் கொண்டு வந்துவிடுவார். இவர் பகவானுடன் சில நாட்கள் தங்கியிருந்த சமயம் இவரது வித்தையை பகவான் வியந்ததுண்டு. ராம்குமார், அன்பர்கள் பகவானுக்குப் பழங்கள் கொண்டு வந்து சமர்ப்பிப்பதையும், ஒரு பங்கைப் பிரசாதமாகப் பெறுவதையும் கவனித்துவிட்டு ஒருநாள் தானும் ஒரு மிகப்பெரிய மாம்பழத்தை காணிக்கையாகக் கொண்டு வந்து வைத்தார். உடனே பகவான், அங்கிருந்த ஒரு சிறிய மாம்பழத்தைப் பிரசாதமாகக் கொடுத்தார்.

மலர்ந்த புன்சிரிப்புடன் அவரைப் பார்த்த பகவான்முன் நெடுஞ்சாண்கிடையாக விழுந்த ராம்குமார் சொன்னார்; ''நான் தோற்றுவிட்டேன் பகவான்! கடையிலிருந்த பழங்களில் மிகப்பெரியதைத் தந்தால் பகவான் எப்படி பிரசாதம் தருவீர்கள் என்று நினைத்தேன். ஜயம் உங்களுடையது. நீங்கள் சிறிய பழத்தை பிரசாதமாகத் தந்து எனக்குப் பாடம் புகட்டி விட்டீர்கள். பகவான் கைமலர் பட்டதெல்லாம் பிரசாதமல்லவா!

(தொடரும்...



# சிறுவர் கதைகள்



திருக்குறள் கதை

## மனைவி நல்லாள்

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். (குறள்: 56)

மனைவி நல்லாள் எப்படி அமைந்திருக்க வேண்டும்? என்ற இலக்கணம் இது. தன்னைக் கற்புள்ளவளாக, சக்தியுள்ளவளாகக் காத்துக்கொள்ள வேண்டும். தன்னை சொந்தமாகக் கொண்ட தன் கணவனை சுகமுள்ளவனாக, மானமுள்ளவனாகப் பாராட்டிக் காக்க வேண்டும். கைப்பிடித்த கணவன் அக்னிமுன் சொன்ன பெருமை மிக்க தேவையான வாக்குறுதியை, "நல்ல பெண் என மக்கள் வாழ்த்துவதைக் காப்பாற்றி, சோர்வில்லாதவளாக ஒருத்தி இருக்கவேண்டும்" எனப்படுகிறது.

இப்படி ஒருவள் இருந்தாள். அவள் பெயர் சாவித்திரி. மத்ரா தேசத்து அரசன் அச்வபதியின் புத்ரி ஆவாள். இவளுக்கு மண வயது வந்தது. அறிவும் அழகும் இளமையும் செல்வமும் மிக்க அவளை மணக்கப் பலர் முன்வந்தனர். ஆனால், அச்வபதியோ தன் மகளே தன் விருப்பப்படி மணாளனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும் என்று விட்டிருந்தான்.

சாவித்திரி சிறு படையுடன் பல இடங்களுக்கும் போய் வந்தாள். ஒரு காட்டில் வேட்டையாட வந்த சத்யவானைப் பார்த்துக் காதல் கொண்டாள். தந்தையிடம் வந்து சொன்னாள்.

"அப்பா! சிங்கத்திடமிருந்து என்னைக் காத்த சத்யவானை நான் கடிமணம் புரிய விரும்புகிறேன்" என்றாள்.

நாரதரை அழைத்து அச்வபதி யோசனை கேட்டான்.

"சால்வ நாட்டு மன்னன் த்யுமத்சேனனின் பிள்ளை சத்யவான். நல்லவன். அறிவாளி ஆனால்...?'

"அவனுக்கு இன்னும் ஆயுள் இன்னும் ஓராண்டுதான். மேலும் நாடிழந்து மகனுடன் அரசரும் ராணியும் காட்டில் வசிக்கிறார்கள்.

இதைக் கேள்விப்பட்டும் சாவித்திரி சத்யவானையே மனதால் வரித்து விட்டதால், அவனையே மணவாளனாகப் பெறுவேன் என்று பிடிவாதமாகக் கூறிவிட்டாள். தன் வாக்கைக் காக்க வேண்டி அச்வபதி சத்யவான் சாவித்திரி திருமணத்தைச் செய்வித்தான்.

குடும்பத்திற்கேற்ற குணமுள்ளவளாகி, கணவனின் நிலைக்கேற்ப சாவித்திரி காட்டில் இல்லறம் செய்தாள். இல்லறப் பயனை அடைய அதுதானே மனைவியிடம் தேவை? மனைவி பண்புள்ளவளானால் குடும்பம் எல்லாமுடையது ஆகும். அப்படி இல்லாதவருக்குத்தானே துன்பம். சத்யவான், பெருமையோடு கற்புள்ள சாவித்திரியுடன் நிறைவாக

வாழ்ந்தான். "பெய்" என்றதும் பெய்யும் மழை உழவிற்கு எவ்வளவு உதவி! அதுபோல இன்ப வாழ்விற்கு ஏற்றவளாக அவள் அவனுக்கு இருந்தாள்.

சீதையை இராவணன் சிறையில் வைத்துக் காத்தான். ஆனாலும், கற்பெனும் மன உறுதியுடனிருந்த அவளின் நிறைமனது அவளை அவனிடமிருந்து காத்தது. இந்த நிறைமனமே முக்கியம்.

"இப்படிப்பட்ட சாவித்திரியை மணந்த சத்யவான் சொர்க்கம் போன்ற வாழ்வை உடையவனானான். பிறர் முன் பீடுநடை போடும்படி அவன் புகழை அவள் காத்தாள். இப்பேர்ப்பட்டவளின் பண்புகளே குடும்ப வாழ்விற்குப் புனிதம் இப்படிப்பட்ட மனைவிமூலம் நன்மக்களை வாரிசாகப் பெறுவதே இல்லறத்திற்கு அழகு".

நாரதர்மூலம் கணவனின் ஆயுள் பற்றிக்கேட்டிருந்த அவள் தன்னைக் கடும் விரதங்களால் புடமிட்டுக் கொண்டு, கற்பின் வலிமையினால் கூர்மையான புலன்களைப் பெற்று ஜபம், பூசைகளால் சக்தியைத் தெய்வீமாகப் பெற்றிருந்தாள்.

ஒருநாள் விறகு வெட்டப்போன சத்யவான் திடீரென தலைவலி மிக, இறந்துவிட்டான். அவனுயிரைக் கொண்டுபோக வந்த எமன் சாவித்திரியின் கண்களுக்குத் தெரிந்தான். அவனைத் தொடர்ந்துபோன அவள் எமனை வணங்கினாள். தன்னைத் தொடரும், கற்பரசியை வியந்த அவன், "தீர்க்க சுமங்கலி பவ" என வாழ்த்திவிட்டான். சிரித்த அவள், "என் மணாளனைக் கொண்டுபோகும் நீர் வாழ்த்திய சொல்லைத் தகைசான்றதைக் காப்பாற்றும். என் கணவனின் உயிரைத் தந்துவிடும்" என்று கேட்டாள். எமனும் "இதுவே விதி போலும்" என்று சத்யவானின் உயிரை அளித்து விட்டான்.

இப்படி சாவித்திரி எமனிடம் போன தன் கணவனின் உயிரையே மீட்டு விட்டாள். மனைவி நல்லாள்-இப்படி அமைந்திருக்க வேண்டும். பலர் பெருமூச்சு விடுவது... கேட்கிறது.

---

## ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

எமது ஆன்மீக நிகழ்வுகளின் முடிவில் எல்லோரும் ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! என மும்முறை கூறி முடிவுசெய்வது சம்பிரதாயமாகவுள்ளது. மும்முறை கூறப்படும் இதனிற் சாந்தியும் சஞ்சலமற்ற நல்ல மனமும், இன்ப துன்பமற்ற பொதுநோக்கும் நிலைத்திடும் உணர்வினைக் குறிப்பதாக சமயச்சான்றோர் கூறுவர்.

ஓம் எனும் பிரணவம் உலகத் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமானதாய் இருப்பதனால் மும்முறை கூறப்படும் ஓம் ஒலியானது தோற்றம், வளர்ச்சி, ஒடுக்கம் என்பதனை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

இதை நன்கு உணர்ந்து நாமும் ஆன்மீக வழியில் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டி இறைவனைப் பணிந்து ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி! என வழிபட்டு ஆன்ம ஈடேற்றம் காண்போம்.

மும்முறை வரும் சாந்தியில்

முதலாவது சாந்தி அமைதியையும்,

இரண்டாவது சாந்தி மனநலனையும்,

மூன்றாவது சாந்தி பொது நோக்கினையும் உணர்த்தி ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி! என அமைகின்றது.

-நீர்வைமணி-

# சமயமும் மனித வாழ்க்கையும்

திருமதி ப. நடராஜா அவர்கள்

ஆனை முகத்தோனே அறிவுச்சுடரே
பானை வயிற்றோனே பராசக்தி பாலகனே
வீணை கைக்கொண்ட விசாலாட்சிகாவலனே
வானையும் மண்ணையும் ஆளும் அரன்மகனே

இந்து தர்மம் பேணி இயல்புவழி நாம் வாழ
முந்து முந்து விநாயகனே மூத்தோர் வாக்கைச்
சொந்தமுடன் பேணிச் சோர்வின்றி வாழ
வந்திடுவாய் கணபதியே வையமுய்ய.

உண்மை அறிவாம் சமய அறிவு உலகமெங்கும் பரவி அழிவிலிருந்து இவ்வுலகைக் காக்க உத்தமர்கள் தோன்ற வேண்டும். புலன்களை அடக்கி உலக நன்மைக்காக நோன்பிருந்து மனுதர்மத்தை அறிந்து அதன் படி வாழ்ந்து தான் பெற்ற அறிவை உலக மெங்கும் பரப்பவல்ல ஓர் குருவை; உலக மெல்லாம் ஏற்றுக்கொள்ளவல்ல ஓர் குருவை காண்பிப்பாய் உலகை வலம் வந்த உமை யாள் பாலகனே.

சித்த சுத்தி பெற்றுச் சிவமாக வாழும் சைவர்கள் வாழ்வு உயர்ச்சி பெற சுத்த சக்தி உலகெங்கும் பரவிநின்று இவ்வுலகை உய்விக்கும் பொருட்டு எழுந்ததே முருகன் கைவேல், வேலின் தொண்டே வேதியர் தொண்டு, வேதியர் தொண்டே வேதமாதா தொண்டு. சைவ சமயமும் மனித வாழ்க்கை நெறியும் உலகெலாம் பரவ; ஞானச்சுடர் ஞால மெல்லாம் சுற்றிச் சுடர் வீச ஆற்றங்கரை வேலன் அருளாசி வேண்டி என் பணியை தொடங்குகின்றேன்.

உலகம் அழிவதற்கான காலம், துர்மரணங்கள் பஞ்சமா பாதகங்கள் தோன் றும்; மனிதர்கள் அவல வாழ்வு தலை யெடுக்கும் என்று தீர்க்கதரிசிகள், ஞானிகள் கூறியிருப்பதாக உலகமெங்கும் வாழும் மக் கள் பேசுகின்றனர். மனித குலம் அழிவை நோக்கிச் செல்லும் காலம் என்று அச்சப்பட்டுக் கூக்குரலிட்டு இறைவன் எங்கோ தூரப் போய் விட்டார்; அவர் மீண்டும் எம்மிடையே வந்து எமது பாவங்களை ஏற்க வேண்டுமென்று கூக்குரலிடுகின்றார்களே ஒழிய அழிவுப் பாதை களிலிருந்து மனிதர்களைக்காக்கும் மனு தர்மத்தை மறந்து விட்டனர்.

பூகம்பம் வரும் அறிகுறி, சூறாவளி, மழை, புயல், எரிமலை வெடித்தல் இவை ஏற்படும் என்று முன்னெச்சரிக்கை செய்வோர் இவை தோன்றுவதற்கான காரணத்தையும் அறிந்து அவை வருமுன் காக்கும் வரைமுறை யையும் அறிந்து செயற்படுவார்களாயின் அழிவிலிருந்து மக்களை இலகுவாகக் காக்க லாம். “வருமுன் காக்கும் வரைமுறையைச் சொல்லுவதுதான் இந்துதர்மம்” 'இந்து தர்மம் அதிக கட்டுப்பாட்டை விதிக்கின்றது. புலன் களை கட்டுப்படுத்திப் புலன்வழி மனத்தைச் செல்லவிடாது இறைவன் வகுத்துத்தந்த நெறியில் மனத்தை வசப்படுத்துவதே மனிதன் சுதந்திரமாக வாழ்வதற்கான வாழ்க்கை நெறி.

புலன் வழி மனத்தைச் செலுத்தி மனம் போகும் போக்கில் வாழ்வது மனிதனை

அழிவை நோக்கி இட்டுச் செல்லும் பாதை. கட்டுப்பாட்டுடன் வாழும் வாழ்க்கை மனிதனை அமைதியையும் ஆனந்தத்தையும் நோக்கி அழைத்துச் செல்கின்றது. மனம் அடங்காமல் மனிதனை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்வது மது, மாமிசம், புகைப்பிடித்தல் போன்ற போதைப் பொருட்பாவனை. இவற்றை முற்றாக விலக்கியது இந்து தர்மம். விலக்கப்பட்டவற்றைப் பாவிப்பதால் மனிதனை இயல்பு வழியிலிருந்து விலகி அழிவை நோக்கி செல்ல வைக்கின்றது. இதைத் தடுப்பது தனி மனித சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்றதென்று கூறும் மனிதர்களால்த்தான் சமுதாயம் சீர கெடுகின்றது. அவலங்கள், பதற்றங்கள், நோய் பிணிகள் என்பவை தோன்றுகின்றன. இவற்றிலிருந்து மக்களைக் காப்பதே மனுதர்மம். இதுவே இந்து தர்மம். விலக்கப்பட்டதை உண்டு உடுத்துக் களிப்பவன் தனக்குத்தானே விலங்கு போட்டுக்கொண்டு விலங்கு வாழ்க்கை வாழ்கின்றான். இறையாணைப்படி விலக்க வேண்டியதை விலக்கி, ஏற்க வேண்டியதை ஏற்று வாழ்பவன்தான் சுதந்திரமனிதனாகச் சுயபுத்தியுடன் வாழ்கின்றான்.

இன்றைய காலகட்டத்தில் பெரும் பாலானமக்கள் மதுவும் மாமிசமுமே விருந்தின் முக்கியத்துவம் என்று கருதுகின்றனர். இத் தகைய விருந்தை உண்டு ஆணும் பெண்ணும் ஆடிப்பாடிக் களித்தல்தான் இன்றைய நாகரீகம் என்று இளைய தலைமுறையினரிடையே மாயத்தோற்றம் உருவாகியுள்ளது. இத்தகைய கொடுமையிலிருந்து எங்கள் குழந்தைகளை எங்கள் வழித்தோன்றல்களை எதிர்கால மனிதர்களைக் காப்பது இந்துக்களின் தலையாய கடமை.

"நான் தீய பழக்கத்திற்கு அடிமையாகிக் கெட்டுப்போய் விட்டேன் என் பிள்ளையாவது இவற்றை விலக்கி நல்லவனாக வாழ வேண்டும்" என அநேகமானோர் கூறுகின்றனர். ஆனால் கல்வியினால் பெறும் அறிவைவிடக் குழந்தைகளுக்கு முக்கியத்துவமானது ஒழுக்கவாழ்வு. எத்தகைய நல்ல புத்தகங்களைப் படித்தாலும் நல்லவர்கள்- பெரியவர்களின் சொற்பொழிவைக் கேட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்த முடியாவிட்டால் இக்கல்வியும் ஒரு பொழுதுபோக்காகவே கணிக்கப்படும். ஆகவே இந்து தர்மம் போதிப்பதை விடச் சாதித்தே வெற்றி பெறுகின்றது. ஏனெனில் நான் கடைப்பிடிக்காத ஒரு தர்மத்தை என் குழந்தைக்குப் போதித்தால் அவனால் எப்படி அதை கடைப்பிடிக்க முடியும். வாழ்ந்து காட்டுபவர்தான் முதற்குரு. பெற்றோர் முன்மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து குழந்தைக்கு முதற்குரு என்பதை நிரூபிக்க வேண்டும். போதனையால் வழிக்காட்டும் குரு வழியை மட்டும் தான் காட்டுவார். வழியில் ஏற்படும் கஷ்டங்கள் துன்பங்களைச் சகித்துக் கரையேறுவது சீடனின் கடமை. ஆகவே இந்து தர்மம், கலாச்சாரம், நாகரீகம் என்பன குடும்பங்களிடையே ஒற்றுமை, நல்லுறவு, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், உறவு முறை பேணல் என்பதோடு; இத்தகைய நெறி முறைகளைப் பேணாதவர்களை உறவிலிருந்து விலக்கி வைப்பதும் இந்து கலாச்சாரப் பண்பாடாகும்.

குழந்தைகளுக்கு முன்மாதிரியாகப் பெற்றோர், ஆசிரியர் வாழ்ந்து காட்ட வேண்டும். புரியாதவற்றை அன்புடன் அரவணைத்துச் சொல்லிக் கொடுக்க வேண்டும். புரியாதவற்றைப் பாட்டுக்கள் கதைகள், நாடகங்கள் மூலம் புரிய வைக்கலாம். அதுவும் புரியாதவிடத்து ஒரு குழந்தை தீயதைப்பற்றிக் கொண்டு நல்லதை விடுவானாகில் அது அவன் விதி. அதாவது தாய்தந்தையரின் வாழ்க்கை முறை என்பவற்றால் நல்லவற்றை இலகுவாக புரிந்து கொள்ளமுடியாமற் போகலாம். இத்தகைய குழந்தைகளைத் திருத்திப் பண்படுத்தி நல்ல மனிதர்களாக உருவாக்க நன்னடத்தைப் பள்ளிகள் அவசியம். இங்கு


அவர்கள் தங்கியிருந்து தம் வாழ்வை வளம் படுத்திக்கொள்ள நல்ல ஆசான்கள் தேவை.

இத்தகைய வாழ்க்கை முறை ஒவ்வொரு குடும்பத்திலும் தழைத்தோங்க. முயற்சி செய்வது மனிதர்களின் கடமை. செயலாக்குவது இறைவனின் கருணை. நம் குழந்தைகளின் நல்வாழ்வு கருதி இறை அனுக்கிரகத்துக்காகப் பிரார்த்தித்து நம் பணியை இறைவன் பணியாகக் கருதிச் செயற்படுவோமாக.

"எல்லாம் அவன் செயலே"

# தீர்த்தம் என்று எண்ணி நீ இறங்கு

தீர்த்த மென்று எண்ணி யிறங்கு
தொண்டை மானாற்றிலே,
தீர்ந்து போகும் வந்த துன்பம்
தெளிவு பெற்று வாழ்வாய், - மூ
கூர்த்தம் யாவும் இங்கு வெல்லும்
கோடி புண்ணியம் உண்டு,
கூவும் குயிலும் கோவில் மணியும்
குலவிநிற்கும் நாவில்,
பார்த்த போது ஒளிர்ந்த வேல்தான்
படிக்கும் போது முன்னே-
பைய வந்து உனை அணைக்கும்
பயம் உனக்கு இல்லை!
வேர்த்து நின்று உழைத்த உன்னை
விளங்க உலகம் பிந்தும்,
வெற்றி தோல்வி இரண்டும் வேண்டும்
வேஷம் தோற்றுப் போகுமே!



-கே.எஸ். சிவஞானராஜா

# பெரிய புராணத்தில் ஏன் திருமூலர் புராணம்?

செல்வி S. ஜடா அவர்கள்

பெரியபுராணம் அறுபத்துமூவரை மட்டும் ஆராதனை செய்கின்றது. ஏனெனில் அவர்கள் சிவன் மீதும் சிவனடியார்கள் மீதும் அளவற்ற அன்பு கொண்டவர்கள். அர்ப்பணிப்பு என்றால் என்னவென்று அவர்களிடம் தான் கேட்கவேண்டும். அவ்வளவு பக்தி, தியாகம் எல்லாம்.

நாயன்மார்கள் அறுபத்து மூவருள் திருமுலரும் ஒருவர். சித்தர்களுக்கெல்லாம் குருவாக விளங்கியவர். சைவநெறியிலும் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர்.

சுந்தரமூர்த்தி நாயனார் தமது திருத்தொண்டத் தொகையில் அறுபது அடியார்களைப் பாடி வணங்கியுள்ளார். அவருள் இருவருக்கு மட்டுமே "பிரான்" என்ற சொல்லால் பெருமை படுத்தியுள்ளார். அந்தப் பெருமைக்குரிய இருவர். ஒருவர் சம்பந்தர், மற்றவர் திருமூலர்.

"பிரான்" என்ற சொல்லுக்குப் பிரியாதவன் என்பது பொருள். கடவுளுக்கு மட்டுமே உரிய சொல். அடியார்களை விட்டு என்றும் பிரியாதவன் என்றும் பொருள் நீளும்.

எம்பிரான் சம்பந்தர் அடியார்க்கும் அடியேன் என்று சம்பந்தரை வணங்குகின்றார் சுந்தரர். திருமூலர் பற்றி பாடும் பொழுதோ "நம்பிரான் திருமூலர் அடியார்க்கும் அடியேன்" என்று பாடுகிறார். எம்பிரான் என்பதைக் காட்டிலும், "நம்பிரான்" என்ற சொல் எல்லோருக்கும் உரியவர் என்ற தொனியில் ஒலிக்கிறது. நாயன்மார்களுள் மந்திரம் ஜெபித்த அடியார்கள் நால்வர். ருத்திரபசுபதியார், சிறப்புலி நாயனார், சோமாசி மாறர், திருமூலர் ஆகியோர். சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் திருமூலர் புராணத்தை 28 பாடல்களில் பாடியுள்ளார்.

பிற்காலத்தில் சைவசித்தாந்த சாஸ்திரம் வளர்வதற்கு திருமந்திரம் ஓர் அஸ்திவாரமாக இருந்தது. தமிழ் நாட்டின் இருண்ட காலமென 4ஆம், 5ஆம், 6ஆம் நூற்றாண்டுகளைக் குறிப்பிடுகின்றோம். அந்த காலகட்டத்தில் சைவத்தின் வளர்ச்சியை திருமந்திரம் கொண்டே அறியமுடிகிறது. சித்தாந்தம் என்னும் சொல்லை முதன் முதலில் கையாண்ட நூலாசிரியர் திருமூலரே. "சைவசித்தாந்தத்தை அறிந்துகொள்ள மிகச் சிறந்ததொரு கருவூலமாகத் திகழ்கிறது" என்று வரலாற்று ஆய்வொன்று திருமூலர் இயற்றிய திருமந்திரத்தின் முக்கியத்துவத்தை விளக்குகிறது.

திருமூலர் சிவன் மீது மாறாத அன்பு கொண்டவர். அந்த நடராஜப் பெருமானோடு மனம் லயித்துக் கிடப்பவர். தேர்ந்த கவிஞன், ஓரிரு வார்த்தைகளிலேயே ஒரு சம்பவத்தைக் கண்முன்னே நிறுத்துவது போல், வார்த்தைகளால் வடித்தெடுக்க முடியாத ஈசனை சொல்லுக்குள் கொண்டுவருகிறார்.

"பொன்னைக் கடத்திலங்கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே"

புலித்தோல், பிறைநிலா, திருநீறு மூன்று சொற்களால் ஈசனைக் கண்முன்னே கொண்டு வருகிறார்.

சிவபெருமானுக்கே நான் ஆட்பட்டுவிட்டேன் அவன் திருவடிகளையே சரணடைந்து விட்டேன். என்பதே திருமூலரின் உயிரில் கலந்துவிட்ட கொள்கை.

என்தாயோடு என் அப்பன் ஏழேழ் பிறவியும்
அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்

தாயும் தந்தையுமாக விளங்குகின்ற ஈசனுக்கு பிறக்கும்பொழுதே அடிமைப்பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டாராம் இவர்.

ஆன்மீகத்துக்கு இப்படிப்பட்ட உண்மையான அன்பும் அர்ப்பணிப்புமே தேவை. இறப்புக்கும், பிறப்புக்கும் காரணமாயுள்ளது மனம். அத்தகைய மனத்தை சிவத்துடன் இணைத்துவிட்டால் மரணத்தை வென்றவனாகி விடுகிறான். "சிவமானோர் உடல் வீழ்வதில்லை" என்பது மாணிக்கவாசகர் கருத்து. "சித்தம் சிவமாதல் செய்தவப் பேறே" என்றே திருமூலர் கூறியுள்ளார். சிவனோடு தன்னைக் கலந்துவிட்டதால்தான் சாகாவரம் பெற்றுவிட்டார் திருமூலர்.

கன்றின் குரல்கேட்டு பசு தானாகவே ஓடிவந்து கன்றுக்கு பால் கொடுப்பது போல, ஈசனும் தானாகவே வந்து பக்தர்களின் குறைதீர்ப்பான் என்பது திருமூலரின் அசைக்கமுடியாத நம்பிக்கை.

துன்பம் வந்த போது மட்டும் "சங்கரா! சங்கரா!" என்று உச்சரிக்காமல் சிந்தை முழுவதும் சிவமயமாகவே இருப்பதுதான் உண்மையான பக்தனின் அடையாளம்.

திருமூலர் ஒரு பக்தனுக்குரிய அத்தனை இலக்கணங்களோடும் வாழ்ந்து காட்டியவர்.

---

நடன மிடும் இரு பாத மலர் தொழுதிட நாமும்
வைத்த செல்வச் சந்நிதிப் பெருமானே
திடமொடு மெய்ஞான ஒளி அருள் பிரகாசம் காட்ட
வேலோடு மயிலேறி எப்போ வருவாயோ?
விடவேலை யசுரர் மாள இருபுயமும் சினமொடாட
துயர் யாவும் களைய வந்த சிவமைந்தா
உடல் கொதித்தீப் பொறியதாக முகம் ஆறு உடலோடு
உலகு மகிழ வந்தருள் புரிவோனே
மன அமைதி பெறநாடி அனுதினமும் பாடலோதி
பலதலங்கள் தொழுவேனே குமரேசா
உனை எனது உயிரதாக உனது திருவடி தேட
மனம் நினைத்து மகிழ அருள் புரிவாயே
தினமும் பல பாடலோடு திருப்புகழும் நாளும் ஓத
வரமெனக்கு வந்து அன்பாய்த் தருவோனே
அனல் பறந்து பொய்கை ஆறு தாமரை மலர்ப் பிறந்த
சந்நிதி உறைந்தருளும் பெருமானே.


-சின்னப்பு தனபாலசிங்கம்-

# படங்கள் தரும் பதிவுகள்




சந்நிதியான் ஆச்சிரமத்தால் வருடந்தோறும் இடம்பெறும் கதிர்காமக்கந்தன் திருக்கோவில் யாத்திரையின்போது...





சந்நிதியான் ஆச்சிரமத்தால் வருடந்தோறும் இடம்பெறும்
கதிர்காமக்கந்தன் திருக்கோவில் யாத்திரையின்போது...



(தொடர்ச்சி...)

# மரணம் - அப்புறம்

சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள்

**கேள்வியாளர்:-** பிறப்பு- இறப்பு சுழற்சியில் இருந்து ஆண்கள் விலகிக் கொள்ளவேண்டும் என்று நாங்கள் கேள்விப்பட்டோம். அதைப் பற்றி நீங்கள் சிறிது விளக்க முடியுமா? (பதில் தொடர் கீழே)

**சத்குரு:** ....சமையலறைக்குச் சென்று, சாரதாவைப் பார்த்து "இன்று என்ன சமைத்துக் கொண்டு இருக்கிறாய்?" என்று கேட்டார். உணவு விடயத்தில் அவ்வளவு பைத்தியமாக இருந்தார். சாரதா, ராமகிருஷ்ணரைப் பார்த்து "நாங்கள் உங்களை கடவுள் போலப் பார்க்கிறோம், ஆனால், நீங்கள் உணவின் மீது இவ்வளவு பைத்தியமாக இருக்கிறீர்கள்; என்ன இது?" என்று கேட்டார். "அது சரி இன்று என்ன சமையல்?" என்று ராமகிருஷ்ணர் திருப்பிக்கேட்டார்.

ஒரு நாள் சாரதாவிற்கு இது மிகவும் அவமானமாக இருந்ததால், கோபத்துடன் ராம கிருஷ்ணரைப் பார்த்து திட்டிவிட்டார். அதற்கு ராமகிருஷ்ணர் "ஏதாவது ஒரு நாள் நீ தாளி யைக் கொண்டு வரும்பொழுது (தாளி என்பது உணவு பரிமாறப்பட்ட தட்டு), அன்று உண வில் அக்கறை காட்டாமல் இருந்தால் அன்றிலிருந்து மூன்று நாட்கள் மட்டுமே நான் இருப்பேன் என்பதைத் தெரிந்துகொள்" என்று சொன்னார். அவர் அப்படிச் சொன்ன ஆறு வருடங்களுக்குப் பிறகு ஒரு நாள் சாரதா உணவு எடுத்துச் சென்றபோது, அவர் முகம் திருப்பிக் கொண்டார். ராமகிருஷ்ணர் முன்பு சொன்னது திடீரென சாரதாவின் நினைவுக்கு வர அவர் கதறி அழுதார். ராமகிருஷ்ணர் சொன்னார் "இப்போது அழுவதில் பயனில்லை, காலம் வந்து விட்டது" என்று. ராமகிருஷ்ணர் உணவின்மீது ஆசை வைத்து விழிப்புணர் வுடன் கர்மா உருவாக்கிக் கொண்டார். உடலைத்தக்க வைத்துக் கொள்வதற்காக ஒரு நாளைக்குப் 10 தடவையாவது உணவின் மீது ஆசையை உருவாக்கிக் கொள்வார். மற்றையபடி சாதாரணமாக அமர்ந்திருந்தாலே உடலை விட்டுவிடுவார். அவர் தனக்கென சிலவேலைகளை வைத்திருந்ததால் மேலும் சில காலத்துக்கு உடலில் இருக்கத் தீர மானித்திருந்தார். இதுபோல வெவ்வேறு யோகிகள் பல வழிகளைக் கையாண்டார்கள். சில எளிமையானவை, சில சிக்கலானவை. குமிழ் ஒரு முறை வெடித்து, பிறகும் விழிப் புணர்வுடன் நீங்கள் உடலைக் கொண்டிருந் தால், பல வழிகளில் இருப்பு ரீதியாக உங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது.

**கேள்வியாளர்:** முன்பிறவிகள் பற்றி அறிந்து கொள்வதில் பயனுள்ளதா? விழிப்புணர்வுடன் அதைத் தெரிந்து கொள்ள வழிகள் உள்ளதா?

**சத்குரு:** நீங்கள் உண்மையில் முன்பிறவிச் சம்பவங்களை அறிய ஆசைப்பட்டால், உச்ச நிலை விழிப்புணர்வுக்கு உங்களை உயர்த் திக்கொள்ள வேண்டும். அப்போது அது நினை வலைகளை திறக்கவைக்கும். ஆனால், அதில் என்ன பயன் இருக்கிறது? இந்தப்பிறவி யில் நடந்த சம்பவங்களின் நினைவுகளையே உங்களால் சமாளிக்க முடியவில்லை. பத்து வருடங்கள் முன்பு நடந்த ஒரு செயலுக்கு இப்போது வருத்தப்படுகிறீர்கள். நீங்கள் இந்த நிலையில் இருக்கும்போது பத்துப்பிறவிகள் முன் நடந்தது தற்போது உங்கள் நினைவுக்கு

வந்தால் அது உங்களைப் பைத்தியத்தில் தள்ளிவிடும். இல்லையா? எனவே அதற்கு முயற்சிப்பதில் ஒரு அர்த்தமும் இல்லை. ஆனால் அதே நேரத்தில் நீங்கள் முன்பிறவி என்று அழைப்பதெல்லாம் மனதின் ஆழ்மன அடுக்குகளாகவுள்ளது. விழிப்புணர்வின் உச்ச நிலைகளுக்கு நீங்கள் உங்களை எடுத்து வந்தால், உள்ளிருந்து ஆட்சி செய்யும் இந்த மனத்தின் அடுக்குகளை உடைக்க முடியும், கரைக்க முடியும்.

சம்யமா பயிற்சி என்பது 8 நாட்கள் நடக்கக்கூடிய தீவிர, தியான நிகழ்ச்சியாகும். சம்யமாவில் என்ன நடக்கிறது என்பதை நான் கூறினால் ஒன்று பயம் வரும் அல்லது நம்பிக்கையின்மை வரும். உதாரணமாக நீங்கள் உட்கார்ந்து தியானம் செய்து கொண்டிருப்பீர்கள், அப்போது நீங்கள் முழு விழிப்பு நிலையில் இருக்கும்போதே, உங்கள் உடல் பாம்பு போல ஊர்ந்து செல்ல ஆரம்பிப் பதைக் காண்பீர்கள். அச்செயல் நடப்பது உங்கள் விழிப்பில் இருக்கிறது. அதை நிறுத் தவும் விரும்புகிறீர்கள். ஆனால் உடலானது பாம்பு போல ஊர்ந்து கொண்டிருக்கும் தியானத்திலிருந்து வெளிவந்து விட்டால் மிகவும் சாதாரண நிலைக்கு வந்து விடு வீர்கள். தியானத்தில் உட்கார்ந்தால் உடல் மீண்டும் ஊர்ந்து செல்ல ஆரம்பிக்கும். சிலருடைய உடல், பறவை தத்தித்தத்தி நடப் பது போலவும், சிலருடைய உடல் நாயைப் போலவோ புலியைப் போலவோ அல்லது ஏதோ ஒரு விலங்கைப் போலவோ சுற்றி வரும். உடல் இப்படி பலவடிவங்கள் எடுக்கின்றது.

ஏன் இப்படி நடக்கிறது என்றால் ஆழ் மன அடுக்குகளில் பல பரிமாணங்கள் உள் ளன. அவை உங்கள் ஆளுமையில் இருக் காது, ஆனால், நீங்கள் செய்யும் எல்லாச் செயல்களிலும் அவற்றின் தாக்கம் இருக்கும். எனவே சம்யமா போன்ற பயிற்சிகளில் நீங்கள் உச்ச நிலை விழிப்புணர்வுகளில் இருக்கும் போது ஆழ் மன அடுக்குகளை விழிப்புணர் வுக்கு கொண்டு வருகிறீர்கள்.

(தொடரும்...


# சந்நிதி வேலவனே
# இந்தநிலை போக்கிடாயோ



கந்த வேலனாய் வந்து நின்றவன்
கவலை தீர்த்தவன் தேவர் வாழவே
எந்த வினையையும் எளிதில் போக்குவான்
எங்கள் சந்நிதி வேலனே இன்னும்
சொந்த மான நிலமும் வீடும்
சுதந்திர வாழ்வும் இன்றியே என்றும்
மந்தை போலவே அங்கும் இங்குமாய்
மாறித் திரிவதைப் போக்கி டாயோ.

வ. யோகானந்தசிவம்

# கோமாதா



திரு க. சிவசங்கரநாதன் அவர்கள்

பசுவை கோமாதாவாகச் சிறப்பித்துக்கொண்டால் பசு இறைச்சியை உணவாகக் கொள்ளும் மக்கள் அதை விரும்பமாட்டார்கள். நற்குணங்களும் நன்மைகளும் நிறைந்த பசுவைக் கொன்று உண்ணுவதில் அதிக ஆர்வம் கொண்டிருப்பவர்களிடம் எப்படி நன்மை எதிர்பார்க்க இயலும்.

ஆனாலும் கோமாதா என்ற கருத்து ஆதிகாலம் முதல் பாரத மக்களிடையே இருந்து வந்தது அதைப் பின்பற்றி இலங்கையிலும் கோமாதா (பசுவை) தெய்வமாகக் கருதி வருவோரும் உள்ளனர்.

தூய்மையின் சின்னமாக விளங்கும் பசுவை மாதாவாகக் கருதுவதற்கான காரணங்கள் பல உள்ளன. பசுவின் பால், சாணம், சிறுநீர் என்பவை தூய்மையானது என்று கருதுகின்றோம். மேலும் பசுவை காட்சி காண்பது கூட நன்மையென்று முன் தலைமுறை நம்பியிருந்தது. அதை நம்பிய தலைமுறையினரே இன்று நம்பி பின்பற்றுகின்றனர். கோபாலகிருஷ்ணன் என்ற கருத்து மக்களிடையே உண்டு. கோக்களை (பசுக்களை) பாலிக்கும் கிருஷ்ணனை பக்தர்கள் மிக நேசிக்கின்றனர். பாரதத்தில் நிலையான கலாச்சாரத்தில் கோமாதாவிற்கு இடமளித்திருந்தனர்.

அமுதம் வழங்கும் தாயைப் போல் கருணைகாட்டும் பசுவைத் தாயாக நினைப்பதிலும் பராமரிப்பதிலும் பாரத மக்கள் காட்டும் தூய்மையான ஆர்வத்தை மேல் நாட்டவர்கள் பலரும் அங்கீகரித்துள்ளனர். வேறோர் உயிரினத்தை சிறப்பாகவும் பரிசுத்தமாகவும் காண இயலும் கலாச்சாரம் மெச்சப்பட வேண்டியது என்று மேல் நாட்டவர் கருத்து. மேல் நாடுகளில் பால் தேவைக்காக வளர்க்கின்றனர் என்பது யாவரும் அறிந்த விடயம். பசுவிலிருந்து நமக்கு முக்கியமாகத் தருவது பால் ஊட்டச்சத்தாகவும் மருந்தாகவும் காலா காலமாகப் பயன்படுத்திவரும் பாலிலிருந்து தயிர், வெண்ணை, நெய் முதலியவையும் பசு நமக்காக வழங்குகின்றது. பொதுவாக மலத்தை அசுத்தமாகக் கருதும் நாம் சாணத்தை சுத்தமாக நினைக்கின்றோம். மேலும் தாவரங்களுக்கு பசளையாகவும் பயன்படுத்துகின்றோம். சில மருந்துகளில் சேர்ப்பதற்காக பசுவின் சிறுநீர் பயன்படுகின்றது. திவ்ய மருந்தாகக் கருதிவரும் கோரோசனை பசுவிலிருந்து கிடைக்கின்றது என்று பலருக்குத் தெரியாது.

இப்படி மனிதனுக்கு எல்லாவிதத்திலும் பயனளித்து வரும் ஒரு சாதுவான பிராணியைத் தாய் என்று நினைப்பதில் தவறில்லை. கண்கண்ட தெய்வமாக வணங்குவதிலும் தவறில்லை. எமது முன்னோர் முற்றத்தைப் பெருக்கி சாணம் கலக்கித் தெளிப்பதும் தரையை சாணத்தால் மெழுகுவதும் அதன் தூய்மையை மனதில் கொண்டுதான் என்பது இன்றைய தலை முறையினர் பலர் ஏற்றுக் கொள்வதில்லை. இறைவனால் படைக்கப்பட்ட பசுவும் பசுவில் இருந்து தோன்றிய நாம்பன் இறைவனின் இடபவாகனமாக கருதுகின்றோம். இதனை இன்றைய தலைமுறை உணர்ந்து செயல்பட்டால் வாழ்வு வளமாகும். இறைவன் திருவருள் வேண்டிய நேரம் கிடைக்கும்.

# சுவாமி விவேகானந்தரது பார்வையில் "குரு" ஒரு நோக்கு

(தொடர்ச்சி...)

திரு ஆ. மகேசு அவர்கள்

மிகப் பெரிய குருமார்கள் இவர்களே. சற்றுத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களிடமிருந்தும் நாம் உதவி பெறலாம். ஆனால் அவர்கள் நிலையைத் தீர்மானிப்பதற்கு வேண்டிய உள்ளுணர்வு நமக்குப் போதுமான அளவு இல்லாததால் அதனை முடிவு செய்யச் சில சோதனைகள் தேவைப்படுகின்றன. சீடனுக்கும் சரி குருவுக்கும் சரி சில தகுதிகள் இருக்கவேண்டும். பரிசுத்தம், அறிவொளிபெறுவதற்கு உண்மையான தாகம், விடாமுயற்சி என்பவை சில தகுதிகளாக கைக் கொள்ளப்படுகின்றன. தூய்மையற்ற ஒருவன் ஆன்மீகவாதியாக இருக்க முடியாது. எல்லா விஷயங்களிலும் தூய்மையாக இருப்பது என்பது மிக இன்றியமையாதது.



அடுத்த தகுதி, அறிவொளி பெறுவதற்கு உண்மையான தாகம் தேவை. ஆன்மீகத்தை நாடுவது என்பது மிகக் கடுமையான செயற்பாடு. பொதுவாக நாம் நினைப்பது போல அவ்வளவு சுலபமானது அல்ல- ஆன்மீகம். ஆன்மீகம் என்பது சொற்பொழிவுகளைக் கேட்பதிலோ, நூல்களைப் படிப்பதிலோ இல்லை என்பதை உணரவேண்டும். ஆன்மீகம் என்பது தொடர் போராட்டம். இது ஒரு நாளிலோ, இரண்டு நாளிலோ அன்றி பல வருடம் அல்லது பல பிறவிகளுக்குப் பிறகு கூட கிடைக்காமலும் இருக்கலாம். இதற்கெல்லாம் நாம் தயாராக இருக்கவேண்டும். இத்தகைய மன உறுதியோடு தொழிற்படத் தொடங்கும் சீடன் வெற்றி பெறுவான்.

குரு விஷயத்தில், அவர் சாஸ்த்திரங்களின் உட்பொருளை அறிந்திருக்கின்றாரா? என்பதை முதலில் பார்க்க வேண்டும். பைபிள், வேதம், குர்ஆன் என்று உலகம் முழுதும் எல்லோரும் படிக்கின்றார்கள். ஆனால் இவை வெறும் வார்த்தைகள் மட்டுமே. இலக்கணத்தொடர், சொற்றொடர் இலக்கணங்கள், சொல் இலக்கணங்கள் தத்துவங்கள் மட்டுமே. அதாவது மனத்தின் உலர்ந்த எலும்புகள் மட்டுமே. ஒரு நூல் எவ்வளவு காலத்திற்கு முன்பு எழுதப்பட்டதென்பதை ஒரு குரு கண்டு பிடிக்கலாம். ஆனால் வார்த்தைகள் என்பவை கருத்துக்களின் வெளித்தோற்றங்கள் மட்டுமே. வார்த்தைகளில் அதிகம் ஈடுபட்டு வார்த்தைகளின் வேகத்தில் மனத்தை ஓடவிடுபவர்கள், அவற்றின் பொருளை உட்கருத்தை இழந்து விடுகின்றார்கள். ஆகவே குரு என்பவர் சாஸ்திரங்களின் உட்கருத்தை அறிந்திருக்கவேண்டும்.

குருவிடம் இருக்க வேண்டிய இரண்டாவது தகுதி, அவர் பாவமற்றவராக இருக்கவேண்டும் என்பதாகும். நாம் ஆசிரியர்களிடம் பாடம் கேட்கின்றோம். அப்போது நாங்கள் ஆசிரியர்களின் நடத்தையைக் கவனிக்க வேண்டுமா? அல்லது அவர் சொல்வதை மட்டும் ஆராய்ந்து அதை எடுத்துக் கொள்ள வேண்டுமா? எனக்கு ஒருவர் இயற்பியலையோ, வேதியியலையோ அல்லது வேறு அறிவியலையோ கற்பிக்க விரும்பினால், அவருடைய ஒழுக்கம் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அவரால் இயற்பியலையோ வேறு

அறிவியலையோ கற்பிக்க முடியும். ஏனெனில் அறிவியலுக்கு தேவையான அறிவு மூளையைப் பற்றியது. மூளையின் நுட்பத்தைப் பற்றியது. சிறிதுகூட ஆன்ம வளர்ச்சி இல்லாமலுங்கூட மிகச் சக்தி வாய்ந்த அறிவாற்றல் ஒருவனிடம் இருக்க முடியும்.

ஆனால் ஆன்மீக விடயத்தில் தூய்மையற்ற ஒருவரிடம் ஆன்ம ஒளி இருப்பது பூச்சியமே. அவ்வாறெனில் அவர் எதனை கற்பிக்க முடியும்? பரிசுத்தம் தான் ஆன்மீக உண்மை. "இதயத்தூய்மையுடையவர்கள் பேறு பெற்றவர்கள்".அவர்கள் இறைவனைத் தரிசிப்பார்கள். ஆன்மீகம் என்பதன் சாரம் முழுவதும் மேற்கூறப்பட்ட வாக்கியத்திலே அடங்கியுள்ளது. மற்ற எல்லா சாஸ்திரங்களும் மறைந்து போனாலும், இந்த ஒரு வாக்கியமே உலகத்தைக் காப்பாற்றி விடமுடியும்.

உள்ளம் தூய்மை பெறாமல் இறை காட்சியோ, எல்லாங்கடந்த உண்மையின் காட்சியோ கிடைக்காது. அதனாற்றான் குருவிடம் தூய்மை கட்டாயமாக இருக்க வேண்டும். முதலில் அவர் எத்தகையவர் என்பதைப் பார்க்க வேண்டும். பிறகுதான் அவர் என்ன சொல்கின்றார் என்பதைக் கவனிக்க வேண்டும். சாதாரண ஆசிரியர்கள் விடயத்தில் அப்படியல்ல அங்கு அவர்கள் எத்தகையவர்கள் என்பதை விட அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றோம்.

ஆன்மீகத்தை போதிப்பவரான குரு விஷயத்தில் அவர் எப்படிப்பட்டவர், தூயவரா என்பதைத்தான் முதலில் கவனிக்க வேண்டும். அவர் தூயவராக இருந்தால் மட்டுமே அவரது வார்த்தைகளுக்கு மதிப்பு ஏற்படும். ஆன்மீக ஆற்றலை வழங்குபவர் அவர். அவரிடம் ஆன்மீக சக்தி இல்லாவிட்டால் அவர் எதனை வழங்குவார்? குருவின் சிந்தனை அதிர்வுகள்தான் சீடனின் மனத்திற்குப் பாய்ச்சப்படுகின்றன. அவை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு இடம் மாறுகின்றனவே தவிர, நமது அறிவுச் சக்திகளை தூண்டுவதுடன் மட்டும் நின்றுவிடுபவையல்ல. உண்மையானதும், உணரக்கூடியதுமான ஏதோ ஒன்று குருவிடமிருந்து சீடனை அடைய வேண்டும். ஆகவேதான் குரு உண்மையானவராக தூயவராக இருத்தல் வேண்டும் என அழுத்திச் சொல்லப்படுகின்றது.

மூன்றாவது தகுதி அவரது நோக்கம். ஏதாவது ஒரு உள்நோக்கத்தோடு அதாவது பெயருக்கும் புகழுக்குமாக அவர் போதிக்கின்றாரா? அல்லது உங்கள்மீது கொண்டுள்ள உண்மையான அன்பிற்காக அவர் போதிக்கின்றாரா என்று கவனிக்க வேண்டும். குருவிடமிருந்து சீடனுக்கு ஆன்மீகசக்தி அனுப்பப்படும் போது அவற்றை அன்பின் மூலமாகத்தான் அனுப்ப இயலும்.

கடவுளை அறிந்தவர் மட்டுமே குருவாக இருக்க முடியும். குருவிடம் இந்தத் தகுதிகள் இருந்தால் எமக்கு ஆபத்தில்லை. இல்லாவிட்டால் அவரிடம் கற்பது ஆபத்தானது. ஆன்மீகத்தைப் பொறுத்தவரை கண்ணைத் திறப்பவர் குருவே. குருவிஷயத்தில் நம்முடைய உறவு, மூதாதையர்- சந்ததி என்கின்ற உறவுதான். குரு ஆன்மீக மூதாதையர்- சீடன் ஆன்மீக சந்ததி.

அடக்கம், பணிவு, மரியாதை, நம்பிக்கை இவை இல்லாமல் ஆன்மீகம் இல்லை. குருவுக்கும் சீடனுக்கும் இடையே இந்த உறவு இருக்கின்ற இடத்தில்தான் ஆன்மீகச் செம்மல்கள் மலர்கின்றார்கள் என்பது முற்றிலும் உண்மையே. இந்தப் பண்புகளை தூக்கி எறிந்துவிட்டவர்களுக்கு ஆன்மீகம் என்பது வெறும் பொழுதுபோக்கே யாகும்.

ஒரு குருவினால் பாய்ச்சப்பட்டு சீடனுள் புகும் அறிவொளியைவிட, உயர்ந்ததும்,

புனிதமானதுமான வேறு ஒன்று இருக்க முடியாது. ஒருவன் பூரணயோகியாகும்போது அது தானாகவே வந்து சேரும். குருவைக் கடவுளின் மிக உயர்ந்த வெளிப்பாடாகக் கொள்ள வேண்டும். நமது முழுக்கவனமும் அவர்மீது குவியும் போது, அவர் ஒரு மனிதன் என்ற நிலையிலிருந்து மறைந்து விடுகின்றார். அவரது உருவம் மறையும். அந்த இடத்தில் இறைவனே எஞ்சுவார்.

நாம் இப்போது மனித உடலமைப்பில் கட்டுண்டிருக்கின்றோம். எனவே நம்மால் கடவுளை மனிதனாகத்தான் பார்க்கமுடியும். எருமைகள் இறைவனை வழிபடமுடியுமானால், அவை அவரை ஒரு பெரிய எருமையாகத்தான் நினைக்கும். ஒரு மீன் இறைவனை வழிபட விரும்பினால், அது அவரை பெரிய மீனாக எண்ணிக்கொள்ளும். அது போலவே மனிதனும் ஆண்டவனை மனிதனாகவே நினைக்கவேண்டும்.

இரண்டு வகையான மனிதர்கள் கடவுளை மனிதராக வழிபடுவதில்லை. ஆன்மீக வாசனையே அற்ற மனித மிருகங்கள் ஒருவகையினர். மானிட வாழ்விற்கு அப்பாற் சென்று, மனதையும், உடலுணர்வையும் துறந்து இயற்கையின் வரம்பைக் கடந்த பரமஹம்சர்கள் இரண்டாவது வகையினர். இயற்கை முழுவதுமே இவர்களது ஆன்மாவாகிவிட்டது. இவர்களுக்கு மனமோ உடலுணர்வோ இல்லை. இவர்கள் ஒரு ஏசுவையோ புத்தரையோ போல் கடவுளை கடவுளாக வழிபடமுடியும். இதற்கு எதிர்க் கோடியில் இருப்பவன் மனித மிருகம்.

ஆகவே இதுவரை "குரு" என்பதற்கு சுவாமி விவேகானந்தர் கூறிய கருத்துக்கள் சிலவற்றை தொகுத்துத்தந்தோம். குருவருளோடு திருவருளும் சேர்ந்து கைகூடும்போது எமது ஆன்மீக விடுதலை கிடைக்குமென்ற நம்பிக்கையோடு, விசேடமாக, இளையதலைமுறையினர் இவ்விடயத்தில், "தாரமுங் குருவும் தலைவிதிப்படியே" என வாழாவிருக்காமல்,"விதியையும் மதியால் வெல்லலாம்" என்பதற்கமைய, ஆன்மீகத்தைப் போதிக்கவல்ல குருவின்தாள் பணிந்து வாழ்க்கை என்னும் படகினை தன்னம்பிக்கையுடன் ஓட்டி நற்கதி பெற முயற்சி செய்வோமாக.

(முற்றும்)

# புஸ்ப விசேடம்

**கோங்கம்பூவில் சரசுவதியும், அலரிப்பூவில் பிரமாவும், வன்னியில் அக்கினியும், நந்தியாவர்த்தையில் நந்தியும், புன்னையில் வாயுவும், எருக்கில் சூரியனும், சண்பகப்பூவில் சுப்பிரமணியரும், வில்வத்தில் இலக்குமியும், கொக்கிறகம்பூவில் விட்டுனுவும், மாவிலங்கையில் வருணனும், மகிழில் சரசுவதியும், வாகையில் நிருதியும், சாதிப்பூவில் ஈசானனும், செங்கழுநீரில் சூரியனும், குமுதம்பூவில் சந்திரனும், மந்தாரையில் இந்திரனும், மதுமத்தையில் குபேரனும், நாயுருவியில் இயமனும், தாமரைப்பூவில் சிவனும், அறுகில் விநாயகரும், நீலோற்பலத்திலும் ஏனைய வாசனைப் புஸ்பங்களிலும் உமாதேவியாரும் அதிதேவதைகளாய் இருப்பர்.**

**ஆகையால், இப்பத்திர புஸ்பங்களையும் ஏனையவற்றையும் விதிப்படி எடுத்துக் கொடுப்பவர்களும், அவற்றினாற் பூசித்தவர்களும், திருமாலை கட்டிக் கொடுப்பவர்களும், திருநந்தவனம் வைப்பவர்களும் போகமோஷங்களை அடைவார்களென்று உண்மை நூல்கள் கூறுகின்றன.**

-சைவநீதி-

# புத்துயிர்ப்பு ஊட்டப்பட வேண்டிய புராண படனக் கலை

திரு எஸ்.ரி. குமரன் அவர்கள்

யாழ்ப்பாணக் கலாச்சாரமானது "கந்தபுராணக் கலாச்சாரம்" என பண்டிதமணி அவர்களால் சிறப்பித்துப் போற்றப்படுகின்றது. இவ்வாறு கந்தபுராணக் கலாச்சாரம் என்று சிறப்பிக்கப்படும் எமது சமய வாழ்வில் மயக்கம் நிறைந்திருப்பதாக பலரும் சுட்டிக் காட்டுகின்றார்கள். எங்கள் சமயத்தின் பெயர் என்ன? எங்கள் முழுமுதற் கடவுள் யார்? அவரை வணங்கும் முறை எது? நாம் வாழ வேண்டிய வகை என்ன? என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாதவர்களாய் நம்மில் பலர் திகைப்படைகின்றனர்.

எமது சமயத்தின்- எமது பண்பாட்டின் கண் உள்ள அருமை பெருமைகளை மறந்து விடுகின்றனர். அவைகள் தொடர்ந்து பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். சமயமானது வாழ்வியற் தத்துவத்தை தன்னகத்தே கொண்ட நெறியாகும். மனித வாழ்வியலில் வாழ்க்கைப்படி ஒழுங்கு நிலைகளை வரையறுப்பதிலும் வழிகாட்டுதலிலும் சமயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இத்தகு யாழ்ப்பாண சமய பண்பாட்டில் சைவத்தின் உயிர் நாதமாக விளங்குவது இறைவன் புகழைப் பாடுவதாகும். இத்தகு உயிர் நாடியான பண்பாட்டுக் குறி முறைகளில் புராண படனம் பற்றியும் அதன் அருமை பற்றியும் அதை செய்கின்ற முறை பற்றியும் பலர் அறியாது இருக்கின்றார்கள். இருப்பினும் சமயத்தின் மீதுள்ள ஈடுபாடு உடையோரால் புராண படனக் கலையானது இன்றும் புத்துயிர்ப்போடு நிலைத்து நிற்கின்றது. இப் புராண படனக் கலையை எமது இளம் தலை முறையினருக்கு ஊட்ட வேண்டியது நமது கடமையாகும்.

பாடசாலைகளில் சமய பாடம் கற்பிக்கும் சில ஆசிரியர்களிடம் புராணபடனம் செய்கின்ற முறை பற்றி மாணவர்கள் கேட்கும் போது தமக்குத் தெரியாது அது பற்றிய பரிட்சயம் இல்லையெனக் கூறிக் கழிக்கின்றனர். சில ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அதன் முறைப் பயன்களை தெளிவாக எடுத்தோதுகின்றனர். ஆதலினால் எமது சமயத்தில் சிறப்புப் பெறும் புராண படனம் பற்றி நோக்குதல் சிறப்பாக இருக்கும் என கருதுகிறேன்.

## புராண படனம்

புராணபடனம் என்பது புராணக் கதைகளை சுவைபடச் சொல்வது என்பது ஆன்றோர் கருத்து. புராணம் என்பது பழமை என்பதாகும். இது பழமை வரலாற்றைக்கூறும் நூல் எனவும் பொருள் கொள்ளப்படும். பழமையும் புதுமையும் இணைந்தது. மனித வாழ்வைச் செம்மைப்படுத்துவதில் முக்கிய இடம் பெறுவது புராணமாகும். சைவம் கூறும் நன்னூல்களில் சிறப்பிற்குரியதாகவும் விளங்குகின்றது.

புராணபடன முறை என்பதனை எளிமையாக நோக்கின் "ஒருவர் புராணப் பாடல்களைப் பாட இன்னொருவர் அதன் பொருளைக் கூறும் முறையாகும்" இதில் பாடுபவரும் சரி பொருள் சொல்பவரும் சரி பாடல் போல இசைத்துத்தான் பாடுவார். இப் புராண படனம் மூலம் கல்வியையும் சமய பக்தியையும் வித்துவத்தையும் ஆறுமுக நாவலர் மக்களிடம் ஏற்படுத்தினார்.

அன்னியராட்சியில் சைவத்தை நிலை நிறுத்த கையாண்ட ஊடகங்களில் ஒன்றாக புராண படன முறையும் விளங்கியது.

எமது மரபிலே சிவனது முக்கண்கள் என போற்றப்படும் புராணங்கள் சிறப்புப் பெறுகின்றன. அவையாவன பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

பெரியபுராணமானது சேக்கிழார் பெருமானால் நமக்கு அருளப்பட்டது. 12ஆம் திருமுறையாக விளங்கும் திருத்தொண்டர் புராணம் என அழைக்கப்படும் பெரியபுராணம் சிவனடியார்களுடைய திவ்விய வரலாற்றைக் கூறுவதாகும்.

சைவ சித்தாந்தக் கருத்துக்களை உள்ளீடாகக் கொண்டு காஞ்சி குமார கோட்டத்து கச்சியப்பரால் 10345 பாடல்களாக நமக்கு தரப்பட்டது கந்த புராணம் ஆகும். நன்றி மறத்தலால் வரும் பெருங்கேடு எல்லாவற்றையும் அழிக்கும் என்ற ஒரு சிறந்த அறத்தைக் கந்தபுராணம் வற்புறுத்துகின்றது. கந்தபுராணத்தினுடைய சிறப்பை முருகன் அறிவான் என்பது சூத முனிவர் கருத்து. இறைவனுடைய அருளைப் பெற இப்புராணங்கள் வழிகாட்டுகின்றன.

புராண படன சிந்தனை என்றதும் எமது மனத்திரையில் கந்தபுராண சிந்தனைதான் ஓட ஆரம்பிக்கும். அது மிக பிரசித்தமானது. புராணபடன மரபு தொன்மையானது புராணபடன விதியை- மரபை மீறக்கூடாது என்பர்.

## புராணபடனம் செய்யும் முறை

புராணம் வாசிப்பவரும் பயன் சொல்பவரும் ஆசார சீலராய் சமயதீட்சை பெற்றவராய், சிவசின்னம் தரித்தவராய், சமய அறிவும் பக்தியும் உடையவராய், இலக்கணப் பயிற்சி உடையவராய் இருத்தல் வேண்டும்.

படிக்குமிடத்தில் பூரண கும்பம் வைத்து அதன் முன்னால் புத்தக பீடத்தில் பட்டு விரித்து அதன் மேல் புத்தகத்தை வைத்து மலர் இட்டுத் தூபதீபம் காட்டி பூசை செய்து வணங்கவேண்டும்.

படிப்பவர் கும்பத்தின் முன் வலது புறத்தில் வடக்கு நோக்கியும் பயன் சொல்பவர் இடது புறத்தில் கிழக்கு நோக்கியும் இருத்தல் வேண்டும். தொடங்கும் போதும் முடிக்கும் போதும் "திருச்சிற்றம்பலம்" சொல்ல வேண்டும். அவ்வவ் புராணங்களுக்கு ஏற்றதான காப்புச் சொல்லி ஆரம்பிக்கவேண்டும். காப்புச் சொல்லும்போது எல்லோரும் வணங்க வேண்டும்.காப்பை பயன் சொல்பவர் சொல்வது தான் மரபு. புராணம் படிப்பவரும் பயன் விரித்து சொல்பவரும் உயர்ந்த ஒரு ஆசனத்தில் இருத்தல் வேண்டும்.

காப்புப் பாடி விட்டு பொருத்தமான இராகத்தில் பாடலை ஒருதரம் பாடி முடித்த பின் பொருளுக்கு ஏற்ப தொடர்புகளாய் பிரித்துப் பாட வேண்டும். புராணம் படிப்பவர் முதன் முறை பாட்டை பண்ணுடன் பாடுவார். இரண்டாம் முறை பொருளமைவாகக் கொண்டு கூட்டி வாசிப்பார். வாசிப்பவரின் ஸ்ருதியில் அதே இராகத்தில் பயன் சொல்ல வேண்டும். தேவையான இடத்தில் பொருள்விரித்தும் உரைக்கலாம்.

பொதுவாக புராண படனத்தின் போது நாட்டை, பூபாளம், மோகனம், தோடி, பைரவி முதலான இராகத்துடன் பாடுதல் வேண்டும். இதில் தமக்குப் பொருத்தமானதை தேர்ந்தெடுத்துக் கொள்வர். இதனால் ஏற்றத்தாழ்வு தோன்றாது. சுவையாய் இருக்கும். இடத்திற்கு ஏற்ப

இராகம், பாவம், சொற்பிரயோகம் அமைதல் சிறப்பம்சமாகும். இதனால் கேட்போருடைய உள்ளத்திலே பக்திப் பெருக்கு ஏற்படும் முதலில் பாடலின் பொருளைக் கூறிய பின் விரிவுரை கூறுதல் மரபு. விரிவுரை சொல்லுதல் அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப இருக்கலாம்.

படித்தவர் மாற வேண்டின் படித்தவர் அடுத்த பாடலைப் பாடிவிட்டு எழுந்து நின்று மற்றவரிடம் புத்தகத்தைக் கொடுத்தல் வேண்டும். வாங்குபவர் அவரின் வலப்பக்கத்தில் நின்று வணங்கிவிட்டு வாங்கி அதே பாடலைப் பாடவேண்டும்.பயன் சொல்பவரும் வலப்பக்கத்தால் மாற வேண்டும். முதற் படித்த பாடலைப் பாடித்தொடர வேண்டும். புதிதாக புத்தகம் வாங்கியவர் முன் படித்தவரின் இராகத்தில் மீண்டும் ஒரு முறை தானும் வாசித்து அதன் பின்னரே கொண்டு கூட்டுச்-செய்து படிக்கக் கொடுக்க வேண்டும். பயன் சொல்லும் வரை பக்திசிரத்தையும் புலனடக்கத்துடனும் அமைதியாய் பொறுமையாய் இருத்தல் வேண்டும்.

விதிவிலக்காக சில சந்தர்ப்பங்களில் படிப்பவரோ அல்லது பயன் சொல்பவரோ அவசரமாக எழும்ப வேண்டிய சந்தர்ப்பம் வந்தால் படித்தவர் அல்லது பயன் சொல்பவர்வரும் வரை படித்தவர் அல்லது பயன் சொல்பவர் எழும்பாது இருத்தல் வேண்டும். இருவரும் எழும்ப நேர்ந்தால் காப்புச் சொல்லிவிட்டு எழும்புதல் வேண்டும். படிப்போரும் கேட்போரும் திரிகரண சுத்தியுடனும் பக்திசிரத்தையுடனும் இருத்தல் வேண்டும். பக்திப் பரவசம் புராண படிப்பில் தெளிவாகத் தோன்ற வேண்டும்.

## புராணபடனத்தின் சிறப்பு

புராண படனமானது எமது நாட்டிற்கே தனிச்சிறப்பு வாய்ந்ததொன்றாகும். புராணங்கள் உயர்வாகப் போற்றப்படும் சிறப்பை உடையது. பண்டிதமணி கூற்றுப்படி நமது கலாச்சாரம் கந்தபுராணக் கலாச்சாரம் என சிறப்பிக்கப்படுவதற்கு கந்த புராண புராணபடன முறையும் முக்கியமான காரணமாகும். நாவலருடைய காலத்திலே உச்ச நிலையைப் பெற்ற புராண படன முறையூடாகவே சமய சிந்தனைக் கருத்துக்கள் மக்களிடம் இலகுவாக புகுத்தக் கூடிய ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது. இப்புராண படனக் கலையின் முன்னோடியாக ஆறுமுகநாவலர் அவர்கள் போற்றப்படுகின்றார். புராண படன முறையை தனது வாழ்வில் உயிர் நாதமாகக் கொண்டு செயற்பட்டவர் அவர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சமய பொக்கிஷமான புராணபடனமுறை சிலரால் பரம்பரை அறிக்கைக்கு ஊடாகவும் குருசீட அறிக்கைக்கு ஊடாகவும் பேணிப்பாதுகாக்கப்படுகின்றன. இப்புராணக் கலையின் பயன் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதன் பயன் எல்லோராலும் உணரப்படவேண்டும். சைவ சமய உண்மைகளை வெளிப்படுத்துவதிலும் பக்தி வைராக்கியத்தை ஏற்படுத்துவதிலும் முதன்மைபெறும் கலையாக புராண படனக்கலை விளங்குகின்றது.

இன்று புராணபடனத்தை படிப்பவர்களும் அதனைக் கேட்பவர்களும் எண்ணிக்கை குறைந்து கொண்டே செல்கின்றது. இக்கலையினுடைய சிறப்புக் காரணமாக இதனை புத்துயிர்ப்போடு பேணி சமயம் காட்டும் வாழ்வியல் ஒழுக்கச் சிறப்பை நாம் பேண வேண்டும். இதனால் புராண படனக் கலை எழுச்சியானது எங்கும் பரவும்.

(தொடர்ச்சி...

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

உயர்திரு: கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

நித்திய கடமைகளைத் தவறாது முடித்த பின்னரே விரத தினங்களில் விரத நியமங் களைப் பெரும்பாலும் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டியவனவாயினும் தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களில் வேறொருவரை நிய மித்து அவரைத் தமக்காகக் கடைப்பிடிக்கச் செய்யலாம். பெண்கள் கருவுற்றிருக்கும் வேளைகளிலும், பிரசவம் நிகழ்ந்த சில தினங்களிலும், நோயுற்ற வேளைகளிலும், தூய்மையற்ற வேளைகளிலும் வேறுயாரை யேனும் விரதங் கடைப்பிடிக்கும்படி நியமிக் கலாம். விரதகாலங்களில் செய்ய வேண்டிய வழிபாட்டினை மட்டும் ஏனையோர் இவ்வேளை களில் நிறைவேற்றுதற்குரியவர். இவ்வாறு நியமிப்பவர்தான் ஏனைய கட்டுப்பாடுகளைத் தாம் மேற்கொண்டு விரதநாட்களை அமைதி யாகக் கழிக்க கடப்பாடுடையவர்களாவர்.

விரதங்களுக்கு இன்றியமையாதது அவி. இது சமஸ்கிருதத்தில் ஹவிஸ் எனப்படும். இங்கு அவி அக்கினியிற் சொரி வதற்காக ஏற்பட்டதன்று. விரத காலத்தில் அமைக்கப்பட்ட திருவுருவத்திலோ, பிரதிமை யிலோ ஆவாகிக்கப்பட்ட தெய்வத்திற்கு நிவேதனம் செய்யவே இவ் அவி உரியது. விரதத்திற்கு வேண்டிய அவியை எவ்வாறு சமைத்தல் வேண்டும் என்பதனையும், இங்கு கொள்ளப்படத்தக்க தானியங்கள், சரக்குகள், காய்கறிகள் இன்னவை என்பதனையும் விரத விளக்கங் கூறும் நூல்கள் வரிசையாகத் தருகின்றன. இவ்வுணவானது பொரித்தல் - தாழிதஞ் செய்தல் முதலிய அம்சங்களைக் கொண்டு விரிவான முறையில் சமைக் கப்படாது சாதாரணமாகவே ஆக்கப்படுதல் வேண்டும் என்பது விதி. இவ்வவியின் சிறு பகுதியையே விரதங் கடைப்பிடிப்போர் ஈற்றில் உண்ணுவர். விரதங்களுட் பெரும்பாலானவை சைவ விரதங்களும் வைஷ்ணவ விரதங் களுமே. விநாயகருடன் தொடர்புகொண்ட விரதங் கள் மிகச்சில. எனினும் விரதங்களனைத்துமே விநாயக வழிபாட்டைத் தொடக்கமாக உடை யன. அக்கினி புராணம், விநாயக விரதத்தை விதந்து கூறுகிறது. பவிஷ்ய புராணம், சதுர்த்தி விரதத்தை விளக்குகிறது. கணேச புராணம் சதுர்த்தி விரதத்தையும் விசேடமாக சங்கடஹர சதுர்த்தியையும் குறிப்பிடுகின்றது. கந்தனுடன் தெடர்புடைய விரதம் கந்தசஷ்டி விரதம். உமையை குறித்துக் கடைப்பிடிக் கப்படுவது நவராத்திரி, மகாநவமி முதலிய விரதங்களாகும். சிவபெருமானுக்கு உரிய விரதங்களுள் மகாசிவராத்திரி தலைசிறந்தது. இரு வாரங்களுக்கு ஒருமுறை வரும் பிர தோஷ விரதமும் முக்கியமான விரதமே. சோமவார விரதம், சதுர்த்தசி விரதம், பாசுபத விரதம் ஆகியனவும் சைவ விரதங்களே. உமா மகேஸ்வர விரதம், கேதாரகௌரி விரதம் சிவனையும் உமையையும் குறித்துக் கொள்ளப்படுவன.

இற்றை நாளில் விரதங் கடைப்பிடிப் போர் இதுகாறும் கூறியவாறு உருவமைத்து விரிவாக வழிபட வசதியற்றவர்களானால் உரிய நியம நிஷ்டைகளை மட்டும் வீட்டில் கடைப்பிடித்துத் தம் விரதத்தை முடித்துக் கொள்வர். தாம் வீட்டில் நிகழ்த்த வேண்டிய பூசையினைத் தேவாலயங்களுக்குச் சென்று, அங்கு நிகழக்கண்டு தரிசித்துப் பின்னரே வீடு திரும்பி விரதங்களுக்கு உரிய உணவை மேற்கொள்வர். திருக்கோயில்களுக்கும் விரதங் களுக்கும் இவ்வாறு தொடர்பு தோன்றலாயிற்று.

இதன் விளைவாகவே, கோயில்களில் திரு விழாக் காலங்களில் கொடியேற்றம், தேர், தீரத்தம் முதலிய விசேட நிகழ்ச்சிகளை ஒட்டியும் மக்கள் விரதம் மேற்கொள்ளும் வழக்கந் தோன்றி நிலை பெறலாயிற்று.

**பூசை:-**

இதுகாறுங் கூறப்பட்ட யாகம் முதலிய வழிபடும் முறைகளிற் சிறந்த அம்சங்களை உறுப்புக்களாகக் கொண்டு பூசை என்னும் வழிபடும்-புது முறையொன்றும் உருவாயிற்று. விஷ்ணுவும், சிவபிரானும், பரிவார தெய்வங்களும் மக்களாற் பூசைசெய்து வழிபடப்படுகின்றனர். விஷ்ணுவுடனும் சிவனுடனும் தொடர்புபடுத்தப்படும் சூரியனும் இப்பூசை வழிபாட்டிற்குரியவனாகிறான். விநாயகரும், விஷ்ணுவும், சிவனும், சக்தியும், சூரியனும் ஒருங்கு வழிபடுவதைப் பஞ்சாயதன பூசை எனக் கிரியை நூல்கள் கூறுவன. இதிகாச புராணங்களில் விரித்துக் கூறப்படும் பூசைக்குப் பல பெயர்களுண்டு. உபாசனை, சபரியை, ஆராதனை, அருச்சனை என்பன இப் பெயர்களுட் சில. பூசைக்கு வேண்டிய பொருள்கள், பாத்திரங்கள் முதலியன பூஜோபகாரணங்கள் எனப்படுவன. பூ, சந்தனம், தூபம், தீபம் முதலியனவும் கண்ணாடி, குடை, விசிறி, சாமரை முதலிய உபசாரப் பொருட்களும் பூசைக்கு இன்றியமையாதன. பூசை முறையில் வேள்வியைப் போன்று கிரியைகள் விரிவடைய வாய்ப்பு உண்டு. பூசைக்கு நடுநாயகமாக விளங்குவது திருவுருவம். வைதிக மந்திரங்கள் பூசையிற் பிரயோகம் பெறுவன. அபிஷேகம் நிகழும்போதும், தீபாராதனை நிகழும் வேளையும், உபசாரங்கள் கொடுக்கப்படும் சமயத்திலும் வேதமந்திரங்கள் உரியவாறு ஓதப்படுகின்றன. இதுவே வைதிக அடிப்படையாகக் கொண்டு பூசை அமையுமாறு பூசையின் பெரும்விரிவு சிறப்புற்று ஓங்கி விரிந்த சிறப்பினைச் சைவத் திருக்கோயிற் கிரியைகளில் இன்று காண்கிறோம். வேதங்கள்போல் பொது நூலன்றிச் சிறப்பு நூல்களாக அமைந்து இறைவனை ஊர்த்துவ முகத்தினால் எடுத்துரைக்கப்பட்ட பெருமை வாய்ந்த ஆகமங்கள் கிரியைகளை விரிவாக விளக்கியுள்ளன. இவ்வாகமங்களுள் கிரியைகளைப் பற்றிய அளவில் முக்கியமானவை காரணாகமம், காமிகாகமம், சுப்பிரபேதம் முதலியன. இவை மூன்றுமே அச்சேறியுள்ளன. இவை தவிர்ந்த சில கைப்பிரதிகளாகவும் ஏட்டுச் சுவடி வடிவிலும் அங்கங்கே மறைந்து கிடக்கின்றன.

இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பிரிவுகளையுடையன. கிரியைபற்றி விரித்துக்கூறும் ஆகமங்களுட் சில கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என்னும் நான்கு பிரிவுகளாக வகுத்துக் கிரியை செய்ய வேண்டும் என்கிற முறையினை அழகாகக் கூறுகின்றன.

(தொடரும்...

**ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 27ஆவது குருபூசை தின நிகழ்வு 26.07.2012 வியாழக்கிழமை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளோடு பக்திபூர்வமாக இடம்பெற்றது.**

**அதன் பின்னர் ஆச்சிரமத்தில் நடைபெற்ற விசேட வழிபாட்டுடன் குருபூசை தின நிகழ்வுகள் நிறைவு பெற்றன.**



**ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய உற்சவத்தையொட்டி ஆச்சிரம மண்டபத்தில் 18.08.2012 சனிக்கிழமை தொடக்கம் 29.08.2012 புதன்கிழமை வரையான விசேட நிகழ்வுகள்**

**18.08.2012 சனிக்கிழமை (2ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

விடயம் :- "பஜனை"

வழங்குபவர் :- வடபிராந்திய சாயி சமித்தி அன்பர்கள்

**19.08.2012 ஞாயிற்றுக்கிழமை (3ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "உதித்தனன் உலகம் உய்ய"

வழங்குபவர் :- காரை M.P. அருளானந்தம் அவர்கள்

(ஆசிரியர் ஸ்ரான்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம்)

**20.08.2012 திங்கட்கிழமை (4ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "வேடனை விரட்டிய வேடன்"

வழங்குபவர் :- திரு K. கைலநாதன் அவர்கள்

(யா/ அராலி இந்துக் கல்லூரி)

**21.08.2012 செவ்வாய்க்கிழமை (5ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "இறை பணி நித்தன்"

வழங்குபவர் :- சைவப்புலவர் க. நித்தியதசீதரன் அவர்கள்

**22.08.2012 புதன்கிழமை (6ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஒரு திரு முருகன் வந்தான்"

வழங்குபவர் :- விரிவுரையாளர் ச. லலீசன் அவர்கள்

(கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

**23.08.2012 வியாழக்கிழமை (7ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "அடியார்க்கு நல்ல பெருமாள்"

வழங்குபவர் :- இரா கேதீசன் அவர்கள்

**24.08.2012 வெள்ளிக்கிழமை (8ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(விரிவுரையாளர் யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

**25.08.2012 சனிக்கிழமை (9ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "திருப்பெருவடிவம்"

வழங்குபவர் :- சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் அவர்கள்

(ஆசிரிய ஆலோசகர்)

**26.08.2012 ஞாயிற்றுக்கிழமை (10ம் திருவிழா) பூங்காவனம்**

**முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "நம்பினோர் கெடுவதில்லை"

வழங்குபவர் :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

(அதிபர்)

**27.08.2012 திங்கட்கிழமை (11ம் திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "மரணமில்லா வாழ்வு"

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல் அவர்கள்

**28.08.2012 செவ்வாய்க்கிழமை (12ம்திருவிழா) முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "பக்தி"

வழங்குபவர் :- சைவப்புலவர் சி. நவரத்தினம் அவர்கள்

(ஆசிரிய ஆலோசகர்)

**29.08.2012 புதன்கிழமை (13ம் திருவிழா சப்பறம்)**

**முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "மானிட வாழ்வை மாண்புறச் செய்வோம்"

வழங்குபவர் :- திரு ஐ. சண்முகலிங்கம் அவர்கள்

(இளைப்பாறிய ஆசிரியர்)

**30.08.2012 வியாழக்கிழமை தேர்த்திருவிழா**

**31.08.2012 வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழா**

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –

## தந்த சுத்தி

**59. எதனாலே தந்த சுத்தி செய்தல் வேண்டும்?**

சலத்தினாலே கழுவப்பட்ட பற் கொம்பினாலேனும் இலையினாலேனும் தந்த சுத்தி செய்தல் வேண்டும்.

**60. எந்தத் திக்கு முகமாக இருந்து தந்த சுத்தி செய்தல் வேண்டும்?**

கிழக்கு முகமாகவேனும், வடக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு தந்த சுத்தி செய்தல் வேண்டும்.

**61. தந்த சுத்தி எப்படி செய்தல் வேண்டும்?**

பல்லின் புறத்தேயும் உள்ளேயும் செவ்வையாகச் சுத்தி செய்து, ஒரு கழியை இரண்டாகப் பிளந்து, அவைகளினாலே நாக்கை வழித்து இடப்புறத்திலே போட்டுவிட்டு, சலம் வாயிற் கொண்டு பன்னிரண்டு தரம் இடப் புறத்திலே கொப்பளித்து, முகத்தையும் கை கால்களையும் கழுவல் வேண்டும்.

**62. நின்று கொண்டு ஆயினும், நடந்துகொண்டு ஆயினும் போர்த்துக் கொண்டு ஆயினும் தந்த சுத்தி பண்ணலாமா?**

பண்ணல் ஆகாது.

## ஸ்நானம்

**63. தந்த சுத்திக்குப் பின் யாது செய்யத் தக்கது?**

ஸ்நானஞ் செய்யத் தக்கது.

**64. ஸ்நானஞ் செய்யத்தக்க நீர்நிலைகள் யாவை?**

ஆறு, ஓடை குளம், கேணி, மடு முதலியவைகளாம்.

**65. ஸ்நானஞ் செய்யுமுன் யாது செய்தல் வேண்டும்?**

கௌபீனத்தைக் கசக்கிப் பிழிந்து தரித்து, இரண்டு கைகளையும் கழுவி, வேட்டியைத் தோய்த்து அலம்பித் தரித்து, உடம்பைச் சலத்தினாலே கழுவிச் செவ்வையாகத் தேய்த்துக் கொள்ளல் வேண்டும்.

**66. எவ் வளவினது ஆகிய சலத்திலே இறங்கி ஸ்நானஞ் செய்தல் வேண்டும்?**

கொப்பூழ் அளவினது ஆகிய சலத்திலே இறங்கி ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

**67. எந்தத் திக்கு முகமாக நின்று ஸ்நானஞ் செய்தல் வேண்டும்?**

நதியிலே ஆனால் அதற்கு எதிர்முகமாக நின்றும், குளம் முதலியவைகளிலே ஆனால் கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் நின்றும், ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

**68. சலத்திலே எப்படி முழுகல் வேண்டும்?**

ஆசமனஞ் செய்து, இரண்டு காதுகளையும் இரண்டு பெருவிரல்களினாலும், இரண்டு கண்களையும் இரண்டு சுட்டு விரல்களினாலும், இரண்டு நாசிகளையும் இரண்டு நடுவிரல்களினாலும் மூடிக் கொண்டு, சிவபெருமானைச் சிந்தித்து, முழுகல் வேண்டும்.

69. இப்படி முழுகின உடனே யாது செய்தல் வேண்டும்?

ஆசமனஞ் செய்து கொண்டு, கரையில் ஏறி, வேட்டியைப் பிழிந்து, தலையில் உள்ள ஈரத்தைத் துவட்டி, உடனே நெற்றியில் விபூதி தரித்து, உடம்பில் உள்ள ஈரத்தைத் துவட்டிக் குடுமியை முடிந்து, ஈரக் கௌபீனத்தைக் களைந்து, உலர்ந்த கௌபீனத்தைத் தரித்து, இரண்டு கைகளையும் கழுவி உலர்ந்த வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டு, ஈர வஸ்திரத்தையும் கௌபீனத்தையும் உலரும்படி கொடியிலே கோடல் வேண்டும்.

70. சிரம் (தலை) ஸ்நானம் செய்ய இயலாதவர் யாது செய்தல் வேண்டும்?

கண்ட ஸ்நானமேனும், கடி ஸ்நானமேனுஞ் செய்தல் வேண்டும்.(கண்டம்-கழுத்து; கடி- இடுப்பு)

71. கண்ட ஸ்நானம் ஆவது யாது?

சலத்தினாலே கழுத்தின் கீழே கழுவி, கழுவாத எஞ்சிய உடம்பை நனைத்த வஸ்த்திரத்தினாலே ஈரம் படும்படி துடைப்பது.

72. கடி ஸ்நானம் ஆவது யாது?

சலத்தினாலே அரையின் கீழே கழுவி, கழுவாது எஞ்சிய உடம்பை நனைந்த வஸ்த்திரத்தினாலே ஈரம் படும்படி துடைப்பது.

## அநுட்டானம்

73. ஸ்நானத்துக்குப் பின் யாது செய்தல் வேண்டும்?

சுத்த சலம் கொண்டு அநுட்டானம் பண்ணி, பஞ்சாஷர செபம் செய்து, தோத்திரம் பண்ணல் வேண்டும்.

## போசனம்

74.அதற்குப் பின் யாது செய்யத் தக்கது?

போசனம் செய்யத் தக்கது.

75. போசன பந்திக்கு யோக்கியர் ஆவார் யாவர்?

மது பானமும் மாமிச போசனமும் இல்லாதவராயும் சமசாதியாராயும், ஆசாரம் உடையவராயும் உள்ளவர்.

76. எவர்கள் இடத்திலே போசனம் பண்ணல் ஆகாது?

தாழ்ந்த சாதியார் இடத்திலும், கள்ளுக் குடிப்பவர் இடத்திலும், மாமிசம் புசிப்பவர் இடத்திலும், ஆசாரம் இல்லாதவர் இடத்திலும் போசனம் பண்ணல் ஆகாது.

77. இவர்கள் காணும்படி போசனம் பண்ணலாமா?

போசனம் பண்ணல் ஆகாது.

78. எவ்வகைப்பட்ட தானத்தில் இருந்து போசனம் பண்ணல் வேண்டும்?

கோமயத்தினாலே மெழுகப்பட்ட தானத்தில் இருந்து போசனம் பண்ணல் வேண்டும்.

79. போசனத்துக்குரிய பாத்திரங்கள் யாவை?

வாழையிலை, பலாவிலை, புன்னையிலை, பலாசிலை, முருக்கிலை, பாதிரியிலை, தாமரையிலை என்பனவைகளாம்.

80. போசன பாத்திரங்களை யாது செய்தபின் இடல் வேண்டும்?

சலத்தினாலே நன்றாகக் கழுவியபின் இடல் வேண்டும். (தொடரும்...

# நித்திய அன்னப்பணிக்கு உதவியுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| K.V. துரைசாமி (நினைவு) | | மயிலிட்டி | 1000. 00 |
| கந்தையா செல்லக்குமார் | குமாரசாமிவீதி, | புத்தூர் | 1500. 00 |
| சிவமயம் ஸ்கந்தமயம் | | சித்தங்கேணி | 500. 00 |
| அ. சங்கரலிங்கம் | | ஊரெழு | 2000. 00 |
| வனிதா சண்முகலிங்கம் ஆசிரியை | | அரியாலை | 5000. 00 |
| ஆ. செல்லையா முத்தம்மா | | கந்தர்மடம் | 5000. 00 |
| M.R. சந்திரகோபன் | அன்னசத்திரலேன் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| பிரபு பவானி | | அவுஸ்திரேலியா | 4000. 00 |
| இராசேந்திரம் யாழினி | | நல்லூர் | 2000. 00 |
| K. பாலேந்திரன் | | மண்டான் கிரேசர் | 5000. 00 |
| S. சுப்பிரமணியம் | | கொழும்பு | 2750. 00 |
| இராசரத்தினம் சுபாஸ்கரன் | | லண்டன் | 5000. 00 |
| திருமதி N.கனக சூரியன் | | உடுவில் (கனடா) | 10000. 00 |
| செ. நல்லையா | | அளவெட்டி | 1மூடைஅரிசி |
| S. சிவசேகரன் | | அல்வாய் வடமத்தி | 4000. 00 |
| P. அப்புத்துரை | | வசாவிளான் | 1000. 00 |
| M.மணிவண்ணன் | | கொழும்பு | 1மூடை அரிசி |
| சிறீரங்கன் என்ரபிறெஸ் | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K. கணேசலிங்கம் | | வெள்ளவத்தை | 3000. 00 |
| M. சிவாம்ஷன், வர்ஷன் | | தொண்டைமனாறு | 1000. 00 |
| சத்தியேந்திரன் குடும்பம் | | அச்செழு | 3புட்டி அரிசி |
| மகேந்திரன் குடும்பம் | | தம்பாலை (கனடா) | 25000. 00 |
| லிங்கேஸ்வரி சச்சிதானந்தம் | | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| கருணாமூர்த்தி ஐங்கரன் | | லண்டன் (இணுவில்) | 10மூடை அரிசி |
| சி. கந்தன் | | கரவெட்டி | 1000. 00 |
| கதிரித்தம்பி சிற்றம்பலம் குடும்பம் | | குப்பிளான் | 10000. 00 |
| ஆ. சிவநாதன் அதிபர் | | நெல்லியடி | 1000. 00 |
| R.T. சம்பந்தர் | | மலேசியா | 20000. 00 |
| கு. சசிகரன் | கே.கே.எஸ் றோட் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| வடிவேலு அனுஷரட்ணம் | | இடைக்காடு | 2000. 00 |
| தவமலர் சுரேந்திரநாதன் | | மயிலியதனை | 2000. 00 |
| திருமதி சின்னையா | | கரணவாய் | 3000. 00 |
| வ.க. சாம்பசிவம், சறோஜினிதேவி குடும்பம் | | யாழ்ப்பாணம் | 3000. 00 |

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீதரன் அருளானந்தம் | அல்வாய் | திக்கம் | 2000. 00 |
| கந்தவனம் கோணேஸ்வரன் | | திருகோணமலை | 4000. 00 |
| S. இரத்தினராசா | | காலி | 10000. 00 |
| வே. சிவபாதசுந்தரம் | வட்டு மேற்கு | வட்டுக்கோட்டை | 3000. 00 |
| அபிராம் அர்ச்சுன் | | நெதர்லண்ட் | 10000. 00 |
| க. அம்பலவாணன் | | தெகிவளை | 10000. 00 |
| P. சஞ்சயன் | | தெகிவளை | 4000. 00 |
| திருமதி S. நேசரத்தினம் | | லண்டன் | 10000. 00 |
| த. ஐயாத்துரை நினைவாக ஐயாத்துரை இரத்தினம்மாள் | | கனடா | 10000. 00 |
| மணிவண்ணன்- பாமதி குடும்பம் | | பத்தமேனி | 10000. 00 |
| ந. குமாரதாசன் | | கோப்பாய் | 6000. 00 |
| செ. உதயசந்திரன் | | அவுஸ்திரேலியா | 6000. 00 |
| திருமதி சகுந்தலாதேவி சத்தியபாலன் யாமாவளவு | | தெல்லிப்பளை | 1000. 00 |
| செ. லோகேஸ்வரன் | | தெல்லிப்பளை | 1000. 00 |
| சிவசண்முகநாதன் லிங்கேஸ்வரி சுதுமலை வடக்கு | | மானிப்பாய் | 1மூடை அரிசி |
| கெங்காதரன் தர்ஷிகா | | நீர்வேலி வடக்கு | 2000. 00 |
| பார்த்தீபன் குடும்பம் | சுதுமலை வடக்கு | மானிப்பாய் | 10000. 00 |
| E. கதிரேஸ்வரன் (S. பத்மநாதன் மூலம்) | | லண்டன் | 5000. 00 |
| கா. செல்லய்யா முத்தம்மா குடும்பம் | | கந்தர்மடம் | 3000. 00 |
| சாந்தி ரெக்ஸ் | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| V. ஆறுமுகசாமி | | லண்டன் | 10000.00 |
| S. குகப்பிரதாசன் | | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| ஸ்ரீகரன் ஆபிலாசா | | பிரான்ஸ் | 5000. 00 |
| சி. குமாரதாசன் ஆசிரியர் | | பத்தமேனி | 1000. 00 |
| பகீரதி | | பத்தமேனி | 1000. 00 |
| சின்னத்துரை செல்லம்மா | | சுதுமலை மேற்கு | 7000. 00 |
| பாலேந்திரா குடும்பம் | | தொண்டைமானாறு | 3000. 00 |
| குலசிங்கம் தயாளன் | | அச்சுவேலி | 5000. 00 |
| செந்தில்குமார் திருச்செல்வி குடும்பம் | | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திருமதி R. குலசிங்கம் | | கொழும்பு | 1000. 00 |
| மயில்வாகனம் அரியரத்தினம் | | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| சி. கர்ஷினி | பிறவுன்றோட் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சி. இராதாகாந்தன் | | வெள்ளவத்தை | 1000. 00 |
| திரு தவகுலசிங்கம் | | மல்லாகம் | 5000. 00 |
| S. கிருஸ்ணர் | | சுழிபுரம் | 2000. 00 |
| சி. துஸ்யந்தன் | நல்லூர் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| வேலுப்பிள்ளை நேசமலர் ஆசிரியர் | | உடுப்பிட்டி | 25800. 00 |
| சசிகரன் வனிதா | | நெல்லியடி | 1000. 00 |
| Dr. வைரமுத்து குடும்பம் | | இடைக்காடு | 4000. 00 |

(தொடரும்...

# மீண்டுமொரு நாவலர்போல் நானிலத்தில் வாழ்க

கவிமணி அன்னைதாசன் அவர்கள்



நெற்றியில் நிறைந்த நீறும் நித்தமும் பக்தித் தோற்றம்
பற்றினைச் சிவத்தில்வைத்து பலபல பணிகள் செய்தாய்
கற்றிடும் சிறார்க்கு நல்ல கல்வியை ஊட்டி இன்று
வெற்றிகள் பலகுவித்து விருப்புடன் ஓய்ந்தாய் வாழி!

நெற்றிக்குநேரே உம்மைப் புகழ்ந்தவர் பலரும் பின்னால்
சாற்றினர் பள்ளி நேரத்தை பாழாக்குகின்றாய் என்று
தூற்றிய அவரின் கூற்றைத் துண்டித்தாய் தொல்லையின்றி
ஆற்றிடு அரியபணி அவனியில் சைவம் ஓங்க

சமயப்பணி என்பது சாற்றுவது அல்ல என்றும்
செய்வதே என்பதற்கு சான்றுநீ ஆனாய் ஐயா
சிவபூமி ஈழமென்று திருமூலர் சொன்னார் அன்று
தவபூமி யாழே என்றும் வண்ணமாய் மாற்றிவிட்டாய்

சிவபூமி பாடசாலை சிவபூமி முதியோர் இல்லம்
சிவபூமி அறக்கட்டளை சிவபூமி உதவுங்கரங்கள்
சிவபூமி ஆய்வகம் சிவபூமி தொழிற்பேட்டையென
சிவபூமி நாமமோங்க தவ வாழ்வைத் தொடர்ந்து வாழ்க

தட்சணைக்கு ஒருலட்சம் தவிலுக்குப் பலலட்சம்
உற்சவச் செலவுக்கிங்கே ஒருகோடி ஆகுதையோ
இத்தனைக்கும் ஆலயத்தில் சுவாமிகாவ ஆட்களில்லை
புத்தியிலிடிக்கின்றதே புகல்வது யாரிடத்தில்

இதுபோன்ற செயல்கள் எம்மதத்தைச் சீரழிக்க
எது எம்மை வாழ வைக்கும் என்றாய்ந்து ஏற்றமுற
ஓய்ந்திருக்கும் உந்தன் நாளை உழைப்பாக்கி ஒன்றுகூட்டி
தேய்ந்திடாது எம்மதத்தை தேசத்தில் காத்து வாழ்க

பிரபலங்களின் பின்மட்டும் பீற்றியே நின்றிடாது
அனைவரையும் அரவணைத்து அவரவர்க்குத் தகுந்தவண்ணம்
அன்னை எம் தங்கம்மா ஆண்ட இவ்வாலயத்தை
பின்னைக்கும் பிறர்மதிக்கும் வண்ணமாய் நடாத்திவாழ்க

சைவப் பணிகளூடு சமூகப் பணிகளாற்றும்
சந்நிதியான் ஆச்சிரமப் பணிகளுடன் சேர்ந்துழைக்கும்
இந்நிலத்தில் சைவம் இனிதே வளர்வதற்கு
உன்னருள் சேவைதனை உழைப்பாக்கி வாழ்க வாழ்க

வலுவிழந்தோர்க்குப் பள்ளிஆக்கி வறியவர்க்குதவி செய்து
அரிவையர்க்கு அபயம்தந்து அநாதைகட்கும் அறிவூட்டி
பரிவுடன் முதியோர்களை பராமரிக்க இல்லம்தந்து
கரிசனை காட்டும் கர்ணா காலமெல்லாம் நீ வாழ்க

ஆண்டொரு நூறுகண்டு அவனியிலே வாழ்க
வேண்டுவன அத்தனையும் பெற்று நிதம் வாழ்க
ஆண்டவனின் சேவைசெய்து அனைவருக்கும் உதவி
மீண்டுமொரு நாவலர்போல் நானிலத்தில் வாழ்க

## குப்பிழான் மாதாஜியின் அன்பு வேண்டுகோள்

சைவமும் தமிழும் தழைத்து வளர்ந்து வரும் குப்பிழான் மண்ணில் காலத்தின் தேவையறிந்து திருமுறைகளைப் பேணிப் பாதுகாக்கவும் தியான அகண்ட நாமஜெப வழிபாட்டிற்காகவும் ஒரு மண்டபம் அமைக்க வேண்டிய அவசிய தேவை உள்ளது. இதனை மகான் காசிவாசி செந்திநாதையர் சிலைக்கு அருகாமையில் 30'–20' நீள அகலத்தில் அமைக்க விநாயகப்பெருமான் அருளால் எண்ணியுள்ளேன். இத்தெய்வத் திருப்பணிக்கு தங்களால் இயன்ற நிதி, பொருள் பங்களிப்பினை வழங்கி உதவுமாறு தங்களை இருகரம்கூப்பி வேண்டி நிற்கின்றேன். விநாயகப் பெருமான் திருமுறைகளைக் காட்டியவர் வேத வியாசர் பாரதம் பாட மேருமலையில் எழுதியவர்.

"சிறுதுளி பெரு வெள்ளம்"

கட்டிட வங்கிக் கணக்கு– விசாலாட்சி சின்னையா
இலங்கை வங்கி,
காங்கேசன்துறை.
இலக்கம்– 7577783
தொடர்பு முகவரி– ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி
சோதி விநாயகர் மடம்,
குப்பிழான்.
தொலைபேசி இல. 0750469276

இங்ஙனம்
மாதாஜி அம்மா,
குப்பிழான்.

# தனிப்பெருந் தமிழ்த்தெய்வம் முருகப்பெருமான் என்பதற்கான இலக்கிய வரலாற்றுச் சான்றாதாரங்கள்

(தொடர்ச்சி...

திரு கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்



**12 குமரக்கடவுள் சிற்பம்:**

வரலாற்றுப்பேரறிஞர் பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன் (2009) "நாயக்கர் கால சிற்பக்கலை" என்னும் கட்டுரையில் குமரக்கடவுள் சிற்பம் குறித்த செய்திகளை விவரித்துள்ளமை ஈண்டு மனங் கொள்ளத்தக்கது. "நான்கு கரங்கள் பொருந்திய சுப்பிரமணியக் கடவுளின் வடிவம் ஆயிரங்கால் மண்டபத்தில் அமைந்திருக் கின்றது. மயில்வாகனராகி அவர் காட்சியளிக்கிறார். பின் கரங் களில் சக்தி, வச்சிராயுதம் ஆகியவை அமைந்திருக்கின்றன. முன் வலக்கரம் அபயகரமாக அமைந்துள்ளது. முன் இடக்கரம் மயிலைப்பிடித்த கோலத்திலே தெரிகிறது. அஷ்ட சக்திமண்டலத் தில் அறுமுகக்கடவுளின் வடிவம் அமைந்திருக்கிறது. அதிலே பன்னிரண்டு கரங்கள் உள்ளன. மணி, அம்பு, வாள், சக்கரம், பாசம் ஆகியன வலக்கரங்களிலே அமைந்திருக்கின்றன. இடக்கரங் கள் வேல், வில், கேடயம், மலர், கோழி ஆகியவற்றைப் பிடித்த வண்ணமாய் உள்ளன. கோபுரங்கள் சிலவற்றிலும் குமரக்கடவுளின் உருவங்கள் காணப்படுகின்றன". (2005: 177)

விஜயநகரப்பேரரசு செஞ்சி, மதுரை தஞ்சைப்பகுதிகளில் முறையே 1526, 1529, 1532ஆம் ஆண்டுகளில் அரசப்பிரதிநிதிகளை நியமித்தது. இவர்கள் அந்தந்தப் பகுதிகளின் நாயக்கர்கள் எனப்பட்டனர். சுமார் நான்கு நூற்றாண்டு காலம் தென்னக வரலாற்றில் பெரும் சாதனைகளைப் புரிந்த விஜயநகரப்பேரரசர்களும், அவர்தம் அரசுப்பிரதிநிதிகளான நாயக்க மன்னர்களும் நாட்டு நிர்வாகத்தைத் திறம்பட நடத்த முயன்றனர். நாயக்க மன்னர்களது காலத்தில் முருகவழிபாடும், வணக்கத் தலங்களும் பெருநிலையை எய்தின.

**14. கந்தபுராண கலாசாரம்: சிவனே முருகன் முருகனே சிவன்:**

"தனிப்பெருந் தமிழ்த் தெய்வம் முருகப்பெருமானே" என்று நிறுவுவதற்கு இன்றும் தமிழ்மக்களுக்கும் தமிழாய்வாளர்களுக்கும், சைவத் தமிழபிமானிகளுக்கும் துணைபுரியும் மிகப்பெரிய புராண இலக்கியச் சான்று கந்தபுராணமாகும். பேராசிரியர் கலாநிதி மாரிமுத்து வேதநாதன் M.A, ph.d அவர்கள் எழுதும் கருத்துக்கள் வருமாறு:

"சைவப்பேரிலக்கியங்களுள் ஒன்றாகக் கருதப்படும் கந்தபுராணம் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த கச்சியப்பச் சிவாச்சாரியார் என்பவரால் கி.பி.14ஆம் நூற்றாண்டில் அருளப்பட்டதாக அறிஞர் கருதுகின்றனர். கந்தபுராணம் முருகக்கடவுளது பரத்துவத்தினையும், மகத்துவத்தினையும், முருகனது திருக்கோலச் சிறப்பினையும் சிறப்பாகச் சித்தரிக்கும். தமிழ் இலக்கியமாக மட்டுமன்றி சிவபரத்துவத்தினையும் மற்றும் சிவ வடிவங்கள் பற்றியும்

குறிப்பிடும் நூலாகவும் விளங்குவது குறிப் பிடத்தக்கதோர் அம்சமாகும். கச்சியப்பச் சிவாச்சாரியார், 'சிவனே முருகன்; முருகனே சிவன்' எனும் கருத்தைக் கந்தபுராணத்திற் பல இடங்களில் குறிப்பிடுகிறார். சிவனைப் பரம்பொருளாகக் கொண்ட சைவசித்தாந்த தத்துவ ஞானத்தை நிலைநிறுத்துவதே கச்சி யப்பசிவாச்சாரியாரின் உட்கிடை என்பதால், சிவனும் முருகனும் ஒருவரே என்று கூற வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டுள்ள தெனலாம். இதனால் கந்தபுராணத்தில் முருகனின் பல்வேறு திருக்கோலங்கள் சித்தரிக்கப்பட்டிருப்பதுடன் சிவவடிவங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. சிவவடிவங்கள் ஒவ்வொன்றும் சிவனின் தெய்வீகச் செயல் களையும் உயரிய தத்துவப் பொருள்களை யும் உணர்த்தி நிற்கின்றன. கந்தனின் மகத் துவத்தைக் கூறுவதையே பிரதான நோக்க மாகக் கொண்ட கந்தபுராணத்தில் சிவவடி வங்கள் பற்றிய பல செய்திகள் இடம்பெற் றிருப்பது கந்தபுராணத்திற்கேயுரிய தனிச் சிறப்பாகக் கருதமுடிகிறது" (டாக்டர் மா. வேதநாதன்) "கந்தபுராணம் காட்டும் சிவ வடிவங்கள்," விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும், (2010), பழனி ஆட்ஸ், கொழும்பு. பக். 177-184)

வீரசைவ வழிபாடும், பண்பாட்டு நடைமுறைகளும் முருகவழிபாட்டிலும், சிவ வழிபாட்டிலும் பின்னிப்பிணைந்தே காணப் படுவது தொன்றுதொட்டு நிகழும் நடைமுறை யாகும். மதுரை நாயக்கர் காலத்தில் சைவ சமயத்தில் அம்மன் வழிபாடும், முருகவழி பாடும், சிவ வழிபாடும் வளர்ச்சியடைந்தன. மதுரை மீனாட்சியம்மன் கோயில் சிறப்புற் றது. சிவன்புகழும், அம்மனின் புகழும் ஒருங்கே சைவ உலகிற்குப் பறைசாற்றிய தலமாக மதுரைக்கோயில் விளங்குகிறது.

கந்தபுராணம் சைவவழிபாட்டு மரபில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. அது சைவர்களுக்குப் பேரிதிகாசமாக விளங் கியது. சைவசித்தாந்த தத்துவக் கருத்துக் கள் செறிந்து காணப்படுகின்றன. கச்சியப்பச் சிவாச்சாரியாரைத் தொடர்ந்து சிவயோக நெறியில் பெருஞ்சித்திபெற்ற அருணகிரி நாதர் திருமுருகன் ஒருவரையே நாடும் நிய மம் கொண்டு "பரமபதி விரதநிலை" இது வென உலகிற்கு உணர்த்தியவர். அவர் முருகப் பெருமான்மீது பாடிய திருப்புகழ் சைவ உலகுக்குக் கிடைத்த அருட்கொடை யாகும். விஜயநகர நாயக்கர் காலத்திலே ஒரு பக்தியியக்கத்தை வழிநடாத்த இவ ருடைய திருப்புகழ்ச் சந்தப்பாடல்கள் வழி காட்டியாக அமைந்தன. மக்களுக்கு வீரத்தை- பராக்கிரமத்தை- தேவசேனாதி பதியென உணர்த்தும் வகையில் போர்த் தெய்வமாகக் கொண்டும், சிவனின் தோற்ற மாகக் கொண்டும் போற்றிப் பரவினர். அருணகிரிநாதர் பாடியருளிய கந்தரலங் காரம், கந்தரநுபூதி, கந்தரந்தாதி, திரு வகுப்பு, வேல் விருத்தம், மயில்விருத்தம், சேவல் விருத்தம் போன்ற பக்திப் பாடல் களும் முருகவழிபாட்டு எழுச்சி சைவசமயத் துடன் கலப்பதற்கு ஏதுவாக அமைந்தன.

கச்சியப்பருக்கு, "திகட சக்கரம்" என முருகனே அடியெடுத்துக் கொடுத்தான் என்று வழங்கப்பெற்ற செய்தியும், அரங் கேற்றத்தின்போது முருகன் நேரில் வருகை தந்து இலக்கணம் குறித்த வினாவுக்கு விடை யளித்தான் என்ற செய்தியும் முருக வழி பாட்டின்பால் மக்களைப் பெரு நம்பிக்கை கொள்ளச் செய்தன.

சிவனும் முருகனும் வேறல்ல என்ற கருத்தைப் பலவிடங்களிலும் வற்புறுத்திச் சென்று முருகனது தலைமையையும், முழு முதற் தன்மையையும் வெளிப்படும் வண ணம் கந்தபுராணத்தைப் படைத்து முருக வழிபாட்டில் மீண்டும் மறுமலர்ச்சி ஏற்படுத் திய பெருமை அக்காலத்தில் வாழ்ந்த

கச்சியப்பருக்கு உரியது". (நாச்சியப்பன், நா, திருப்பரங்குன்றம் கோயில், ப. 102)

"எத்துணைக்காலம் திருப்பித் திருப்பிப் படிக்கினும் கேட்பினும் எட்டுணையும் தெவிட்டாது. தித்தித்தமுதூறும் அத்தியற்புத அதிமதுரத் திவ்ய வாக்காகிய கந்தபுராணத்துள்ள பக்தியிலக்கணத் திருவிருத்தங்களைக் கேட்டல் சிந்தித்தல்களினால் இவர்கள் (யாழ்ப்பாணத்தவர்கள்) உள்ளத் தூற்றெடுத்த மெய்யுணர்வேயாம்" என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அறுதியிட்டுக் கூறுகின்றாரென எழுதுகிறார் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை. (பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கந்தபுராண கலாசாரம், -1959 வரலாறு.)

(தொடரும்...

# செல்வச் சந்நிதி முருகன்

## பல்லவி

**தொண்டைமா னாற்றங் கரையினில் அமர்ந்தான்**
**திருவருட் செல்வன் எங்கள் சந்நிதியான் முருகன்- தொண்டை**

## அனுபல்லவி

**தொண்டர் மனங்குளிரத் தோன்றாத் துணை நிற்பான்**
**தோகைமயில் ஏறிவலம் வருவான் அருள்தருவான்- தொண்டை**

## சரணம்

**அன்னம்பா லிக்கும்மடம் ஆயிரங் கண்டதலம்**
**இன்னம்பா லிக்கச் செய்தான் இவன்பேர் அன்னக் கந்தன்**
**பொன்னம்ப லத்திலாடும் பெருமானுக் குபதேசம்**
**சொன்னகுரு நாதனிவன் செல்வச்சந் நிதிமுருகன்- தொண்டை**

**ஆடிடுங் காவடிகள்; அளவில்லாப் பக்தர் கூட்டம்**
**கூடிடுங்; கரங்கள் கூப்பித் தொழுதிடும்; கண்ணீர்சிந்திப்**
**பாடிடும் மெய்மறந்து; பார்ப்பவர்தாமும் அன்பில்**
**நாடிடும் கந்தன் கோயில் செல்வச்சந் நிதியான் பாதம் - தொண்டை**

-நா. நல்லதம்பி-

# பெண் எனும் மகாசக்தி

திரு மூ. சிவலிங்கம் அவர்கள்

அண்டமெல்லாம் பரந்து வாழும் சகல உயிரினங்களையும் இயக்கிவைப்பவள் ஆதிபராசக்தி என்னும் மகாசக்தியே ஆகும்.

ஆதியில் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகிய மும்மூர்த்திகளையும் தோற்றுவித்தாள். "சக்தி இன்றேல் சிவம் இல்லை" என்னும் தத்துவங்களுக்கமைய மும்மூர்த்திகளுடன் தனது அம்சமான சரஸ்வதி, இலக்குமி, துர்க்கை, ஆகிய முத்தேவியரையும் இணைத்துச் செயற்படவைத்தாள். யாவும் சிறப்புடன் இயங்குகின்றன. இதனை "தேவி பாகவதம்" என்னும் புராணம் எமக்கு அறியத் தருகின்றது.

இப்பூவுலகின் கண்ணே சிவநெறி நன்கு பிரகாசிக்கவும் இந்த நெறியைத் தழுவோருக்கு வழிகாட்டவும் காலத்துக்குக் காலம் தோன்றிய தெய்வீக சக்தியரும் தெய்வீகமகளிரான பெண்களும் தமது ஆற்றலினால் நன்னெறிப்படுத்தினர். சக்தி தேவியரின் காலம் தொட்டு அண்மைக் காலம் வரை சிவநெறி காத்த பல சக்தி வடிவங்களை நோக்குவோம்.

## உலக மாதாவான சக்தியின் சேயோன் கந்தப் பெருமான்

ஆதியில் அசுரர்களான சூரனும் அவன் தம்பியரும் இறைவனிடம் வரங்கள் பல பெற்ற ஆணவத்தால் மூவுலகத்தையும் ஆண்டனர். அசுரர் ஆட்சியில் அனைவரும் துன்புறுத்தப்பட்டனர். அஞ்சிய முனிவர்களும் தேவர்களும் தமக்கு அபயமளிக்குமாறு இறைவனை வேண்டினர். அமரர் துயர்துடைக்கச் சிவபிரான் சித்தங் கொண்டார். அசுரர்களின் அகந்தையை அழிப்பதன் பேரில் ஒரு திருக்குமாரனைத் தோற்றுவிக்க எண்ணித் தமது நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகளை உகுத்தார். அப் பொறிகளை வாயு தேவன் கங்கையில் சேர்த்தான். அப்பொறிகளின் வெம்மை தாங்காத கங்கை அவற்றைச் சரவணப்பொய்கையில் விடுத்தாள். இறைவனின் திருவுளப்படி ஆறு தாமரை மலர்கள் மீது ஆறு பொறிகளும் அமைந்தன. அச்சமயம் அவ்விடத்தில் ஆறு கார்த்திகைப் பெண்கள் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டனர். தாமரை மலர்கள் மீதமைந்த ஆறு பொறிகளும் அழகிய மதலைகளாகக் காட்சியளித்தன. கார்த்திகைப் பெண்கள் அறுவரும் அந்த மதலைகளுக்குப் பாலூட்டிச் சீராட்டி அரவணைத்தனர்.

சரவணப் பொய்கையில் உதித்த மதலைகளைக் கண்டு மகிழவெண்ணிய உலக மகா சக்தியும் சிவபிரானும் அங்கு காட்சியளித்தனர். மதலைகளின் அழகும் பாசமும் மேலிட சக்தியவள் பேராவலுடன் அறுவரையும் ஒன்றாக வாரி எடுத்து அணைத்தாள். சக்தியின் கருணையால் இரு பாதங்களும் பன்னிருகரங்களும் கொண்ட ஓருடலில் ஆறு திரு முகங்களுடன் சண்முகப் பெருமான் காட்சியளித்தார். இந்த ஆறுமுக சேயோனுக்கு

"கந்தன்" எனப் பெயர் சூட்டினார். அம்மையும் அப்பனும் தமது சேயோனையும் அழைத்துக் கொண்டு சிவபுரஞ் சென்றனர்.

இறைவனின் திருவுளப்படி முருகன் அசுரரை அழிக்கப் புறப்படுகின்றார். அப்பன் நல்லாசி தந்தார். அன்னையவள் தமது சகல வல்லமைகளையும் ஒருங்கிணைந்த சக்தி வேலை முருகன் கையிற் தந்து சகல வெற்றிகளையும் பெற்றுவருமாறு வாழ்த்தியனுப்பினாள்.

தந்தையின் ஆசியுடன் அன்னையவள் தந்த சக்தி வேலும் துணை நிற்க கந்தன் அசுரர்களை வதஞ் செய்து மூவுலகையும் காத்தருளினார். பெற்றோர் கொடுத்தனுப்பிய பணியை நிறைவு செய்த கந்தன் தமது வெற்றிகளின் பின்னால் குன்று தோறாடி திருவிளையாடலில் மகிழ்வுற்றுப் பல அற்புதங்களையும் செய்தார். மேலும் ஆறு படை வீடுகளிலும் சிறப்பான புராண வரலாற்றினையும் படைத்தார். கந்தப் பெருமான் தனது திருவிளையாடல்களை யாவரும் அறியும் வண்ணம் தமது கதையை கச்சியப்ப சிவாச்சாரியார் மூலமாக கந்தபுராணம் என்னும் காவியமாகத் தோற்றுவித்தார்.

கந்தபுராண காவியத்தை படித்தறிந்த பக்தர்கள் தமது வாழ்வியலை கந்த புராண கலாச்சாரமாக ஏற்படுத்தினர். அன்று முதல் இன்று வரை கந்த புராண காவியத்தை ஆன்மீக தத்துவமாக, பட்டி தொட்டி எங்கும் புராண படனமாக ஓதியுணர்ந்து தம்மிடையே சிறப்பான சமய நெறியாக ஏற்றுள்ளனர். ஆறுமுகநாவலர் பெருமானால் யாழ் மண்ணில் அறிமுகப்படுத்தப்பட்ட இக்கந்தபுராணக் கலாசாரம் மிகக் கூடுதலாகக் கிராமங்களில் பேணப்படுகிறது. மகாசக்தியின் பேரருள்வாய்ந்த சக்திவேல் தன் பணியை ஏற்றதால் எம் மண்ணில்சிவநெறி மேலோங்க சக்தியின் இறையருள் பாலித்தது.

## உமையவள் ஞானப்பாலூட்டிய திருஞானசம்பந்தர்

இந்தியத் தமிழகத்தில் பிற சமயங்களினால் சைவ நெறி நலிவுற்றது. அக் காலத்தில் மகப்பேறு இல்லாது சீர்காழியில் வாழ்ந்த வேதியரான சிவபாத விருதயர் சைவம் வளர்க்க தனக்கொரு சற்புத்திரனைத் தந்தருளுமாறு இறைவனை வேண்டினார். இறையருள் தந்த நற்பிள்ளை வளர்பிறை போல வளரவும் இறையருள் கைகூட்டவும் தந்தையுடன் தமது மூன்றாம் வயதில் ஆலய தரிசனத்திற்குச் சென்றது. சீர்காழியில் தோணியப்பரின் ஆலய முன்றலில் அமைந்த திருக்குளத்தில் தந்தையார் நீராடுவதற்காக பிள்ளையைக் குளத்தின் படிக்கல்லில் இருத்திவிட்டு தம் பணியில் மூழ்கினார். தந்தையைக் காணாத பாலகன் ஆலய கோபுரத்தை நோக்கி "அம்மே அப்பா" என அழுதது. அழுகுரல் கேட்ட அம்மை அப்பன் சிறுவனை அணுகினர். அழுத பிள்ளைக்கு அன்னை பாலமுதாக ஞானத்தையும் கலந்து ஊட்டினாள். பிள்ளை அழுகையை மறந்து விளையாடியது அம்மையும் அப்பனும் மறைந்தருளினர். பிள்ளையின் தந்தை வந்ததும் பாலகனின் கடைவாயிலிருந்த பாலைக்கண்டு வெகுண்டார். சிறுதடி கொண்டு தண்டிக்கப் போனார். பிள்ளை ஆலய கோபுரத்தைக் காட்டி "தோடுடைய செவியன்" என்ற பாடலைப் பாடியது தந்தையும் ஏனையோரும் வியந்தனர். அவர் குறுநடை நடந்து ஆலயஞ் சென்று இறைவனைத் துதித்து "தோடுடையு செவியன்" என்னும் முதற் பாடல் அமைந்த பதிகத்தைப் பாடினார்.

சிவ சக்தியின் ஞானப்பால் உண்ட சம்பந்தமாக அப் பிள்ளைக்கு "திருஞானசம்பந்தர்" என்னும் திருநாமம் நிலைபெற்றது.மேலும் திருஞானசம்பந்தர் தமிழகத்திலுள்ள எல்லாச்

சிவாலயங்களுக்குஞ் சென்று தேவாரப் பதிகங்கள் பல பாடியும் பல அற்புதங்களைச் செய்தார். இவர் தனது பதினாறு வயதுவரை பல்லாயிரம் பாடல்களைப் பாடினார். தற்போது 374 பதிகங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. பன்னிரு திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளாக திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்கள் பொன்னேடுகளிற் பதிந்துள்ளன.

இச்சிறப்பினை எமக்கருளிய திருஞானசம்பந்தப் பெருமானுக்கு ஞானப்பாலூட்டிய மகாசக்தியான உமாதேவியாரைப் போற்றித் துதிப்போம்.

## அந்தாதி பாடவைத்த அபிராமி

திருக்கடவூரில் வாழ்ந்த பட்டர் என்பவர் சக்திஉபாசகர். சக்தியின் பக்தியில் மயங்கி இறை பித்தரானார். அன்னை அபிராமியின் ஆலயத்தில் அனவரதமும் பாடிப் பணிந்து இன்புற்றார். வெளியாரின் பார்வையில் இவர் பித்தராகக் காணப்பட்டார்.

பட்டர் அபிராமியை நோக்கிப் பாடிக் கொண்டிருந்த வேளை அபிராமியை வழிபட வந்த சரபோஜி மன்னன் பட்டரின் பாடல் இனிமையால் இன்புற்றார். அயலில் நின்றவர்களிடம் இவர் யாரெனக் கேட்டார். அவர்கள் இப்பாடகன் ஒரு பித்தன் என்றனர். மன்னன் பட்டரை அணுகி இன்று (அமாவாசை) என்ன திதி என்று கேட்டார். சக்தியின் அன்புக் கடலில் தன்னை மறந்து மூழ்கியிருந்தவர் "இன்று பூரணை" என்றார். மன்னனுக்கு அடுத்தவர்கள் கூறியது போல இவர் ஒரு பித்தரென உணர்ந்தார். உடனே பட்டரை நோக்கி இன்று மாலை பூரணை என்பதை நிருபிக்குமாறு பணித்துச் சென்றார்.

சிறிது நேரஞ் செல்லச் சுயநினைவுக்கு வந்த பட்டர் அரச கட்டளைக்கு அமையத் தமக்கு அருள் புரியுமாறு பிரார்த்தித்தார். மன்னரின் எற்பாட்டின்படி ஆலய முன்றலில் ஆழமான கிடங்கு வெட்டப்பட்டு அங்கு தீ மூட்டவும் உயரத்தில் ஓர் ஊஞ்சல் அமைத்து அதன் மீது பட்டரை ஏற்றி வைத்தனர். பட்டர் அவ்வூஞ்சலின் மீதிருந்து அபிராமியின் அந்தாதி பாடவும் நூறு இழைகளால் ஊஞ்சலை அமைக்கவும் வேண்டினார். அந்தாதி பாட ஆரம்பித்தார். ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ஒவ்வொரு இழை வெட்டப்படும். அன்னை புகழாக எழுபத்தெட்டுப் பாடல்கள் பாடினார். எழுபத்தொன்பதாவது பாடலில்

"விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்கு வழிகிடப்பப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்களே, செய்து பாழ் நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம்மோடு என்ன கூட்டு இனியே"

என்று பாடிய போது அன்னை அபிராமி தமது பக்தன் மீது கருணை கொண்டாள். தமது ஒரு காதணியை எடுத்து வானில் வீசித் தவழ விட்டாள். அன்னையின் புதுமையால் அமாவாசைச் சந்திரனில் பூரணை நிலா பிரகாசித்தது. யாவரும் வியந்தனர். பட்டர் தமது அந்தாதியைப் பாடி நிறைவு செய்தார். பட்டரின் பக்தியை மெச்சிய மன்னன் அவரை வணங்கிப் பெருமதிப்பளித்தார்.

அபிராமிப்பட்டரின் பக்தியும் அன்னை அபிராமியின் புகழும் ஓங்கியது. அபிராமி என்னும் மகாசக்தியின் கருணையை அறிந்தோம்.

(தொடரும்...

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருக்கண்டியூர்

-வல்லவையூர் அப்பாண்ணா-



பிரமனும் திருமாலும் அடிமுடி தேடிய வரலாறு அனைவரும் அறிந்த ஒன்று. பன்றி உருவெடுத்த திருமால் திருவடியைத் தேடியும், அன்னமாக மாறிய பிரம்மா திருமுடியைத் தேடியும் புறப்பட்டனர். பாதி வழியிலேயே தாழம்பூவைச் சந்தித்து பேசிக்கொண்ட ஒப்பந்தப்படி, பிரம்மா திருமுடிவரை வந்ததாக தாழம்பூ பொய்ச்சாட்சி சொன்னதால் தாழம்பூ சிவபூசைக்கு ஆகாமல் போனது. பொய் சொன்ன பிரமனுக்கு நடந்தது என்ன?

திருமாலின் நாபிக் கமலத்திலிருந்து வெளிவந்த போது தன்னைச் சுற்றி நான்கு திசைகளையும் நேர் மேலேயும் நிமிர்ந்து பார்த்ததால் பிரம்மாவுக்கு ஐந்து முகங்கள் தோன்றின. பொய் சொன்ன காரணத்தால் மேலே நீட்டிக்கொண்டிருந்த தலை (திருமுடியைத் தேடிப் போன போது மேலிருந்துகீழே வந்து கொண்டிருந்த தாழம்பூவை முதலில் சந்தித்த தலை இதுவாகத்தான் இருக்கும்) போய்விட்டது. பொய் சொன்ன பிரம்மாவின் ஒரு தலையை ஈசன் கொய்துவிட்டான். இதனை அப்பர் பெருமான் " பண்டு அங்கு அறுத்ததோர் கையுடையான் படைத்தான் தலையை" என்று பாடுகிறார். இவ்வாறு கண்டம் செய்த இடம் தான்(கண்டம் செய்தல் - துண்டித்தல், கொய்தல், எடுத்தல்) திருக்கண்டியூர்.

சிவனது அட்ட வீரட்ட தலங்களுள் (சிவனது வீரத் திருவிளையாடல்கள் நடைபெற்ற எட்டுத் திருத்தலங்களுள்) ஒன்றான திருக்கண்டியூர், தஞ்சை திருவையாறு சாலையில் தஞ்சையிலிருந்து 10 கி.மீ தூரத்திலும், திருவையாறிலிருந்து 3 கி.மீ தொலைவிலும் உள்ளது. தஞ்சை திருவையாறு கும்பகோணம் ஆகிய ஊர்களிலிருந்து அடிக்கடி திருக்கண்டியூர்

நோக்கிய சாலையில் பேருந்துகள் செல்கின்றன. கண்டனபுரம், வில்வவனம், வில்வேஸ்வரம் ஆகிய பெயர்களும் இத்தலத்துக்கு உண்டு.

கலகலப்பாக இருக்கின்ற பெரிய ஊர் திருக்கண்டியூர். ஊரின் நடுவில் காணப்படும் திருக்கண்டியூர் **"பிரம்மசிரகண்டீஸ்வரர்"** திருக்கோயில் மேற்குப் பார்த்தபடி உள்ளது. கம்பீரமாக எழுந்து நிற்கின்ற ஐந்து நிலை ராஜகோபுரம். கோபுரத்தை வணங்கி உள்ளே நுழைந்தால் பலிபீடம், கொடிமரம், நந்தி. கொடிமர விநாயகரை வழிபட்டுத் திரும்பினால் இடப்புறமாக பெரிய மண்டபம் நெருங்கிப்பார்த்தால் மண்டபத்துடன் கூடிய தனிக்கோயில் தெரிகிறது. இது தண்டபாணி தெய்வத்திற்கான சந்நிதி.

சப்தஸ்தானத் திருவிழாவான ஏழூர்ப் பெருவிழாவில் கண்டியூர் ஐந்தாவது (திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிக்குடி ... வரிசையில்) தலம். நந்தி தேவரின் திருமண வேளையில் அணிகலன்களும் ஆபரணங்களையும் அள்ளித்தந்து அசத்திய ஊரல்லவா இது! வரிசையாக ஊர் ஊராக வரும் சுவாமி ஊர்வலம் மேற்குறித்த தண்டபாணி மண்டபத்தில் தங்கிச் செல்லும். புறப்படும் வேளை (தொடர் பிரயாணத்திற்காக) "கண்டியூர் கட்டுச்சாதம்" கூடவே போகும். அதென்ன? கண்டியூர் கட்டுச்சாதம்... கண்டியூரில் தவம்செய்தவர்களில் முக்கியமானவர் சாதாதப முனிவர். பெரிய தவசீலர் இவர். தர்ம சாஸ்திரங்களில் சாதாதப தர்ம சாஸ்திரத்தைத் தந்தவர். முக்கியமான பதினெட்டு தர்ம சாஸ்திரத்தில் எக்காலத்தும் பொருந்தக்கூடிய விதிமுறைகள் பலவும் சாதாதபரின் தர்ம சாஸ்திரத்தில் உள்ளதாக கோயிற்குறிப்பு அவரைப்பற்றி மிகப் பெரிதாகக் கூறியுள்ளது. இந்த சாதாதப முனிவர், சிலாத முனிவருக்கு (சிலாத முனிவரை ஞாபகமில்லையா? அவர்தானுங்க... நந்திதேவரின் தந்தை) தமையனார். எனவே கல்யாண கோஷ்டி வரும் போது நந்தி தேவரின் பெரியப்பாவான சாதாதப முனிவர் வரவேற்று - தொடர் பயணத்திற்காக கட்டுச்சாதத்தையும் கட்டித்தந்து அனுப்புவதாக ஐதீகம்.

பிரகாரத்தில் தண்டாயுதபாணி சந்நிதிக்கு அருகில் தெற்குப் பார்த்தபடி அம்பாள் சந்நிதி. நின்ற திருக்கோலம். நான்கு திருக்கரங்கள் "மங்கள நாயகி" என்னும் பெயருக்கு ஏற்ப மங்களப் பொலிவு. அருள் தரும் அம்பிகையை வணங்கி உள்வாயிலைக் கடந்தால் வருவது உட்பிரகாரம். இடப்பக்கமாக வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர் தரிசனம். அடுத்தது மாகாலட்சுமி சந்நிதி. எதிரில் நடராஜர் சபை. வலமாகப் பிரகாரத்தை வலம் வந்தால் காலபைரவர் சந்நிதி, வரிசையாக சப்த விநாயகர்கள், அடுத்து சூரியன், தொடர்ந்து அமர்ந்த கோலத்தில் அர்த்தநாரீஸ்வரர். சண்டிகேசருக்கு தனிச் சந்நிதி உண்டு. தென்கிழக்கு மூலையில் உள்ள மடப்பள்ளியைத் தாண்டி நடந்தால் தென்மேற்கு மூலையில் வாகன மண்டபம்.

பிரகார வலத்தை நிறைவு செய்து மூலவர் சந்நிதி நோக்கித் திரும்புகிறோம். துவார பாலகர்களை வணங்கி உள்ளே சென்றால் சுவாமி சந்நிதியின் மகா மண்டபத்தை அடைகிறோம். இடப்பக்கத்தில் உள்ள நவக்கிரகங்களின் நடுவே சூரியன் மட்டும் தனது இரு மனைவியருடன்

வீற்றிருக்கிறார். உள்வாயிலுக்கு அருகிலேயே சாதாதப முனிவரும் அவருக்கு காட்சி தந்த காளத்தி நாதரும் எழுந்தருளியுள்ளனர். பிரதோசம் தோறும் திருக்காளத்தி சென்று வழிபடும் இயல்புடைய சாதாதப முனிவர், ஒரு முறை பிரதோஷத்தன்று அங்கு செல்ல முடியாது தவித்தார். அவருக்காகத் திருக்கண்டியூரிலேயே திருக்காளத்தி நாதர் தரிசனம் கொடுத்ததாக கோயிற்குறிப்புக் கூறுகிறது. அந்தக் காளத்திநாதரையே நாம் இங்கு தரிசிக்கிறோம். இவரை வணங்கி உட்பக்கம் திரும்பினால் இருபுறமும் துவார கணபதி மற்றும் துவார சுப்பிரமணியர் கருவறையில் கம்பீரமாக வீரட்டானேஸ்வரரான அருள்மிகு "பிரம்மசிரகண்டீஸ்வரர்" வீற்றிருக்கிறார். சுயம்பு மூர்த்தமான இச் சிவலிங்கத்தின் லிங்க பாணம் சற்றே உயரமானது. நிறைந்த அழகு கொஞ்சும் மூர்த்தம். வீரத் திருவிளையாடல் புரிந்ததால் இவர் வீரட்டேஸ்வரர். பிரமன் சிரம் கொய்ததால் பிரம்மசிரகண்டீஸ்வரர். பிரமன் மீண்டும் வலிமை பெற வழிபட்டு பேறடைந்ததால் பிரம்மநாதர். வில்வ வனத்தில் தோன்றியதால் ஆதிவில்வநாதர். எழில் தோற்றம் கொண்ட சுயம்பு நாதரைப் பணிந்து கரம்கூப்பி வணங்குகிறோம்.

கண்டியூர் வீரட்டானேஸ்வரரைப் பாடும் போது திருமாலும் பிரம்மனும் தேடிக் காண முடியாத அந்தத் திருவிளையாடலையே அப்பர் பெருமான் இவ்வாறு பாடுகிறார்.

வானவர் தானவர் வைகல் மலர்கொணர்ந்திட்டு இறைஞ்சி
தானவர் மால் பிரமன் அறியாத தகைமையினான்
ஆனவன் ஆதிபுராணன் அன்றோடிய பன்றியெய்த
கானவனைக் கண்டியூர் அண்டவாணர் தொழுகின்றதே

மாலும் பிரம்மாவும் அன்று தொழமுடியாத கண்டியூர் ஈசனை இன்று அனைவரும் தொழமுடிகிறதே என்று வியந்தாரே.... அந்த பிரம்மாவே கூட, சிவனாரை இங்கு தொழுகிறார் என்பது வியப்பானதாகும்.

மூலவரைத் தரிசித்தவுடன் ஒடுங்கிய ஒரு பக்கவாட்டு வழிமூலம் பார்க்கச் சொல்கிறார் அர்ச்சகர். அங்கே... பிரம்மா தனது நான்கு தலைகளுடனும் திருக்காட்சி கொடுக்கிறார். நான்கு திருமுகங்கள், கைகளில் மலர் மற்றும் ஜெபமாலை சகிதம் கூப்பிய கரங்களுடன் ஜொலிக்கும் அந்தப் பிரம்மரூபத்தின் அழகு அற்புதமானது. பொதுவாக எல்லாச் சிவன் கோயில்களிலும் கோஷ்ட மூர்த்தியாக பிரம்மா இருப்பதே வழமை. இங்கேயும் இருக்கக்கூடிய அதே வடக்குச் சுற்றில் தனிச் சந்நிதியில் தேவியான கலைமகளுடன் பொலிவாக, நிறைவாக வீற்றிருக்கும் அழகு ஆச்சரியமளிக்கிறது. அந்த சந்து வழியில் உள்ள ஒரு சிலை வடிவத்தை அர்ச்சகர் நமக்குக் காண்பிக்கிறார். அது சிவபெருமானுடைய வடுகக் கோலம் - பிரம்மாவின் தலையைக் கொய்வதற்காக எடுத்துக்கொண்ட வடுகக் கோலம் அது. வடுக நாதரையும் பிரம்மாவையும் வணங்கிவிட்டுத் திரும்புகிறோம். அடுத்து துர்க்கை சந்நிதி. மூலவரின் பின் கோஷ்டத்தில் லிங்கோத்பவர். தெற்குக் கோஷ்டத்தில் தெட்சணாமூர்த்தி.

சூரியனார் வழிபட்ட ஸ்தலம் என்பதால், இங்கு மாசி மாதம் 13 முதல் 15 ம் தேதி வரை சூரிய வழிபாட்டு விழா நடைபெறுகிறது. இந்த நாட்களில், மாலை 20 அல்லது 25

நிமிடங்களுக்கு (5.45 முதல் 6.10 வரை) சூரிய ஒளி இறைவன் மீது விழுகிறது என்கிற விபரத்தை கோயில் நிர்வாகஸ்தர்கள் அறியத்தந்தார்கள். ஆனாலும் அதனை நேரில் பார்க்கும் கொடுப்பனவு எமக்கு இருக்கவில்லை. " சீரமும் மாநிலம் வீழ்தரு மெய்ப்பதி" என அருணகிரிநாதர் போற்றிப்பாடிய திருக்கண்டியூரானை மனதில் நிறுத்தி, நமது அடுத்த திருக்கோயில் பயணத்தை தொடருகிறோம்.

ஏழூர்ப் பெருவிழா ஊர்வலம் இப்போது திருப்பூந்துருத்தி நோக்கிப் புறப்படத் தயாராகிவிட்டது. நந்தியெம்மானின் திருமண வேளையில் வண்டில் வண்டிலாக மலர்களையும் மலர் மாலைகளையும் கொண்டு வந்து சேர்த்த ஊரல்லவா திருப்பூந்துருத்தி நாமும் ஒருமுறை தரிசனம் செய்வோமே.....

"அடியராயினீர் சொல்லுமின்னறி கின்றிலேன் அரன் செய்கையைப்
படியெலாந் தொழுதேத்து கண்டியூர் வீரட்டத்துறை பான்மையான்
முடிவுமாய் முதலாயிவ் வையமுழுதுமாய் அழகாயதோர்
பொடியதோர் திருமார்பினிற்புரி நூலும் பூண்டெழு பொற்பதே."

-சம்பந்தர்-

## திருநீறு அணிவது எதற்காக?

குளியலைப்போலவே திருநீறணிவதும் அன்றாட வாழ்க்கையின் ஓர் முக்கிய பாகமாயிருந்தது முற்காலத்தில். முழு விசுவாசத்துடன் ஒரு சிட்டிகை திருநீறு எடுத்து நெற்றியில் வைத்தபின்னே பண்டைய பக்தர்கள் ஜெபத்துக்கு அமருவர். ஜெபத்தில் நம்பிக்கை நிறைந்திருப்பது போலவே திருநீறில் மருத்துவ குணங்கள் நிறைந்திருக்கின்றன.

சுத்தமான திருநீறு தயாரிக்கும் முறை காலப்போக்கில் மாற்றமடைந்த போதிலும் பழைய முறைகளை கடைப்பிடிப்பவர்களுமுண்டு. புல் மட்டும் அருந்தும் பசுவின் எருவை சிவராத்திரி அன்று உமியில் எரித்துக் கிடைக்கும் சாம்பலை தண்ணீரில் கலக்கி மறுபடியும் உலர வைத்து சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தபின் நெற்றியிலிடுவதற்காக பாதுகாத்து வைக்க வேண்டும். திருநீறை நனைத்தும் நனைக்காமலும் அணிவதுண்டு. திருநீறணிந்தால் உடலின் துர்நீரை உறிஞ்சி எடுப்பதற்கும், உடல் வெப்பத்தைக் குறைப்பதற்கும், உடல்நிலையை மேன்மையடையச் செய்வதற்கும் வாய்ப்புண்டு என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

தியாகத்தின் வடிவமான சிவபெருமானை மகிழ்விக்க மிகச்சிறந்தது திருநீறு அணிதல் என்று இந்துமதம் கருதியுள்ளது. நெற்றி, கழுத்து, தோள், மூட்டு முதலிய இடங்களில் திருநீறு அணிய வேண்டும் என்று பொதுவாகக் கூறுவதுண்டு. திருநீறை நனைத்து அணிவதன் மூலம் உடல் வெப்பம் குறைவதனால், ஜுரம் பாதித்தவர்களின் நெற்றியில் நனைந்த திருநீறு பூசினால் ஜுரம் இறங்குவதைக் காணலாம். மூலிகைச் செடிகளை சுத்தமான நெய்யில் ஹோமகுண்டத்தில் வேக வைத்தபின் எஞ்சியிருப்பதை திருவிபூதி என அழைப்பதுண்டு.

-ஓலைச்சுவடி-

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் கட்டுமானப் பணிக்கு மனமுவந்து நிதி அன்பளிப்புச் செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| ம. ஶ்ரீகாந்தன் குடும்பம் | அச்சுவேலி வடக்கு | 50000.00 |
| செல்வி அ. கந்தையாமூலம் | | |
| க. பாக்கியலெட்சுமி சேர்.பொன். இராமநாதன்வீதி யாழ்ப்பாணம் | | 30000.00 |
| செ. நவரெட்ணராஜா குடும்பம் (கப்பூது) | குப்பிளான் | 50000.00 |

# ஆவணிமாத வாராந்த நிகழ்வுகள்

03.08.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "நாளும் கோளும்"

வழங்குபவர் :- இரா கேதீசன் அவர்கள்

---

10.08.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "மனித விழுமியங்கள்"

வழங்குபவர் :- திரு ஐ. சண்முகலிங்கம் அவர்கள்

[இளை. ஆசிரியர்]

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

---

17.08.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "குருவாய் அருள்வாய் குகனே"

வழங்குபவர் :- சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்

---

24.08.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

30.08.2012 வியாழக்கிழமை தேர் உற்சவம்

31.08.2012 வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவம்

பதிவு இல. QD/22/NEWS/2012

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

